


# தினப்புயல்

THINAPPUYAL
තිනප්පුයල්
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0713594443. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் –411



## சிங்கள பேரினவாதிகளுக்கு எதிராக ஆயுத கட்சிகள் மீண்டும் போராடத்தயாராக வேண்டும் இல்லையேல் பௌத்த மயமாக்கலை தடுக்க முடியாது




## பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் ஒரு திறந்த சிறைச்சாலை




## இலங்கையின் பொருளாதாரமும், தொடரும் அரசியல் குழப்பங்களும்



# சிங்கள பேரினவாதிகளுக்கு எதிராக ஆயுத கட்சிகள் மீண்டும் போராடத்தயாராக வேண்டும் இல்லையேல் பௌத்த மயமாக்கலை தடுக்க முடியாது



மதவாதம், இனவாதம், தேசியவாதம் என்னும் பிரச்சனையை ஈழப்போர் முடிவுற்ற நிலையில் தற்பொழுது மிக வேகமாக மதவாத பிரச்சனைகள் இந்த நாட்டில் பரவிவருகின்றது. இதில் முக்கியமாக இந்தியா மதவாத பிரச்சனைகளை கையில் எடுத்து வேறு வழியின்றி தற்பொழுது இங்கு கட்டவிழ்த்துவிட்டிருக்கின்றது. ஏனென்றால் இலங்கை நாட்டிற்குள்ளே இவ்வாறான ஒரு குழப்பத்தை உருவாக்கிக்கொண்டிருக்க வேண்டும் என்பதிலே அதற்கு அஜந்தாவாக பல இந்து கிறிஸ்தவ அமைப்புக்கள் இங்கு கலவரத்தை உருவாக்குகின்ற வகையிலே அவர்கள் பணிபுரிகின்றார்கள். இங்கு இஸ்லாம், கிறிஸ்தவம், கத்தோலிக்கம், பௌத்தம் என நான்கு மதங்கள் இருக்கின்றன. இந்த நான்கு பிரதான மதங்களிலும் உண்மையிலே அனைவருமே அன்பை போதிக்கின்றார்கள். அந்த கடவுளினது நற்பண்புகளை போதிக்கின்றார்கள். ஆனால் இதை அரசியல் போராட்டத்திற்குள் கொண்டு வந்து மதவாதிகள் என அவர்களையும் இதற்குள் கோர்த்துவிட்டு இந்த பிரச்சனைகளை மீண்டும் பெரிதாக எடுத்துக்கொள்ளும் நிலைக்கு தற்பொழுது நாடு தள்ளப்பட்டிருக்கின்றது.

எனவே இந்துக்களை காப்பாற்ற வேண்டுமாக இருந்தால் இந்து சமய அமைப்புக்கள் ஒன்று திரண்டு பாராளுமன்றத்திற்கு முன்பாகவோ அல்லது திருக்கேதீஸ்வர வளைவிற்கு முன்பாகவோ அல்லது வெடுக்குநாரி மலைக்கு அண்மித்தோ உண்ணாவிரதங்கள் மற்றும் அகிம்சை ரீதியிலான போராட்டங்களைத் தான் செய்ய வேண்டும். ஏனென்றால் தற்போதைய காலகட்டத்தில் ஆயுதம் ஏந்தி போராடுவதற்கான வாய்ப்பு தற்பொழுது இல்லை. ஆனால் ஒரு காலத்தில் அடுத்த தலைமுறை அதனை கொண்டு செல்லலாம் காலம் அதற்கு பதில் சொல்ல வேண்டும். இந்த போராட்டத்திலே கிறிஸ்தவம் இஸ்லாம் என அனைத்துமே இருந்தார்கள். பல பல சாதனை தளபதிகள் அனைவரும் போராட்டத்தில் இருந்து இந்த மண்ணிற்காக கிட்டத்தட்ட 60 ஆயிரம் மாவீரர்கள் 2 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட இந்த மண்ணிலே தற்பொழுது இந்து, பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம் என்ற பிரச்சனை முடிவடைந்து தற்பொழுது இந்து என்ற பிரச்சனை உருவாகியிருக்கின்றது. இஸ்லாமினுடைய பிரச்சனை தற்பொழுது மீண்டும் கலை கட்டியிருக்கின்றது.

எனவே இன்று கிறிஸ்தவ மிசனரிகள் கூடுதலாக இங்கு வந்து மத போதனைகள் செய்வதற்காக வருகின்றார்கள். அதனை தற்பொழுது சிவசேனை அமைப்பினால் தடுத்து நிறுத்தப்படுகின்றது. இப்படி எல்லாம் பல்வேறுதரப்பட்ட பிரச்சனைகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றது. ஆனால் அதற்கு அரசாங்கம் ஒரு பக்கத்தில் அனுமதி கொடுத்துவிட்டு மறுபக்கத்திலே இவர்களுக்கு அனுமதி இல்லையென திருப்பி அனுப்புகின்றது. இந்நிலையில் கிறிஸ்தவர்களின் நாடுகளில் இருக்கக்கூடிய இந்து கோவில்கள் பள்ளிவாசல்கள் பௌத்த விகாரைகள் என அனைத்திற்கும் சகல நாடுகளிலும் அனுமதி கொடுத்திருக்கின்றார்கள். இந்த கிறிஸ்தவ நாடுகளுக்கு சென்ற அனைவரும் கிறிஸ்தவ பதிவுகளோடு இருக்கின்றார்கள். அது மட்டுமன்றி அங்கு அவர்களின் சலுகைகளை பெற்றுக்கொண்டிருக்கின்றார்கள். 30.40 வருடங்கள் இருந்து விட்டு மீண்டும் இங்கு வந்து ஒரு இனவாதம் மதவாதம் தேசியவாதம் பேசுகின்றார்கள். தற்பொழுது யுத்தம் நிறைவடைந்த இந்த காலப்பகுதியிலே இவர்கள் இந்த பேச்சுக்களை பேசுகின்றார்கள். இவர்கள் அனைவரும் யுத்தம் வெகுவாரியாக நடைபெற்றுக்கொண்டிருந்த உச்ச காலகட்டப் பகுதிகளிலே யாரும் வாய் திறக்கவும் இல்லை. யாரும் இந்த நாட்டிற்குள் வரவும் இல்லை அனைவரும் சொகுசு வாழ்க்கையை அனுபவித்தவர்கள் தான். விரல் விட்டு தற்பொழுது போராட்டங்களிலே இறங்கியிருப்பவர்கள் எவரும் ஆயும் ஏந்தவும் இல்லை ஆயுதம் ஏந்தி போராடவுமில்லை.

எனவே இவர்கள் தற்பொழுது ஒரு மதவாத பிரச்சனையை தூண்டி விட்டு பௌத்தத்திற்கு எதிராகவும் இஸ்லாமுக்கு எதிராகவும் கிறிஸ்தவத்திற்கு எதிராகவும் இந்துக்களுக்கு எதிராகவும் ஒரு அமைப்பு தற்பொழுது உருவாக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது. இது ஒரு மாறு வகையான விடயம் ஏனென்றால் அந்த காலகட்டங்களிலே இஸ்லாமியர்களுக்கு எதிராக இந்துக்களை ஏவி விட்டார்கள். அது கிழக்கு மாகாணத்திலே நடந்தது. கொக்கட்டிச் சோலை, கல்முனை போன்ற இடங்களில் நடந்தது இவையனைத்தும் மாறி மாறி வருகின்ற அரசாங்கங்கள் ஏவி விடுவது வழமை. தற்பொழுது ஏதோ ஒன்று திணிக்கப்படுகின்றது என்பது பூதாகரமான விடயமல்ல. சிவசேனை அமைப்பில் இருக்கின்ற ஒரு சிலர் மட்டும் தங்கள் இதயசித்தி உடன் பணிபுரிகின்றார்கள். ஆனால் எல்லோரும் சிவசேனை என்றும் **RSS** என்றும் கூறுகின்றார்கள். அதுமட்டுமன்றி இன்று கத்தோலிக்க திருச்சபையில் இருக்கின்ற அதி தீவிர பக்தர்கள் இன்று ஒரு மாற்றுவழியிலான அடுத்த நகர்வுகளை நகர்த்திக்கொண்டிருக்கின்றார்கள். அதுபோன்று பல கிறிஸ்தவ மிசனரிகள் இப்படி தமது மத போதகர்களை இங்கு சுயாதீனமாக போதிக்கவிடவில்லை என்ற ஆதங்கத்தில் இருக்கின்றார்கள். அதை ஒரு புறத்தில் வைத்து விட்டு இங்கு இந்த மதவாத பிரச்சனையையும் ஆயுத போராட்டத்தையும் ஒன்றாக நினைக்கக்கூடாது. ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப், ஈ.பி.டீ.பி, பிள்ளையான், கருணா என யாராகவும் இருக்கலாம். நீங்கள் இந்த அரசாங்கத்திற்கு எதிராக இன விடுதலைக்காக உங்களது அறவழியிலான போராட்டங்கள் அல்லது அரசிற்கு எதிராக ஆயுதம் ஏந்தி போராடுங்கள் அதை விட்டுவிட்டு உங்களது அரசியல் வைப்பு பிளைப்பிற்காக இந்த மதவாதிகளுடன் இணைந்து நீங்கள் இந்த போராட்டங்களில் கலந்து கொள்ளக்கூடாது. கிறிஸ்தவர்களுக்கு எதிராக இந்த வன்னி மண்ணில் அல்லது யாழ் மண்ணில் அல்லது கிழக்கில் அவ்வாறான பாகுபாடு பிரிவினை ஏற்படுத்தப்படுமாக இருந்தால் நிச்சயமாக இங்கு கிறிஸ்தவ மெஜீரிட்டி வாக்குகளால் வெல்லக்கூடிய சாத்தியம் கூடுதலாக இருக்கின்றது. எனவே அது இன்னுமொரு பிரச்சனையை இங்கு கொண்டு வரும்.

எனவே தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்கள் எந்த சாதியவாத அடிப்படையையும் அவர் கையாளவில்லை. எனவே அவர் தமிழீழம் தாயகம் தேசியம் சுயநிர்ணய உரிமைக்காக போரிட்டார் இறுதிவரையிலே இந்த சிங்கள பேரினவாதிகளுக்கு எதிராகத் தான் போரிட்டார். முதலில் சிங்கள பேரினவாதிகள் என்ன செய்கின்றார்கள் என்றால் இந்துக்களின் கோவில்களை உடைத்திருக்கின்றார்கள். பௌத்தர்கள் கிறிஸ்தவர்களின் கோவில்களை உடைத்திருக்கின்றார்கள். இந்துக்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையிலே பிரச்சனைகளை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். அதற்கான பதிவுகள் கூட இருக்கின்றன. ஏன் தமிழீழ விடுதலைப்புலிகள் அக்காலகட்டங்களில் புத்தர்களின் கோவில்களிலும் அதனை அண்மித்த பிரதேசங்களிலும் வெட்ட வேண்டும் சுட வேண்டும். இவர்களுடைய அட்டுழியங்களை தாங்க முடியாத காரணத்தினால் தான் விடுதலைப்புலிகள் அவ்வாறு செய்தார்கள். ஏனைய ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப் கூட இப்படித்தான் அந்த காலகட்டத்திலே சிங்கள பேரினவாதிகளுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொண்டது. எனவே தாயகம் தேசியம் சுயநிர்ணய உரிமை என்ற இந்த போராட்டத்தின் மையப் பகுதிகளை மறந்து விட்டு இங்கு மதவாத பிரச்சனைகள் இருப்பதாக காட்டி இங்கு இனப்படுகொலைகள் நடந்தமைக்கான ஆதாரங்களை நீங்கள் அழித்து விட்டு செல்வதற்காக அல்ல. மத நல்லிணக்கம் என்ற போர்வையிலே தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளையும் அநீதிகளையும் இல்லாது ஒழிக்கின்ற அடுத்த சக்கர நடவடிக்கைகளுக்காகத் தான் இந்த மதவாத அமைப்புக்கள் ஒரு பிரச்சனையை தூக்குகின்றன. அவர்கள் ஒருபக்கத்தில் தூக்கட்டும் மதப் போராட்டம் ஒரு பக்கத்தில் இடம் பெறட்டும் அதுபற்றி கவலை இல்லை. ஆனால் இந்த ஆயுதம் ஏந்தி தமிழர்களது விடுதலைக்காக போராடிய தமிழ் தரப்புக்கள் எவருமே இந்த போராட்டத்தில் கலந்து கொள்ளக்கூடாது கலந்து கொள்ள வேண்டிய தேவையும் உங்களுக்கு இல்லை. ஏனென்றால் இறுதியாக மதவாத பிரச்சனை முற்றி பாரிய ஒரு கட்டத்திற்கு செல்கின்ற பொழுது எந்த மதவாதிகளும் அரசியல்வாதிகளை நாட வேண்டிய கட்டம் வரும் அப்பொழுது உங்களது பதிலை நீங்களே கூறக்கூடிய ஒரு காலம் அதற்கு கனிந்து பதில் சொல்லும். தமிழீழ விடுதலைப்புலிகள் 58 கட்டமைப்புக்களை வைத்திருந்தது. கலை கலாச்சார கட்டமைப்புக்களுடன் மதவாதம் சம்பந்தமான பிரச்சனைகளையும் வைத்திருந்தது. ஆனால் தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் எவ்வளவோ பிரச்சனைகள் இருந்த பொழுதும் கிளிநொச்சி பிரதேசத்திலே பௌத்த ஆலயம் அங்கிருந்தது அதைவிட அரியாலையிலும் இருந்தது. அதை வணக்கஸ்தலத்திற்காக தமிழீழ விடுதலைப்புலிகள் விட்டிருந்தார்கள். எனவே ஒன்றை சிந்திக்க வேண்டும் என்னவென்றால் சிங்கள பேரினவாதிகளுடன் எங்களது போராட்டம் இன்னும் முடியவில்லை. எனவே இதுவொரு மதவாத பிரச்சனையை மேலோங்க வைத்து அரசியல்வாதிகள் ஆதாயத்தை தேடி மீண்டும் மீண்டும் பிரிவினை வாதத்தை உருவாக்குகின்ற சூழலைநீங்கள் உருவாக்காதீர்கள். இதனைத்தான் சிங்கள பேரினவாதம் ஏற்படுத்துகின்றது கருணா, பிள்ளையான் பிரிவினையை ஏற்படுத்தியது அதுபோன்று பிரபாகரனுடனான பிரிவை ஏற்படுத்தியது. இலகுவாக வெற்றி பெற்றார்கள் அது போன்று எமது தமிழின ஒற்றுமையை நாங்கள் மேற்கொண்டு செல்ல முடியுமாக இருந்தால் மட்டுமே நாங்கள் சிங்கள பேரினவாதிகளது பிடியில் இருந்து வெற்றிகொள்ள முடியும். மதவாத பரப்புக்களை ஏற்படுத்துபவர்களுக்கு சட்டம் என்ன கூறுகின்றதோ அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படத் தான் வேண்டும்.

திருக்கேதீஸ்வர வளைவை உடைத்தார்கள். மன்னார் மறை மாவட்ட ஆயர் 50 மீட்டருக்கு அப்பால் அதனை கட்டுங்கள் என்று கூறினார் அப்படி கட்ட முடியாது விட்டால் அதற்கு நாங்களும் தயாராகத் தான் இருக்கின்றோம் என்று கூறினார். அதன் பின் இரண்டு வருடங்களிற்கு பின் எவருமே சென்று அந்த வளைவை கட்டுவதற்கு முன் வரவில்லை. பலரும் இரகசியமான முறையிலே அங்கு அனுப்பப்பட்டார்கள். அங்கிருக்கின்ற நிர்வாகம் அதனை கட்டுவதற்கு ஒத்துக்கொள்ளவில்லை. அவர்களுடன் ஒத்து தான் நாங்கள் வாழ வேண்டும் என்ற ஒரு விடயம் இருக்கின்றது. எனவே சிவசேனை அமைப்பாக இருக்கலாம், 108 இந்து குருமாராக இருக்கலாம். இவர்கள் எல்லோரும் ஒன்றிணைந்து அங்கிருக்கின்ற நிர்வாகத்தினுடைய அலகினை மாற்றியமைப்பதன் ஊடாகவோ அல்லது அதை ஒரு பொதுவிடயமாக எடுத்து அந்த வளைவை கட்டுவதற்கு முன் சென்று ஒரு தியாக உணர்வை காண்பித்து அந்த வளைவை கட்டுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். இதே இரண்டு வருடங்களுக்கு முன் குருந்தூர் மலை வெறும் மண் மேடாக இருந்தது. அப்பொழுது வட மாகாண சபையிலே அமைச்சராக சிவனேசன் அவர்கள் இருந்தார். தொல்பொருள் ஆராய்ச்சி என்ற பெயரில் அதற்கான வளையங்கள் அங்கு வைக்கப்பட்டிருந்தது. அதனை வீடியோ எடுத்து காணொளியில் கூட நாங்கள் காட்டியிருக்கின்றோம். அதற்கு இரண்டு வருடங்களின் பின் எத்தனை அரசியல்வாதிகள் வந்து சென்றார்கள் ஏன் மத நல்லிணக்கத்திற்காக இருப்பவர்கள் அனைவரும் வெவ்வேறு கருத்துக்களை தெரிவித்தார்கள். அங்கு கோவில் கட்டப்படவில்லை, சூலம் உடைக்கப்படவில்லை இவ்வாறு நடக்கின்றது பௌத்த ஆலயம் அங்கே இருக்கவில்லை என்றெல்லாம் சொன்னார்கள். தற்பொழுது அங்கு சென்று பாருங்கள் பௌத்த கோவில் கட்டப்பட்டுவிட்டது இதனை உடைத்து எறிவதற்கான நடவடிக்கைகளை தமிழ் சமுதாயம் மேற்கொள்ள வேண்டும். ஏனென்றால் அங்கு அது புதிதாக கட்டப்பட்டுள்ளது. எனவே அது நிச்சயமாக தகர்த்து எறியப்பட வேண்டும். அதே போன்று நாவற்குழியில் கட்டப்பட்ட பௌத்த விகாரை தகர்த்து எறிய வேண்டும். திருக்கேதீஸ்வர வலைவை உடனடியாக கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எங்கெங்கு தமிழர்களது பிரதேசங்களில் 85 இடங்களை இவர்கள் அடையாளம் காட்டுகின்றார்களோ அது தமிழ் பௌத்தம் வாழ்ந்த இடம். எனவே இங்கு சிங்களவர்களுக்கு ஒரு அடியேனும் உரிமையில்லை. எனவே இதனை கருத்தில் கொண்டு இந்த மதவாத பிரச்சனைகளை மதவாதிகள் தவிர்ந்த அரசியல்வாதிகள் இதற்குள் உள்நுழைவதனால் உங்களது வாக்கு வங்கியினை தக்கவைப்பதற்கான நடவடிக்கைகளைத் தான் எடுக்க முடியும். இங்கு செல்வம் அடைக்கலநாதனும் சரி அல்லது சிவசக்தி ஆனந்தன் சரி அல்லது கஜேந்திரகுமார் பொன்னம்பலமோ, மாவை சேனாதிராஜா போன்ற வடக்கு கிழக்கில் இருக்கின்ற எந்தவொரு தமிழ் அரசியல்வாதிகளினாலும் கிறிஸ்தவத்திற்கு எதிரான எதிர்ப்பை ஏற்படுத்தி இவர்கள் அரசியலில் முன்னேற முடியாது அதற்காக அவர்கள் மௌனிகளாக இருந்தேயாக வேண்டும் என்பது நியதி. அதில் மாற்றுக்கருத்தில்லை இன்று இந்துக்களுக்கான தர்ம யுத்தம் ஒன்றை மறுபுறத்தில் அரசாங்கத்திற்கு எதிராக திருப்ப வேண்டும். இஸ்லாமை பார்த்தால் அவர்கள் ஒருகுடையின் கீழ் நின்று தமது மதத்திற்காக பிரச்சினை என்றால் உயிரை துச்சம் என நினைத்து அல்லாவிற்காக உயிரை மடிக்கவும் தயாராக இருக்கின்றார்கள். எத்தனை உயிர்களை அல்லாவிற்காக மடித்திருக்கின்றார்கள். அதில் அவர்களை பாராட்ட வேண்டும் அல்லாகோ அப்பர் என சொல்லி ஒருவரை கொன்றுவிட்டு தான் அவர் இறக்கின்றார். அவரது மதத்திற்காக. அப்படிப்பட்ட மத வைராக்கியம் பிடித்தவர்கள் தான் இந்த மத வர்க்கம் கொண்டவர்களை சரி கட்டுவதற்கான தருணமாக இருக்குமே தவிர இதற்குள்ளே தாயகம் தேசியம், சுயநிர்ணய உரிமையை இணைக்க வேண்டாம். அபிவிருத்தியை வேறு வழியால் கொண்டு செல்லுங்கள். மத போராட்டங்களை வேறு வழியில் கொண்டு செல்லுங்கள். சிங்கள பேரினவாதிகள் தமிழ் மக்களுக்கான உரிமை தருவதற்கான போராட்டங்களை முதலாவது முன்னெடுக்கும் பொழுது அனைத்து பிரச்சனைகளும் சரியாக அமையும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. சிங்கள பேரினவாதிகள் காலம் காலமாக தமிழ் மக்களின் பிரச்சனைகளில் வேறு வேறு வழியிலே கையாண்டார்கள். மத பிரச்சனையை தூண்டிவிட்டார்கள். இனப்பிரச்சனையை தூண்டிவிட்டார்கள். ஆயுத கட்சிகளுக்கு இடையே மோதல்களை உருவாக்கிவிட்டார்கள்.

ரெலோ தனியாக புளொட் தனியாக ஈபிடீபி ஈபிஆர்எல்எப் தனியாக என குழப்பங்களை உருவாக்கினார்கள். அப்பொழுது எல்லாம் இந்து தீவிரவாதிகளாக இருக்கக்கூடிய இந்து பக்தர்கள் அடியார்கள் எல்லோரும் எங்கே சென்றீர்கள். ஈழப்போரின் விடுதலைப் போராட்டத்தில் உங்களது பங்களிப்பு தான் என்ன எதுவுமே இல்லை கிறிஸ்தவ நாடுகளில் நீங்கள் அரசியல் தஞ்சம் என அடைக்கலம் புகுந்து விட்டு தற்பொழுது ஏப்பம் விடுவதற்காக இந்த நாட்டிற்கு வந்திருக்கின்றீர்கள். இலங்கையில் தமிழினம் வாழ்ந்த வரலாறு இருக்கின்றது. மகாநாமக்க தேரர் அந்த வரலாற்றை திருத்தி எழுதியிருக்கின்றார். எனவே அதனை நீங்கள் மாற்றுவதற்கான நடவடிக்கையை எடுக்கின்றீர்கள். பாடப் புத்தகத்திலே புகுத்தப்பட்டிருக்கின்ற சிங்களவர்களது வரலாறுகளை தூக்கி வீசுங்கள் இதனை எல்லாம் செய்யாது விட்டுவிட்டு இன்று தமிழினம் தமிழினத்திற்குள்ளே மோதிக் கொள்ளுவதற்கான ஒரு நடவடிக்கையை நீங்கள் மேற்கொள்வது என்பது ஏற்றுக்கொள்ளப்பட முடியாது. மதவாத பிரச்சனைகளை மதவாதிகளே பார்த்துக்கொள்ள வேண்டும். அரசியல்வாதிகள் சிங்கள பேரினவாத அரசிற்கு எதிராக ஜெனீவாவிலே பேச்சுக்கள் இருக்கின்றது எத்தனையோ விடயங்கள் இருக்கின்றது இனப்படுகொலை நடந்ததற்கான ஆதாரங்களை திரட்டிக்கொடுக்கலாம் அல்லது கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட 1 இலட்சத்து 40 ஆயிரம் பேர்களின் விபரங்களை திரட்டிக்கொடுக்கலாம். இனப்படுகொலைக்கான ஆவணங்களை வெளியிடலாம். இவ்வாறு எத்தனையோ பிரயோசனமான விடயங்கள் இருக்கின்றது அரசியல் செய்கின்ற அரசியல் அமைப்புக்களுக்கு. இந்துதுவவாதம் அல்லது கிறிஸ்தவ வாதம் என்பது மறுபுறம் இவை எல்லாம் சரி வருகின்ற பொழுது ஏனைய வாதங்கள் அனைத்தும் சரிவரும் நிலைமை தோற்றுவிக்கப்படும்.

இரணியன்

தினப்புயல்,
ஆசிரியர் பீடம்,
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை,
வவுனியா.

## தமிழ் அரசியல் பரப்பில் என்ன நடக்கின்றது

குறிப்பாக இன்றைய அரசியல் சூழ்நிலையில் வடகிழக்கிணைந்த தமிழர் தாயகம் என்ற ஒரு நிலைமை தற்பொழுது மாற்றப்பட்ட நிலையில் அந்த வடகிழக்கிணைந்த தமிழர் தாயகம் இணைக்கப்படுமா என்ற குழப்பத்தில் ஒரு சாரார் இருந்து கொண்டிருக்க மறுபக்கத்திலே சிங்கள பேரினவாதிகள் இந்த நாட்டை கூறுபோடுகின்ற ஒரு நிலைமையை தோற்றுவித்திருக்கின்றார்கள். அந்த அடிப்படையில் பார்க்கின்ற பொழுது இன்று குறிப்பாக மதவாதம் இனவாதம் தேசியவாதம் என்ற அடிப்படையிலே இந்த நாடு கூறு போடப்படுகின்றது. குறிப்பாக தொல்பொருள் ஆராய்ச்சி என்ற பெயரில் கூறுபோடப்படுகின்றது இனவாதம் என்ற பெயரிலும், மதவாதம் என்ற பெயரிலும், யாதிகவாதம் என்ற அடிப்படையிலும் கூறுபோடப்படுகின்றது. எனவே இவற்றை வைத்து தான் தற்பொழுது அரசியல்வாதிகளும் அரசியலை நடத்திக்கொண்டிருக்கின்றார்கள். மதம் சார்ந்த அரசியல் என்பது உண்மையிலே எல்லா நாடுகளிலுமே கூடுதலாக இருக்கின்றது. என்றாலும் அந்த மதம் சார்ந்த அரசியல் எங்கு தலையீடு இடம்பெறுகின்றதோ அந்த நாடுகள் எல்லாம் குட்டிச்சுவராகிப்போன கதைகள் தான் ஏராளம் இருக்கின்றது.

எனவே இந்த நிலையை மாற்றியமைப்பதற்கு தமிழீழ விடுதலைப்புலிகள் பெரிதும் பாடுபட்ட பொழுதிலும் ஆனால் அது இறுதியில் கைகூடவில்லை. சாதி ஒழிக்க வேண்டும் ஆண் சாதி பெண் சாதி என்ற இரண்டு சாதிகள் மட்டுமே இருக்க வேண்டும் என்ற அடிப்படையை முன்வைத்து அவர்கள் எடுத்த திட்டங்கள் அனைத்தும் இறுதியில் தோல்வியில் முடிவடைந்தது. சாதி விட்டு சாதி திருமணங்கள் இடம்பெற்ற நிலையிலும் அதே நபர்கள் தற்பொழுது வேறு நபர்களை திருமணம் செய்திருக்கின்ற ஒரு நிலைப்பாடும் தற்பொழுது தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றது இது ஒருபுறம் பிரச்சனைகள் நடந்துகொண்டிருக்க இந்துக் கோவில்களிலே குறிப்பாக சாதி குறைந்தவர்கள் மூலஸ்தான வழிபாட்டிற்கு வரக்கூடாது அல்லது அங்கு தேவாரம் பாடக்கூடாது திருவாசகம் பாடக்கூடாது என்றவொரு நிலைப்பாட்டை சாதியவாத அடிப்படைவாதிகள் கையாளுவதால் தாழ்த்தப்பட்ட சாதிகளாக கருதப்படுபவர்கள் கிறிஸ்தவ ஆலயத்திற்கு செல்லும் சூழல் ஏற்படுகின்றது. இவ்வாறு இருபுறமிருக்க மறுபக்கத்தில் இனவாதிகளின் இன ஆக்கிரமிப்பு என்பது தொடர்ந்து செல்கின்றது. இந்த இன ஆக்கிரமிப்பை நாம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தால் மட்டுமே ஏனைய விடயங்களை நாங்கள் கடந்து செல்ல முடியும்.

அதாவது தமிழ் மக்களுக்கான ஒரு தமிழர் தாயக பிரதேசம் அற்றுப்போன ஒரு நிலையிலே தற்பொழுது இந்த கட்டாய மத திணிப்பு அல்லது மத மாற்றம் போன்ற விடயங்கள் இடம்பெறுகின்றது. அது மட்டுமன்றி தொல்பொருள் பெயரில் காணிகள் சுவீகரிப்பு இடம்பெறுகின்றது. ஒட்டுமொத்தத்தில் இவற்றுக்கான தீர்வை நாம் பெற்றுக்கொள்ள வேண்டுமாக இருந்தால் அதை எவ்வாறு கையாளுவது என தெளிவாக சிந்திப்போமாக இருந்தால் வடகிழக்கிணைந்த தமிழர் தாயகத்திலே தமிழ் பேசும் மக்களுக்கான ஒரு தனி அலகை உருவாக்கி அங்கு சட்டங்களை இயற்றி அதன் ஊடாகத் தான் இந்த இனவாத பிரச்சனைகளுக்கு மட்டுமல்ல மதவாதம் தேசியவாதம் போன்ற பிரச்சனைகளுக்கு தீர்வினை காணமுடியும். அல்லது இன்று மத்திய அரசிடம் இருந்து வருகின்ற பல தீர்மானங்களின் அடிப்படையில் தான் ஏனைய மாவட்டங்களும் இயங்க வேண்டிய சூழல் ஒன்று உருவாகியிருக்கின்றது.

எனவே எது எவ்வாறிருப்பினும் இன்றைய கால சூழ்நிலை என்பது காலச்சக்கரம் என்பது வெகு வேகமாக ஓடிக்கொண்டிருக்கின்றது. டிஜிட்டல் யுகத்திலே நாம் வாழ்ந்துகொண்டிருக்கின்ற இந்த காலகட்டத்திலே ஒரு மனித நேயப் பண்புகளை உருவாக்குகின்ற நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள வேண்டும் அப்பொழுது தான் இந்த நாடு ஒரு சுபீட்சமான நிலையை சந்திக்கும். மீளவும் ஒரு ஆயுதப் போராட்டம் என்பது தற்போதைய காலகட்டத்தில் சாத்தியம் இல்லாத ஒன்றாக இருக்கின்ற பொழுது ஒரு வேளை இந்த நவீன யுகத்திலே அடுத்த தலைமுறை தமிழினத்திற்கு எதிரான அடக்கு முறைகளுக்கு எதிரான நடவடிக்கைகளை முன்கொண்டு செல்கின்ற ஒரு நிலைமை தோற்றுவிக்கப்படும் என்ற வெளிப்பாடும் தற்பொழுது உருவாகிக்கொண்டு வருகின்றது. எனவே அரசாங்கம் உடனடியாக இந்த மதவாதம் தேசியவாதம் இனவாதம் போன்ற பிரச்சனைகளுக்கு துரித கதியில் தீர்வு காண வேண்டும். துரித கதியில் தீர்வு காணுகின்றோம் என்ற நோக்கில் அதனை கட்டுப்படுத்த வேண்டும் என்ற தோரணையில் பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு மேலாக இன்னொரு சட்டத்தை கொண்டு வந்து அதனை தமிழர் தாயக பகுதியில் பயன்படுத்துவதற்கு திட்டம் தீட்டி வருகின்றது.

எனவே இதற்கு எதிராக எமது அகிம்சை ரீதியிலான போராட்டத்தை முன்னெடுத்து தமிழ் அரசியல் தலைமைகள் செயற்பட வேண்டுமே தவிர சாதியவாதம் மதவாதம் அதற்கு பின்னர் அதனை கையாளுவது என்பது சாத்தியப்படும். அதனையும் இதனையும் சேர்த்து குழப்புவதன் ஊடாக இதிலே சிங்கள பேரினவாதிகள் தமக்கு சாதகமாக இந்த போராட்டத்தை கையாண்டு தமிழினத்தின் இந்த விடுதலை உணர்வை கொச்சைப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றார்கள். எனவே எமது நடவடிக்கைகள் அனைத்தும் ஒரு குடையின் கீழ் இணைந்து தமிழர் தாயகத்தை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கையாக அமைய வேண்டும்.

# கல்லறைப் பூக்கள்






## பல்துறை எழுத்தாளர் புயல் பெ.ஸ்ரீகந்தநேஷன்

ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கை தொடங்கியதும் மாங்குளத்தில் வாழ்ந்த மக்கள் எல்லாம் இடம் பெயர்ந்து பலதிக்குளில் சென்றனர்.

இராசலட்சுமி தனது மூன்று பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு எங்கு போவது என்று தெரியாமல் நின்றவேளை ஷெல் ஒன்று கூவிக்கொண்டு வந்து அவர்களின் ஆட்டுப்பட்டியில் வீழந்து வெடித்துத்தான் தெரியும் மே...மே....என்று சத்தம் வயிற்றுக்குள் இருந்த ஆட்டுக்குட்டி பாதி மாதத்திலேயே செத்து வெளியில் வந்நது தாய் ஆட்டின் உடல் இரண்டாகப் பிரிந்தது.

அந்த நேரத்தில்

பக்கத்து வீட்டு இராசாத்தியக்கா அடியேய் இராசலட்சுமி நாங்க மடுவாள வவுனியாப் போகப்போறம் நீயும் வாரியா?

வேறு வழி தெரியாமல் தனது மூன்று பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு எந்தவிதமான வீட்டுப் பொருட்களுடன் எடுக்காமல் பயணமாகிவிட்டாள்.

எப்படியோ தனது தகப்பனினதும் கணவனினதும் படத்தை எடுத்துக் கொண்டாள்.

இரவு இரவு நடந்து சென்று இவர்கள் அதிகாலை ஒரு இராணுவ முகாமினைச் சென்றடைந்தனர். இவர்களுடன் இருபது குடும்பம் சென்றது. அங்கு அனைவரையும் சோதனை செய்த பின்னரே வவுனியாவுக்கு அனுப்பி வைத்தனர். பெரிய லொறியில் ஏற்றி அனைவரையும் வவுனியா பூந்தோட்டம் அகதிமுகாமில் இறக்கிவிட்டனர்.

அங்கு சென்றதும் திருமணமாகாத ஆண்கள், பெண்கள், திருமணமாண ஆண்கள் பெண்கள் என தரம் பிரித்து பொலிஸ் அட்டையில் பதித்தனர்.

யாறும் வெளியால போவதுன நமக்கட்ட பாசு எடுத்துப்புட்டு போவேணும் என்று கூறினான், ஒரு பொலிஸ் அதிகாரி.

அதுவரை இவர்களுக்கு பாஸ் என்றால் என்னவென்று தெரியாது.

பின்னர் வந்த இருபது குடும்பத்தையும் ஒரு மண்டபத்தைக் காட்டி அதில் இருக்கச் சொன்னாங்கள்.

மண்டபமோ சாட்டுக்காக நிலத்துக்கு மட்டும் சிமெண்ட் பூசியிருந்தன. ஆனால் ஏனையவை எல்லாம் துப்பரவு இல்லாத மாட்டுப்பட்டி போல இருந்தது. ஒரு கணம் கண்களை அங்குமிங்கும் திருப்பித் திருப்பிப் பார்க்கின்றாள். குழாய் கிணற்றில் தண்ணீர் எடுப்பதற்கு ஓரளவு பொருந்தும். இதே நிலைதான் மலசலகூடத்திலும். இது எவ்வளவு சாத்தியமாகும்.

இன்னுமொருபக்கம் செத்தவீடு, வேறு ஒரு பக்கம் கலியாணவீடு, இன்னுமொரு பக்கம் பிறந்தநாள் வீடு, பிரிதொருபக்கம் சாமத்திய வீடு, இன்னுமொரு பக்கம் ஒரு நாள் கொப்பிப்பாஸ்சுக்கு சனக்கூட்டம். இன்னுமொரு பக்கம் எதிர்காலம் பற்றிய எந்த விதமான சிந்தனையும் இல்லாத இளைஞர்களின் ஆட்டமும், பாட்டமும். இன்னுமொரு பக்கம் ஏதோ வாழக்கையை வெறுத்தினைப் போல சில ஜீவன்கள் கூட்டம் கூட்டமாக இருந்து புதிதாக வந்திறங்கிய எங்களைப் பார்த்து இரகசியம் கதைக்கின்றனர். இன்னுமொரு பக்கம் குடும்பப் பிரச்சனை, காதல் பிரச்சனை, வேறொரு பக்கம் காதால் கேட்க முடியாத உரத்த பேச்சுக்கள். முறையற்ற திருமணங்கள், பாலியல் தொடர்புகள் இவற்றையெல்லாம் பார்த்ததும் பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு திரும்பவும் மாங்குளத்துக்கே ஓடி விட்டால் என்ன என்று அவள் மனம் நினைத்தது.

எப்படியோ ஒரு வருடம் அகதிமுகாமில் வாழ்க்கை சென்று விட்டது. நிரோஜாவும் அங்கு சென்றதும் விஜயன் என்பவனைக் காதலித்துத் திருமணம் செய்துவிட்டாள். போகப்போகத்தான் தெரிந்தது அவன் கசிப்பு அடி மன்னன் என்று எவ்வளவோ முயன்றும் நிரோஜாவினால் விஜயனைத் திருத்த முடியவில்லை. அவளின் வாழ்க்கையும் அதோகெதிதான் நிரோஜா இப்போதெல்லாம் ஒரு கையில் குழந்தையுடன் முகாமின் கூட்டத்துடன் தானும் அமர்ந்திருப்பாள். விஜயன் குடிமட்டுமல்லாமல் வேறு பல பெண்களுடனும் தொடர்பு வைத்திருந்தான். அங்கு முகாம் காவலுக்கு இருந்த பொலிஸ் இதையெல்லாம் கண்டும் காணாதமாதிரி இருந்தது. இது தமிழ் சமூகம் அல்லவா?

ஒருதினம்

ஏய் ஓடு ஏய் ஓடு..... என்று முகாமில் இருந்த அனைத்து மக்களையும் பொலீஸார் அடித்துக் கலைத்தனர். இராசலட்சுமியுடன் வந்தவர்களுக்கு என்னத்துக்கு என்று தெரியாமல் திகைத்தனர். புள்ளங்கள எல்லாத்தையும் எங்கைடீயப போகச் சொல்லுறாங்க பொலிஸ் இந்த கலைக்கிறாங்க வா போவம்... என்று தனது இரண்டு மகன்மாரையும் கூட்டிக்கொண்டு வெளியில் சென்றாள், இராசலட்சுமி.

வவுனியா பூந்தோட்ட முகாமில் ஆறுமாதத்திற்கு ஒருக்காவோ, ஒரு வருடத்துக்கு ஒருக்காவோ இராணுவ சுற்றிவளைப்பு நடக்கும் என்று இவர்களுக்கு அதுவரை தெரியாது. யாரும் சொன்னதுமில்லை. இதுவே அவர்களின் முதல் அநுபவம்.

உச்சிவெயிலில் அனைவரையும் நிக்க வைத்தனர். சிறிது நேரத்தில் ஆண்கள் வேறு பெண்கள் வேறாக பிரித்தனர். திடீரென்று ஒரு லொறியில் வந்த இராணுவமும் தலையாட்டியும் ஒவ்வொருவராக முன்னால் செல்லும் படி கூறினர்.

அனைவரும் சென்றுவிட்டார்கள். ராமைப்பார்த்து தலையாட்டி தலையாட்டியதும் எதுவும் அறியாத அப்பாவி ராம் கைது செய்யப்பட்டான். அடியும் உதையும் மாறி மாறி விழுகின்றது. இதைக்கண்ட இராசலட்சுமி ஓடி வந்தாள். ராம் லொறியில் ஏற்றப்பட்டு கண்கட்டிக்கொண்டு செல்லப்பட்டான். அவனுக்கு என்ன நடந்தது என்றும் இன்றுமே தெரியவில்லை. அப்போது எங்கே போனது வெளிநாட்டு நிறுவனங்கள்?.



சுற்றி இருந்த சனக்கூட்டம் மெதுவாகக் கலைகின்றது. இவளோ மயக்க மருந்து ஏற்றியவளைப் போல வார்த்தைகளைத் தடுமாறிக் கதைக்கின்றாள்.

அலெக்ஸ் மெதுவாக இராசலட்சுமியின் அருகில் வருகிறான். நிரோஜா இதையெல்லாம் கண்டு மயங்கி மயங்கி சுய அறிவில்லாமல் கிடந்தாள்.

அம்மா, ஏதோ ஒரு கால் சொத்தியாக பொறந்ததால என்ன விட்டு வைச்சாங்க. இல்லாட்டி எம்மா அண்ணாவுக்கு நடந்த கதிதான் யெனக்கும்... என்றான் அலெக்ஸ்.

இப்போது சமாதான ஒப்பந்தம் வந்து அவரவர் தங்கட வீடுகளுக்கு திரும்புகின்றனர். விஜயனும் இரண்டு பிள்ளைகளை நிரோஜாவிடம் கொடுத்து விட்டு இறந்து விட்டான். தனிக் குடித்தனம் சென்ற அவளும் தாயுடன் சேர்ந்து விட்டாள்.

இராசலட்சுமியும் மீண்டும் தனது ஊருக்கு வருகின்றாள். ஏதோ தான் பழகிய வானொலி திருத்தும் வேலையை வைத்தே அலெக்ஸ் தனது அம்மாவையும், அக்காவையும் அக்காவின் இரண்டு பிள்ளைகளையும் பார்க்கின்றான். இப்படி எத்தனை குடும்பங்கள் இருக்கும் இந்த நாட்டில்?

இவர்கள் வாழ்ந்த ஊர் முதல் மாதிரி இயற்கையான காட்சிகளுடன் இருக்கவில்லை. பட்டை மரங்களும் எரிந்து இடிந்த வீடுகளும், பற்றைக்காடுகளும், பாழடைந்த வீடுகளில் மனித எலும்புக்கூடுகளும், மெலிந்த தோற்றத்துடன் ஒருகால், இரண்டு கால் இழந்த ஆடுகளும் மாடுகளும், வயல்வெளிகளில் மதிவெடிகளும், இடிந்து விழுந்த கோயிலும், இடிந்த கடைகளும், கூரையில்லாத பாடசாலையும், பச்சைக்கம்பளத்தைப் போல செழித்து இருந்த வயல்வெளி வெறும் புழுதித்தரையாக இருந்ததுடன் அந்த ஊரே பாழடைந்த சுடுகாடாக காட்சியளித்தது.

இதையெல்லாம் பார்த்த இராசலட்சுமி திகைத்து நின்றாள். அவ்வேளை சில பறவைகள் கீ...கீ...கீ... என்று கத்திக்கொண்டு அவர்கள் தற்காலிகமாக அமைந்த குடிசை வீட்டின் மேலாகப் பறந்து சென்றன.

ஆகா...! ஆகா...! எம்மைப்போல செழிப்பைத்தேடி அழைக்கின்றனவோ இந்தப்பறவைகள். என்று தனது மனசுக்குள் நினைத்துக்கொண்டு வந்த ஊர் செழிப்பது எப்போ...? எங்கட வாழ்க்கை செழிப்பது எப்போ...? என்று அவள் அரைக்கோபுத்துடன் காட்சியளிக்கும் மாவடி விநாயகரிடம் வேண்டினாள்.

முற்றும்.

கனகர், சிறுகதையை வாசித்து முடித்ததும் அவரின் கண்கள் இரண்டும் தக்காளிப்பழங்கள் போல சிவத்தன. அவர் மெதுவாக தலையை நிமிர்த்தி தங்கராசுவிடம் கடதாசியைக் கொடுத்தார்.

"அண்ணன் இந்த சிறுகதையில் மாலதியைப் பற்றி வரவேயில்லையே" - கனகர் கண்களைத் தனது கைகளினால், கசக்கியவாறு தங்கராசாவிடம் கேட்டார்.

**"இராசலட்சி மிட இரண்டு பேத்திகளில் ஒரு பேத்தி தான், மாலதி. இராசலட்சுமி இருக்கேக்க இந்க குடும்பக்கிற்கு ஒரு வேளை தவறாமல் எப்படியாவது உணவு தேடிக்கொடுப்பாள்.? பதினாறு வயது வரையும் அம்மம்மாவின் துணையோடு வளர்ந்த இவள், கிழவியின் மரணத்திற்குப் பின்னர் இந்த குடிசையில் அநாதையானாள்"**

**தொடரும்...**

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் ஒரு திறந்த சிறைச்சாலை

1979 ஆம் ஆண்டில் இருந்து இன்று வரை இருக்கின்றபயங்கரவாததடைச்சட்டமானதுவெறும் ஆறு மாதங்கள் மட்டும் தான் இருக்கும் என்று சொல்லிவிட்டு தற்காலிகமாக கொண்டு வந்தார்கள். அதை 40 ஆண்டுகளுக்கு மேல் அரசாங்கம் இன்னும் அதை தக்கவைத்துக்கொண்டிருப்பது தேசிய பாதுகாப்பிற்கு அவசியம் என்னும் போலியான காரணத்தை சொல்லுகின்றார்கள் என பகீரங்கமாக வெளியிலே அனைவரும் பேசுகின்றார்கள். தேசிய பாதுகாப்பிற்கு கொண்டுவரப்படுகின்ற சட்டம் இன்று சாதாரண பொதுமக்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலான ஒரு சட்டமாகத் தான் உருவாகியிருக்கின்றது என்பது தான் உண்மை. இந்த பின்னணியில் தான் இவ்வாறான விடயங்களுக்கு எதிரான மக்கள் புரட்சி உருவாக்கப்பட வேண்டும் இதை தடுக்க வேண்டும் கடந்த சில நாட்களாக இந்த நாட்டு பிரச்சனையை வெளிநாடுகளிற்கு சொல்வதும் வெளிநாட்டு தூதர்களிடம்



மேற்பார்வை இல்லாமல் நீண்ட காலத்திற்கு தடுத்து வைப்பது என்ற முயற்சியில் தற்பொழுது இந்த சட்டம் இன்னுமொரு கட்டம் மேலே போயிருக்கின்றது. ஒரு வருடத்திற்கு எந்த டீ.ஐ.ஜி வேண்டுமானாலும் ஒரு டிட்ரைன்ஜர் ஓர்டரில் கையெழுத்திட்டால் ஒரு வருடத்திற்கு தடுப்பு காவலில் வைக்கலாம். எந்த நீதிமன்றமும் அதில் தலையிடமுடியாது. ஒரு வருடம் முடிந்த பின் இன்னும் ஒரு வருடமும் நீதிமன்றத்தின் கீழாக ஒரு யுடிசல் கஸ்டடியில் வைக்கலாம் என்ற ஒரு நிலவரம். சும்மா ஒரு ஒப்பீட்டு ரீதியில் சட் ஜிபிடி என்ற ஒன்று இருக்கின்றது அதில் போய் சரியான

என போட்டிருக்கின்றார்கள் அதாவது 28 நாட்கள் வரை வைத்திருக்கலாம். ஆனால் தேவைப்பட்டால் இன்னும் ஒரு 14 நாட்கள் நீதிமன்ற அனுதியோடு நீடிக்கலாம் ஆகக்கூடினால் ஒன்றரை மாதம் தான் வைத்திருக்க முடியும். அடிக்கடி பயங்கரவாத தாக்குதல்களுக்கு உள்ளாகுகின்ற துருக்கி நாட்டில் 48 மணித்தியாலயத்திற்கு மேல் வைத்திருக்க முடியாது அங்கு அது தான் சட்டம் தேவைப்பட்டால் இன்னுமொரு 24 மணித்தியாலயம் நீதிமன்ற அனுமதியுடன் வைத்திருப்பதற்கு ஆதாரங்களை காட்டி பெற்றுக்கொள்ள வேண்டும். எனவே இந்த நாடுகளில் இல்லாதவற்றை எங்களது நாட்டில் இவ்வாறு கொண்டு வந்தால் நாங்கள் அனைவருமே நிறைய அனுபவித்துவிட்டோம். அது மட்டுமல்ல ஐசிசிபிஆர் சட்டத்தில் இருக்கின்ற வெறுப்பூட்டத்தக்க பேச்சுக்களை பேசுகின்றவர்களுக்கு ஒரு குற்றம். அதைத்தான் இலகுவாக பயன்படுத்திக்கொள்வது அனைவருமே உண்மையான வெறுப்பூட்டத்தக்க பேச்சினை பேசி இனங்களுக்கு இடையில் முறுகலை ஏற்படுத்துகின்ற எத்தனையோ பேரை இது கவனத்தில் எடுக்கவில்லை. ஆனால் தற்பொழுது நாங்கள் பலரை பார்த்தோம் அந்த பட்டியல் நீண்டு கொண்டே போகின்றது அவர்கள் எல்லோரும் இந்த சட்டத்தை தான் பயன்படுத்தினார்கள்.

எனவே அவற்றை இந்த புதிய பயங்கரவாத தடைச்சட்டத்திற்குள் கொண்டுவந்து போட்டிருக்கின்றார்கள். மிக மோசமாக துஸ்பிரயோகம் செய்யப்படுகின்ற ஒரு சட்ட ஏற்பாடாக அது மாறிவிட்டது. உண்மையான தேவைக்கு பயன்படுத்தப்படுவதில்லை. ஆனால் அவர்களுக்கு தேவையானவர்களை தடுப்பு காவலில் வைப்பதற்காக வேறு காரணத்திற்காக பலிவாங்கும் நோக்கில் செய்வதற்காக செய்யப்படுபவையே. நான் கூறிய இந்த வழக்கிற்காக பலர் நீதிமன்றத்தின் ஊடாக சிலர் பிணையில் இருக்கின்றார்கள் சிலர் விடுதலை

அவர்களை ஒரு கட்டாய தடுப்பு காவலில் புனர்வாழ்வு முகாம் ஒன்றினுள் தள்ளிவிட வேண்டும் அதை நீதிமன்றம் தூக்கி எறிந்துவிட்டது அது முழுமையாக மனித உரிமை நீதிகளுக்கு முரணானது மட்டுமல்ல எங்களது அரசியல் அமைப்பின் சட்ட ஏற்பாடுகளுக்கு முரணானது என நீதிமன்றம் மிக துணிச்சலான ஒரு தீர்ப்பை கொடுத்தது. அதற்கு பின் வழியில்லாமல் தனியே ரக் அடக்ஸ்க்கு மட்டும் அதை மட்டுப்படுத்தி ஒரு மாதிரி சட்டமூலத்தை கொண்டு வந்து நிறைவேற்றி வைத்திருக்கின்றார்கள். சட்ட மூலத்தை கொண்டு வருவதற்கு வேறு வழியில்லாமல் அதற்காக சரி அதை மட்டுப்படுத்தி வைத்திருந்தார்கள். தற்பொழுது பார்த்தால் திருப்பி அதே நிலைமையில் அதற்குள் கொண்டு வந்து விட்டு இன்னும் காரண காரியங்களில் சம்பந்தம் இல்லாத சின்ன சின்ன விடயங்களுக்காக ஏதோ விடயம் அறியாது ஒரு வகுப்பில் இருந்து ஒன்றும் தெரியாமல் இருந்த இளைஞர்கள் என பலர் இதன் பின்னணியை கதைக்கப்போனால் ஆயிரம் கதைக்கலாம்.

எனவே இந்த பின்னணியில் அதையும் கூட தற்பொழுது சட்டமா அதிபர் விரும்பினால் தடுப்பு காவலில் இருப்பவருக்கு இந்த தெரிவை கொடுக்கலாம். அப்படி ஒன்றும் இல்லை சும்மா சட்டமா அதிபர் பயம் காட்டுவார் நீங்கள் இந்த தெரிவை **(option)** எடுக்கா விட்டால் நாங்கள் பைல் **(file)** பன்னுவோம் வழக்கு வருட கணக்கில் பேச வேண்டும் உங்களுக்கு பிணையும் இல்லாமல் நீடிக்கப்படும் என அச்சுறுத்தும் பாணியில் கதைக்க தொடங்கினால் வேறு வழியில்லாமல் பேசாமல் போய் இரண்டு வருடம் உள்ளே இருந்து விட்டு வருவோமே என்ற ஒரு அச்ச நிலைமை மக்களுக்கு உருவாகும். ஏனென்றால் இது என்னைப்பொறுத்தவரையில் இந்த நாட்டிலே பயங்கரவாத ஒழிப்புச் சட்டத்தை கொண்டு வந்து பயங்கரவாதம் ஒழிந்ததாக ஒன்றுமே நடக்கவில்லை. உண்மையிலே

சொல்வதும் நாட்டின் இறையாண்மைக்கு விரோதமானது என்று கற்பிக்கின்றது. ஏனென்றால் பக்கத்து நாடுகளிலும் இது நடக்கின்றது வெளிநாடுகளுக்கு போய் உள்நாட்டு பிரச்சனைகளை கதைத்தால் பாராளுமன்ற உறுப்புரிமையும் பறிபோகும் நிலை வரும் என்ற அச்ச சூழலை உருவாக்கி வருகின்றார்கள்.

கேள்வியை சரியாக போட்டால் சரியான விடைகள் வரும் இருக்கின்ற பெரியதொரு வசதி அது. ஏனைய நாடுகளில் இருந்து பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு

## ATA எவ்வளவு ஆபத்தானது தெரியுமா? – ரவூப் ஹக்கீம்

எனவே இந்த பின்னணியிலே நாங்கள் துணிச்சலோடு சிவில் சமூகத்தின் விழிப்புணர்ச்சி என்பது இன்று அரசியல்வாதிகளுக்கு மத்தியில் விழிப்புணர்ச்சியை எதிர்பார்ப்பது என்பது கடினம். ஏனென்றால் அவர்கள் அனைவரும் சிவில் சமூகத்திற்கு பயந்துபோய் இருக்கின்றார்கள். அவர்கள் தான் எல்லாவற்றையும் செய்ய வேண்டும். அவர்களை கொண்டு தான் சில விடயங்களை சாதிக்க வேண்டும் என்ற நிலை உருவாகியிருக்கின்றது. போதாக்குறைக்கு சர்வதேச நாணய நிதியம் இந்த நாட்டுக்கு கடன் கொடுத்து அதன் ஊடாக இந்த பொருளாதார சிக்கலில் இருந்து எங்களை மீள கொண்டு வருகின்ற நிலையில் அதை பாளாக்கிவிடுவமோ என்பதற்காக இனி வீதிக்கு இறங்கி போராடவும் அச்சப்படுகின்ற ஒரு நிலை மக்களுக்கு மத்தியில் அப்படியொரு விதமான அச்ச உணர்வை உருவாக்குவதற்கு முயற்சிகள் நடக்கின்றது. இது எல்லாம் காரணமாக வைத்து இன்னும் இன்னும் இந்த முழு நாட்டையும் ஒரு திறந்தவெளி சிறைச்சாலையாக மாற்றுகின்ற ஒரு நிலைமைக்கு புதிய சட்டமூலம் வழிவகுக்கப் போகின்றது என்பதில் எந்தவித மாற்றுக்கருத்தும் இல்லை. திறந்த வெளி சிறைச்சாலையாக மாற்றுவது மட்டுமல்ல அந்த திறந்தவெளி சிறைச்சாலையின் சாவியை நாட்டு தலைவரிடம் கொடுத்துவிட்டு அவர் அந்த சாவியை கடலுக்குள் வீசிவிட்டு ஆட்சியிலே நீடிப்பதற்கான ஒரு நிலவரமாக இது மாறிவிடும். எனவே தான் இந்த விவகாரம் சம்பந்தமான ஒரு விழிப்புணர்வு என்பது முக்கியம். இதன் அம்சங்களை அக்கு வேறாக ஆணி வேறாக ஆராய்வதற்கான ஒரு களமாக நான் இதை மாற்றிக்கொள்ள விரும்பவில்லை. ஆனால் இவ் விவகாரம் தொடர்பில் கூடுதலாக தேடிப்பார்க்க வேண்டும். ஒரு விடயத்தை மட்டும் சொல்லுகின்றேன். இந்த நீதியின் அநீதியை அனுபவித்தவர்கள். இந்த நாட்டில் இங்கிருக்கின்றீர்கள். இந்த நாட்டிலே யாரையும் பயங்கரவாதிகள் என குற்றம் சாட்டிவிட்டு இந்த சட்டத்தின் கீழ் நீதிமன்றின்

கீழ் நீதிமன்றத்தின் மேற்பார்வை இல்லாமல் தடுப்பு காவலில் வைப்பதற்கு என்ன ஏற்பாடுகள் இருக்கின்றது. என கொஞ்சம் ஒரு சட் ஜிபிடி யில் ஒரு கேள்வியை போட்டு கேட்டுப்பார்த்தேன். அமெரிக்காவில் சட்டம் ஒன்று இருக்கின்றது அது பயங்கரவாத தடுப்பிற்காக கொண்டுவரப்பட்ட விசேடமான சட்டம். அதன் கீழ் ஆறு நாட்களுக்கு மேல் நீதிமன்றின் மேற்பார்வை இல்லாமல் யாரையும் தடுப்பு காவலில் வைக்க முடியாது. பிரான்ஸில் அதே போன்று ஏழு நாட்கள் என்று நினைக்கின்றேன் அதுவும் அவசரகால தடைச்சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டதை இப்பொழுது தான் சட்டத்திற்குள் கொண்டு வந்திருக்கின்றார்கள். இங்கிலாந்தில் 28 நாட்கள்

செய்யப்பட்டிருக்கின்றார்கள். நீதிமன்றங்களே இதை கடுமையாக விமர்சித்திருக்கின்றது. அண்மையில் இன்னுமொரு முயற்சி நடந்தது அதாவது இன்னுமொரு சட்டத்தை கொண்டு வந்தார்கள். எங்களுக்கு இருக்கின்ற ஒரே ஒரு அடைக்கலம் நீதிமன்றம் நீதிமன்றத்திற்கு போய் அதை சவாலுக்கு உட்படுத்தியதால் நீதிமன்றம் முழு சட்டம்மூலத்தையும் தூக்கி எறிந்தது இது முழுமையாக மனித விழுமியங்களை மீறுகின்ற ஒரு சட்டமூலம். ஏனென்றால் இவர்கள் இவ்வளவு காலமும் தடுப்பு காவலில் வைத்திருந்த நூற்றுக்கணக்கான இளைஞர்கள். இவர்களை இவ்வளவு காலமும் வைத்திருந்தமைக்கு காரணம் சொல்லமுடியவில்லை. எனவே

நாட்டில் பயங்கரவாதத்தை உருவாக்குகின்ற ஒரு சட்டமூலமாக அது மாறுகின்ற ஒரு நிலவரம் தான் ஏற்பட்டிருக்கின்றது. எனவே இது ஒன்றுமே தேவையில்லை இருக்கின்ற தண்டனை சட்ட கோவையில் அதற்கான குற்றங்களை ஒழுங்காக வகைப்படுத்திக்கொண்டு வந்தால் மட்டும் போதும் என்ற நிலைக்கு இன்று நாட்டில் இருக்கின்ற பல அரசியல்கட்சிகள் பேச ஆரம்பித்திருக்கின்றார்கள். இதுவெறும்ஆட்சியாளர்களை காப்பாற்றுவதற்கான ஒரு கவசமாக மாற்றப்படுகின்றது. அரசியல் யாப்பு என்ற போர்வையில் கொண்டு வரப்படுகின்ற மிக மோசமான இந்த விடயங்களுக்கு எதிராக பேச வேண்டிய துணிவோடு இதை சொல்ல வேண்டிய ஒரு காலகட்டத்திலே நாம் வாழுகின்றோம்.



# ஜனநாயகத்தை குழிதோண்டிப்புதைக்கும் புதிய சட்டம்

## வவுனியா மதநல்லிணக்க ஒன்று கூடலின் போது





**சிவசக்தி ஆனந்தன்** : அரசாங்கத்தினுடைய பல்வேறுபட்ட நெருக்கடிகளுக்கு எதிராக இன்றைய தினம் வவுனியா மாவட்ட அமைப்புக்கள் ஒன்பது அரசியல் கட்சிகள் தலைவர்களுக்கிடையிலான ஒரு கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றுள்ளது. வடக்கு கிழக்கிலுள்ள 8 மாவட்டங்களும் ஒரு பொது கட்டமைப்பு ஒன்றை உருவாக்கி அந்த பொதுக் கட்டமைப்பின் ஊடாக மாவட்ட ரீதியாக என்னென்ன பிரச்சனைகள் இருக்கின்றன என்பதனை இனங்கண்டு அந்த பிரச்சனைகளை தீர்ப்பதற்காக பல்வேறுபட்ட வழிகளை கையாளுவதுடன் நிதானமாக அரசாங்கத்திற்கு எதிரான சாத்திய போராட்டத்தை எதிர் காலத்திலே முன்னெடுப்பது தான் பிரதான நோக்கமாக இருக்கும். அந்த அடிப்படையிலே இன்றைய தினம் அதற்கான ஒரு குழு கட்டமைப்பை உருவாக்கப்பட்டிருக்கின்றது. இதில் ஏனைய மாவட்டங்களிலும் குழு கட்டமைப்பு உருவாக்கப்பட்டு அரசாங்கத்திற்க எதிராக அரசாங்கத்தின் அடக்கு முறைகளுக்கு எதிராக ஜனநாயகரீதியானபோராட்டங்கள்எதிர்காலத்திலே பலமிக்க ஒரு போராட்டமாக முன்னெடுக்கப்படும். அதன் மூலமாக இந்த பிரச்சனைகளை தீர்க்கலாம் என நான் நினைக்கின்றேன்.

உண்மையிலே கிட்டத்தட்ட 1979 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இந்த பயங்கரவாத தடைச்சட்டமானது தற்காலிகமாக கொண்டுவரப்பட்டது சட்டம். தற்பொழுது 40 வருடங்கள் கடந்து பல ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்படுவதற்கும். காணாமலாக்கப்படுவதற்கும் பயங்கரவாத தடைச்சட்டம் ஒரு காரணாக இருந்திருக்கின்றது. இதனால் 40 வருட காலமாக தமிழ் மக்கள் உண்மையில் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். ஆனால் மீண்டும் இந்த சட்டம் கொண்டு வரப்படுகின்றது என்றால் இராணுவம் பொலிசுக்கு அளவுக்கு அதிகமான அதிகாரங்கள் இந்த புதிய பயங்கரவாத தடைச்சட்டத்தில் இருக்கின்றன. எனவே இது மிக மிக மோசமான ஒரு சட்டம் ஊடகவியலாளர்களில் இருந்து அரசியல் கட்சிகள் ஒரு ஜனநாயகத்திற்காக குரல் கொடுக்கின்ற ஜனநாயகத்திற்காக போராடுகின்ற அத்தனை பேரையும் கட்டுப்படுத்துகின்ற ஒரு மிக மோசமான ஒரு சட்டம். எனவே இந்த சட்டத்தை பாராளுமன்றத்திலே இருக்கின்ற அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் இதை மிக கடுமையாக எதிர்க்க வேண்டும். இந்த சட்டத்தை நடைமுறைப்படுத்தாமல் செய்வதற்கு ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினர்களும் அதற்கான அழுத்தத்தை கொடுக்க வேண்டும்.

**செல்வம் அடைக்கலநாதன் :** யாழ்ப்பாணத்தில் ஏற்கனவே சிவில் அமைப்புக்களோடும் சகல கட்சிகளோடும் எங்களது வடக்கு கிழக்கிலே தொல்பொருள் திணைக்களம் தொடர்பில் இங்கிருக்கின்ற மணலாகா மகாவலி திட்டங்கள் ஊடாக மிக திட்டமிட்டு எங்களது நிலங்களை அபகரிக்கின்ற எங்களது வாழ்வுரிமையை அமைத்தெடுக்கின்ற பூர்வீகமாக தமிழர்கள் வாழ்ந்த வரலாற்றை செதுக்குகின்ற வகையிலே பல நிகழ்வுகள் இரகசியமான முறையிலே நடந்துகொண்டிருக்கின்றன. அதன் அடிப்படையிலே இரண்டாவது கூட்டமாக நாங்கள் வவுனியாவிலே கூடியிருந்தோம். இந்த கூட்டத்திலே இரண்டு முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றது. ஒன்று வவுனியா மாவட்டத்திலே நடைபெறுகின்ற இரண்டு குழுக்களாக அமைக்கப்பட்டிருக்கின்றது முதலாவது குழு ஐந்து பேர் கொண்ட தொகுதியாக அமைக்கப்பட்டுள்ளது. அது வவுனியா மாவட்டத்திலே மிகவும் மக்கள் உந்தப்படுகின்ற லாகாவினால் அல்லது எமது மக்களுக்கு இழைக்கப்படுகின்ற அநீதிகளை எழுத்து மூலமான ஆதாரங்களை பெறுவதற்கான வழிமுறைகளை கையாளுவதற்கான ஒரு குழு நியமிக்கப்பட்டிருக்கின்றது. இரண்டாவது பொதுச்சபை என அழைக்கப்பட்ட அத்தனை சிவில் அமைப்புக்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சிகள் அனைவரும் அந்த சபையிலே இருப்பார்கள். அது எங்களது மக்களை அணிதிரட்டி எமது மக்களுக்கு எதிராக கொடுக்கப்படுகின்ற அத்தனை பிரச்சனைகளும் எமது மக்களது உரிமைக்கு எதிராக செயற்படுகின்ற அத்தனை விடயங்களையும் மக்கள் போராட்டமாக மாற்றி மக்கள் போராட்டத்தோடு இங்கிருக்கின்ற உயர்ஸ்தானிகர் ஆலயங்களிலும் யுனஸ்கோ ஐ.நா சபை போன்ற முக்கிய நிறுவனங்களுக்கும் நாங்கள் இந்த போராட்டத்தின் வடிவில் எங்களது வலியை சமர்ப்பிக்கின்ற ஒரு குழுவாக இது இருக்கும் என்பது எங்களது கருத்து. எனவே வவுனியாவிலே இந்த முயற்சி வெற்றியளித்திருக்கின்றது என்பதனை நான் குறிப்பிடுகின்றேன். நிச்சயமாக வரப்போகின்ற புதிய சட்டமானது பத்திரிகையாளர்கள் உட்பட கூட்டம் கூட்டமாக பேசினாலும் கூட அவர்களை கைது செய்கின்ற நிலை காணப்படும். எனவே இந்த திட்டத்தின் தன்மை என்னவென்றால் இந்த அரசாங்கத்திற்கு எதிராக அல்லது இந்த அரசாங்கம் செய்கின்ற அநீதிகளுக்கு எதிராக யாராவது குரல் கொடுத்தால் போராட்டம் செய்தால் அதை அடக்குகின்ற அதைப்போன்று இந்த போராட்டத்தை எழுதுகின்ற பத்திரிகையாளர்கள் பத்திரிகைகள் அவர்களை முடக்குகின்ற ஒரு செயற்பாட்டை செய்வதற்கான ஒரு சட்டமாகத் தான் இந்த சட்டம் வருகின்றது. இதை உடனடியாக இந்த இரண்டு அதாவது பயங்கரவாத தடைச்சட்டமும் எடுக்கப்பட வேண்டும் என்பது ஐ.நாவினுடைய தீர்மானம். அந்த வகையில் இந்த இரண்டு சட்டங்களையும் நீக்குமாறு நாங்கள் ஒரு முயற்சியை மேற்கொள்ள இருக்கின்றோம். பாராளுமன்றத்திலே தமிழ் பேசும் வடக்கு கிழக்கு ஏன் சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்களோடும் பேசி இந்த இரண்டு விடயங்களையும் தோற்கடிப்பதற்கான முயற்சிகளை நாங்கள் மேற்கொண்டு செயற்படுவதற்கு முயற்சி செய்து கொண்டு வருகின்றோம். அந்த வகையில் பாகுபாடு இல்லாத மிக மோசமான அடக்கு முறையை கொண்டு வருகின்ற இந்த சட்டத்தை தோற்கடிப்பதற்கும் அதைப்போன்று பயங்கரவாத தடைச்சட்டத்தையும் தோற்கடிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளையும் நாங்கள் மேற்கொள்ள இருக்கின்றோம்.

இந்த கூட்டத்தில் வன்னியை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளவில்லை. எனவே இது ஒரு ஆரம்பம் என்பதனால் சிறிது தளர்வுகள் ஏற்பட்டிருக்கின்றது. மக்கள் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருக்க வேண்டும். ஆனால் இனிவரும் காலங்களிலே அனைவரும் சேரந்து முழுமையான கூட்டமாக அடுத்த கூட்டம் நடைபெறும் என நான் குறிப்பிட விரும்புகின்றேன். எனவே திடீரென அழைக்கப்பட்டு செயற்படுகின்ற கூட்டமாக இது இருந்தமையால் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ள தாமதமாக இருக்கின்றது. எனவே அடுத்த கூட்டத்திலே அனைவரும் பொறுமையாக கலந்துகொள்ளுவார்கள்.

# சாலொமோனின் ஞானம்

ஞானியாகிய சாலொமோனின் அரச சபைக்கு இரண்டு பெண்கள் கொண்டு வந்த ஒரு வினோதமான வழக்கிற்கு சாலொமோன் எப்படி ஞானமாக தீர்ப்பு கொடுத்தார் என்பதை பார்ப்போம்.

**நியாயம் நீதியினிடமாகத் திரும்பும், செம்மையான இருதயத்தார் யாவரும் அதைப் பின்பற்றுவார்கள்.**
**சங்கீதம் 94:15**



ஒருநாள் சாலொமோன் ராஜாவின் அரண்மனையில் வினோதமான வழக்கு வந்தது. இரண்டு பெண்கள் ஒரு ஆண் குழந்தையை கொண்டு வந்தனர். அவர்கள் இருவருமே அது தன்னுடைய குழந்தை என சொல்லி வழக்காடினார்கள் அதில் ஒரு பெண் ராஜாவை நோக்கி நடந்த சம்பவத்தை விளக்கினாள். ராஜாவே நானும் இந்த பெண்ணும் ஒரே வீட்டில் வாழ்ந்து வந்தோம். எனக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது நான் பிள்ளை பெற்ற மூன்றாம் நாளில் இவளுக்கும் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. எங்கள் இருவரையும் தவிர வீட்டில் வேறு யாரும் கிடையாது. இப்படி இருக்கும் பொழுது இரவு தூக்கத்தில் இவள் தன் குழந்தை மேல் புறண்டு படுத்ததால் அந்த குழந்தை இறந்து விட்டது. நடு ராத்திரியில் அவள் இறந்த குழந்தையை என்மீது வைத்துவிட்டு உயிருடன் இருக்கும் என் குழந்தையை அவளது அருகில் கிடத்தி விட்டாள். காலையில் குழந்தைக்கு பால் கொடுப்பதற்கு எடுத்த பொழுது குழந்தை இறந்திருந்தது. அதை நான் கூர்ந்து பார்த்த பொழுது அது நான் பெற்ற பிள்ளை இல்லை என்பதனை அறிந்தேன் என்றாள். அதற்கு மற்ற பெண் அப்படியல்ல உயிருடன் இருப்பது என் பிள்ளை இறந்தது உன் பிள்ளை என்றாள் இவளோ இல்லை இறந்தது உன் பிள்ளை உயிருடன் இருப்பது என் பிள்ளை என்றாள். அப்பொழுது ராஜாவாகிய சாலொமோன் மற்றும் அரண்மனையில் இருக்கும் அனைவருக்கும் மிகுந்த குழப்பமாக இருந்தது சாலொமோன் அவர்களை நோக்கி உயிருடன் இருப்பது என் பிள்ளை இறந்தது உன் பிள்ளை என்று இவள் சொல்லுகின்றாள் அப்படியல்ல இறந்தது உன் பிள்ளை உயிருடன் இருப்பது என் பிள்ளை என்று அவள் சொல்லுகிறாள் என்று சொல்லி எப்படியாவது இவர்களது வாயிலிருந்து உண்மையை வரவைக்க வேண்டும் என்று ஒரு ஐடியா பன்னினாரு. ராஜா ஒரு வீரனை வாலை கொண்டு வரும் படி அழைத்து அந்த வீரனை நோக்கி உயிருடன் இருக்கும் பிள்ளையை இரண்டாக பிளந்து பாதியை இவளுக்கும் பாதியை அவளுக்கும் கொடுங்கள் என்று கூறினான். எல்லாருக்கும் ஒரே அதிர்ச்சி போர் வீரன் வாலை ஓங்கியதும் உயிருடன் இருக்கும் பிள்ளையின் தாய் ரொம்ப துடித்துப்போனாள். அவள் அந்த குழந்தையை காப்பாற்றும் விதமாய் ராஜாவே குழந்தையை கொல்ல வேண்டாம் அதை அவளிடமே கொடுத்துவிடுங்கள் என்று கூறி அழுதாள். அது எனக்கும் வேண்டாம் உனக்கும் வேண்டாம் அதை பிளந்து போடுங்கள் என்றாள். அப்பொழுது ராஜா குழந்தையை கொல்ல வேண்டாம் என்ற தாயை அழைத்து குழந்தையை எடுத்து அவளிடம் கொடுத்து இவளே உண்மையான தாய் என தீர்ப்பு கூறினார். குழந்தையை பெற்றுக்கொண்ட அதன் உண்மையான தாய் மிகுந்த மகிழ்ச்சியடைந்தாள்.

இதனை கேள்விப்பட்ட இஸ்ரவேல் அனைவரும் தேவன் சாலொமோனிற்கு அளவில்லா ஞானத்தை கொடுத்தார் என்று அறிந்துகொண்டார்கள்.

இப்படிப்பட்ட ஞானம் சாலொமோனிற்கு எப்படி வந்தது என்று தெரியுமா?. சாலொமோன் ராஜாவாகியதும் கர்த்தருக்கு பலியிட கிபியோ என்னும் ஊருக்கு போனார் அங்கே உள்ள பலிவிடத்தில் ஆயிரம் சர்வாங்க தகன பலியினை செலுத்தி கர்த்தரை மகிமைப்படுத்தினார் அன்றைய இரவு சாலொமோன் தூங்கும் பொழுது ஒரு தரிசனத்தை கண்டார். அதில் தேவன் சாலொமோனிடம் நீ விரும்புகின்றதை என்னிடத்தில் கேள் என்றார் அதற்கு சாலொமோன் நான் போக்குவரவு அறியாத சிறுபிள்ளையாக இருக்கின்றேன். ஆகையால் **"எமது ஜனங்களை நியாயம் விசாரிக்கவும் நன்மை தீமை இன்னதென்று வகையறுக்கவும் அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத்தை தந்தருளும்"** என்றார். சாலொமோன் இந்த விடயத்தை கேட்டது ஆண்டவரின் பார்வைக்கு உகந்த விண்ணப்பமாக இருந்தது. ஆகையால் தேவன் சாலொமோனை நோக்கி நீ உனக்கு நீடித்த நாட்களை கேளாமலும் ஐஸ்வர்யத்தை கேளாமலும் உன் சத்ரிகளின் பிராரணை கேளாமலும் நீ ஞானத்தை கேட்டபடியால் உன் வார்த்தைகளின் படியே செய்தேன். ஞானமும் உணர்வுள்ள இருதயத்தையும் உனக்கு தந்தேன் இதுவும் அன்றி நீ கேளாத ஐஸ்வர்யத்தையும் மகிமையையும் உனக்கு தந்தேன் என்று தேவன் சாலோமோனை ஆசிர்வதித்தார். இவ்வாறாக சாலொமோன் அந்த பூமியிலுள்ள அனைவரை விடவும் மிகுந்த ஞானமுள்ளவராக வாழ்ந்தார்.

# தமிழின அழிப்பு கோட்பாடு

ஒரு இனத்தை அழிக்கு முன் அந்த இனத்தின் மதத்தினதும் மொழியினதும் கலாச்சார பண்பாட்டு சுவடுகளை அழி அந்த இனம் தானாகவே அழிந்து விடும் என்ற கோட்பாட்டை மூலமாக கொண்டு பறங்கிய இனத்தவர்களும் அவர்களது கிறிஸ்தவ மதங்களும் இன அழிப்பு கோட்பாடாக கொண்டு செயல்பட்டு உலகில் பல இனங்களை படுகொலை செய்து வருகின்றார்கள். தமிழின அழிப்பு என்பது தமிழ் இனபடு கொலை மட்டும் அல்ல தமிழ் இனத்தை முற்றாக ஒழிக்கும் முயற்சியுடன். அவர்களை முற்றாக அழிப்பதை நோக்காக கொண்டு தமிழ் இனத்தின் சமயமான சைவ நெறிகளையும் அதன் தமிழ் மொழியினதும் கலாச்சார பண்பாட்டு சுவடுகளை அழித்து தமிழ் இனத்தை அழிப்பதும் தமிழ் இன அழிப்பு ஆகும்.



தமிழ்த்தேசியம் என்ற சொற்கோவையில் உள்ள தமிழ் என்ற சொல். தமிழையும் தமிழ்பேசும் இனத்தையும் தமிழர்களின் திருநாட்டையும். தமிழன் தமிழன் என்று அடையாளப்படுத்துகின்ற திருநீறும் பொட்டும் கலந்த கலாச்சார பண்பாடுகளை குறிக்கிறது. தேசியம் என்பது தேச இருப்பு அதற்குறிய அரசியல் உரிமை. பண்பியல் ஆகியவற்றைக் குறிக்கின்றது. ஒரு நபரின் பெயர் என்பது அவரின் மொழியினை அடையாளப்படுத்தும். அத்துடன் மொழியின் பண்பாட்டினை அடையாளப்படுத்துவதனால் அவரின் தேசிய இனத்தின் அடையாளத்தை எடுத்துக் காட்டுவதாக அமையும். ஆகவே பிறமொழி கலப்படம் அற்ற தூய தமிழ் பெயரை அடையாளமாக கொண்டு இருப்பவன் தமிழன் என்று அடையாளப்படுத்தும்.

தமிழர்கள் தங்களின் அடையாளமாக நெற்றியில் திருநீறும் பொட்டும் தமிழ்தேசிய உடையையும் அடையாளமாக கொண்ட ஆண்கள் தமிழர்கள் என்று அடையாளப்படுத்தப்பட்டார்கள். தமிழ்தேசியத்தின் கலாச்சார பண்பாட்டு உடையில் தலைவாரி பூச்சூடி நெற்றியில் திருநீறும் சிறு குங்குமப் பொட்டும் அலங்கரித்து மாங்களகரமான தோற்றத்துடன் காட்சி கொடுப்பது தமிழ் பெண்கள் என்று அடையாளப்படுத்தும். தங்களை தமிழச்சிகள் என்று கூறிக் கொண்டு தமிழ் பெண்கள் என்று அடையாளப்படுத்துகின்ற திருநீறு கலந்த தமிழ் கலாச்சார பண்பாடுகளை நிராகரிக்கின்ற அனைவரும் தமிழ் இன அழிப்பாளர்கள்.



தங்களை தமிழர்கள் என்று கூறிக் கொண்டு அடையாளப்படுத்திக் கொண்டு தமிழன் என்று அடையாளப்படுத்துகின்ற தூய தமிழ் பெயர்களை நிராகரித்து அன்னி மொழி பெயர்களை சூட்டி தமிழ் இன அழிப்புகளை செய்கின்றவர்கள் தமிழ் இன படுகொலையாளர்கள். தமிழை அருளிய அகர முதல்வனாகிய உமை உமையொருபாகனாகிய இறைவன் தமிழாகும். உமை உமையொருபாகனை முழு முதலாக கொண்ட மொழி தமிழ். தமிழை அருளிய அகர முதல்வனாகிய இறைவனை போற்றி வழிபடுபவனே தமிழன். தங்களை தமிழர்கள் என்று கூறிக் கொண்டு அடையாளப் படுத்திக் கொண்டு தமிழின் இறைவனை போற்றி வழிபடாமல் நிராகரிக்கின்ற அனைவரும் தமிழ் இன அழிப்பாளர்கள்.

தமிழை அருளிய அகர முதல்வனாகிய உமை உமையொருபாகன் உயிர்கள் உய்யும் பொருட்டு உயிர்களின் பக்குவ நிலைக்கேற்ப விநாயகர். முருகன். பெருமாள். இந்திரன்.வருணன். அம்மன். பஞ்ச பூதங்கள் . நவக்கிரகங்கள் என்று பல்வேறு வடிவங்களை எடுக்கின்ற இறை அருளின் பல்வேறு வடிவங்களே இறைவன் அருளிய தமிழ் போற்றிய தெய்வங்கள் தமிழின் தெய்வங்களாகும். இறைவன் அருளிய தமிழ் போற்றிய தெய்வங்களை வழிபடுபவனே தமிழன். தங்களை தமிழர்கள் என்று கூறிக் கொண்டு அடையாளப்படுத்திக் கொண்டு இறைவன் அருளிய தமிழ் போற்றிய தெய்வங்களை நிராகரிக்கின்றவர்கள் அனைவரும் தமிழ் இன அழிப்பாளர்கள். தமிழை அருளிய அகர முதல்வனாகிய இறைவனின் ஆலயங்களும் இறைவனின் அடையாளங்களும் இறைவன் அருளிய தமிழ் போற்றிய தெய்வங்களின் ஆலயங்களும். தெய்வங்களின் அடையாளங்களும் கொண்ட பூமி மங்களகரம் நிறைந்த தமிழ் பூமியாகும்.

தமிழர்களை கொலை செய்வது மட்டும் தமிழ் இன அழிப்பு அல்ல. தமிழ் இனத்தை அழிக்கும் நோக்குடன் தமிழன் என்று அடையாளப்படுத்துகின்ற இன அடையாளங்களையும். எமது முன்னோர்கள் வாழ்ந்த வாழ்வியல் நெறியான சைவ சமயத்தின் தமிழ் கலாச்சார பண்பாட்டு எழுச்சி வடிவங்களாகவும். தமிழினதும் தமிழர்களினதும் வரலாற்று ஆதரங்களாகவும். தமிழ் பூமியின் அடையாளமாகவும் தமிழ் இனத்தின் முதுகெழும் பாகவும் அடையாளமாகவும் எழுந்து நிற்கின்ற சைவ ஆலயங்களை சிதைப்பதும் அழிப்பதும் தமிழ் இன அழிப்பாகும். ஐரோப்பிய மரபணுக்கள் மூலமாக கடத்தப்பட்ட குணங்களையும் அவர்களது பாரம்பரிய கலாச்சார பண்பாட்டு இயல்புகளையும் கொண்ட வம்சாவழி இனமக்களாகிய பறங்கிய இனத்தவர்களாகிய கிறிஸ்தவர்கள் தமிழ் பூமியில் ஐரோப்பிய மனிதர்களின் உருவச் சிலைகளை தெய்வங்களாகவும். யூதநாட்டு கொலைக் கருவியான சிலுவையும். சிலுவையில் பிணமாக தொங்கிய ஜீசஸ் என்ற யூதனையும் அவனின் தயாரான மரியாளை சமஸ்கிருத மொழியில் மாதா என்று அழைத்தும் அவர்களின் முன்னோர்களான ஏபிரகாமியர்களை தங்களின் வழிகாட்டிகளாகவும். இறைவனாகவும் கொண்டு பறங்கிய இனம் தமிழ் பூமியில் நிறுவுவது தமிழ் இன அழிப்பு ஆகும்.

அரேபிய இஸ்லாமிய மரபணுக்கள் மூலமாக கடத்தப்பட்ட குணங்களையும் அவர்களது பாரம்பரிய கலாச்சார பண்பாட்டு இயல்புகளையும் கொண்ட வம்சாவழி இனமக்களாகிய சோனகர்கள் தமிழ் பூமியில் அரேபிய இஸ்லாமிய மதத்தையும் அதன் கலாச்சார பண்பாடுகளையும் நிறுவுவது தமிழ் இன அழிப்பு ஆகும். தமிழ் பூமியில் தமிழ் கிராமங்களினதும் பெயர்களையும். வீதிகளின் தமிழ் பெயர்களையும் அழித்து ஐரோப்பிய மொழி பெயர்களையும். கீப்புறு மொழி பெயர்களையும். அரேபிய இஸ்லாமிய மொழி பெயர்களையும் சூட்டுவது தமிழ் படு கொலையாகும். தமிழின் மரபு வழியாகவும் தமிழ் மக்களின் வாழ்வியல் நெறிகளை அடியொற்றி கட்டியெழுப்பிய இலக்கிய நூல்களின் வழியாகவும் . கலைகளின் மரபு வழியாகவும். குறிஞ்சி. முல்லை. மருதம். நெய்தல். பாலை என்று பிரித்துப் போட்ட தொல்காப்பியன் வழியாகவும். "யாதும். ஊரே யாவரும் கேளிர்" என்று உலக ஒருமையைப் பாடிய கணியன் பூங்குன்றன் வழியாகவும். . வாழ்வியல் நெறிகளை அருளிய திருவள்ளுவரின் அறம் பொருள் இன்பம் வீடு என்ற திருக்குறளின் நாற்பாதங்களின் வழியாகவும். எம் முன்னோர்களிடம் இருந்து வழிவழியாக தலைமுறைகளால் கடத்தப்பட்டு வந்த வாழ்வியல் பண்பாட்டு நெறிகளே தமிழினதும் தமிழர்களினதும் மரபு வழி பண்பாடுகள் ஆகும்.

தங்களை தமிழர்கள் என்று கூறிக் கொண்டு அடையாளப்படுத்திக் கொண்டு தமிழ் பண்பாடுகளை நிராகரிப்பதும் சிதைப்பதும். அழிப்பதும் தமிழ் இன அழிப்பு ஆகும்.

தமிழ் பெரும் புலவர்களையும். தமிழ் வளர்த்த 12 ஆழ்வார்களையும் தமிழ் காத்தசமய குரவர்களையும். மேலும் பல தமிழ் காத்து வளர்த்த சைவ அடியார்களையும் நினைவு கூறுகின்றவர்களே தமிழர்கள் ஆகும். தமிழ் வளர்த்தவர்களை நினைவு கூறமறுக்கின்ற அனைவரும் தமிழ் இன அழிப்பாளர்கள்.

தமிழர்களை திராவிட இனமாக மாற்றி அடையாளப்படுத்துவதும். தமிழ் நாட்டைத் திராவிட நாடு என்று மாற்றி அடையாளப்படுத்துவதும். தமிழ் இலக்கணத்தைத் திராவிட இலக்கணம் என்று மாற்றி அடையாளப்படுத்துவதும். தமிழ் மாமன்னன் கரிகால் பெருவளவனைத் திராவிட மன்னன் என்று என்று மாற்றி அடையாளப்படுத்துவதும். தமிழர் கட்டிடக்கலையைத் திராவிடக்கட்டிடக்கலை என்று என்று மாற்றி அடையாளப்படுத்துவதும். தமிழர் நாகரீகமான சிந்துசமவெளி நாகரீகத்தை திராவிட நாகரீகம் என்று மாற்றி அடையாளப்படுத்துவதும். தமிழ் கல்வெட்டுக்களைத் திராவிடக்கல்வெட்டுக்கள் என்று மாற்றி அடையாளப்படுத்துவதும். தமிழர் பண்பாடான கீழடியைத் திராவிடப்பண்பாடெனத் திரித்து அடையாளப்படுத்தியும். தமிழர் திருநாளான பொங்கலை திராவிடர் திருநாளை திராவிட திருநாளாக மாற்றி அடையாளப்படுத்துவதும். தமிழின் சித்திரை வருடப்பிறப்பை அழிப்பதும். உமை உமையொருபாகனின் அர்த்தநாரீசுவரர் தோற்றமான சிவ சிவசத்தி சிவத்திருநாளான தீபாவளி திருநாளை சிதைப்பதும். தமிழின் பெருவிழாக்களை சிதைப்பதும் போன்ற அனைத்து செயல்பாடுகளும் தமிழ் இன அழிப்பு ஆகும்.


தமிழர்கள் ஐரோப்பிய வம்சாவழியினராகிய பறங்கிய இனத்தவர்களாகிய கிறிஸ்தவர்களை கலப்பின திருமணம் செய்து தமிழ் இனத்தின் தனித்துவத்தை இழந்து பறங்கிய இனத்தோடு கலந்து விடுவதும் தமிழ் இன அழிப்பாகும். தமிழர்கள் அரேபிய வம்சாவழியினராகிய சோனகர்களுடன் கலப்பின திருமணம் செய்து தமிழ் இனத்தின் தனித்துவத்தை இழந்து முஸ்லீம் இனத்துடன் கலந்து விடுவதும் தமிழ் இன அழிப்பாகும்.

தமிழர்கள் ஐரோப்பிய மரபணுக்கள் மூலமாக கடத்தப்பட்ட குணங்களையும் அவர்களது பாரம்பரிய கலாச்சார பண்பாட்டு இயல்புகளையும் கொண்ட வம்சாவழி இனமக்களாகிய பறங்கிய இனத்தவர்களுடன் இணைந்து கொண்டு மதசார்பின்மை பேசுவது தமிழ் இன அழிப்பு ஆகும். தமிழர்கள் அரேபிய இஸ்லாமிய மரபணுக்கள் மூலமாக கடத்தப்பட்ட குணங்களையும் அவர்களது பாரம்பரிய கலாச்சார பண்பாட்டு இயல்புகளையும் கொண்ட வம்சாவழி இனமக்களாகிய சோனகர்களுடன் இணைந்து கொண்டு மதசார்பின்மை பேசுவது தமிழ் இன அழிப்பு ஆகும்.

தமிழா தமிழ் இனத்தை படுகொலை செய்வது மட்டும் தமிழ் இன அழிப்பு அல்ல என்பதனை உணர்ந்து கொள். தமிழ் இன அழிப்பாளர்கள் அனைவரும் நாம் தமிழர்கள் என்று பொங்கி பொங்கி எழுகின்றனர். இவர்கள் அனைவரும் தமிழர்களை இல்லை என்பதனை அறிந்து கொள் தமிழா. ஆகவே நீயும் தமிழனா?

**துரியோதரன்**

# இலங்கையின் பொருளாதாரமும், தொடரும் அரசியல் குழப்பங்களும்




சீனாவின் வூஹான் மாநிலத்திலிருந்து பரப்பப்பட்டதாகக் கூறப்படும் கொவிட் வைரசின் பின்னரான உலகப் பொருளாதாரம் மந்தமடைந்தது. அதிலும் குறிப்பாக அபிவிருத்தியடைந்து வரும் ஆசிய நாடான இலங்கையின் பொருளாதாரம் கடந்த காலங்களை விட பாரிய வீழ்ச்சி கண்டது. ஏற்கனவே மாறி மாறி இலங்கையை ஆட்சி செய்த அரசுகளின் தவறுகளால் இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சி நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்தது. கொவிட் வைரசின் தாக்கம் காரணமாக இலங்கையின் ஒட்டுமொத்தத் துறைகளும் ஸ்தம்பித்துப்போயின. சுற்றுலாத்துறையில் ஏற்பட்ட வீழ்ச்சி இலங்கையின் பொருளாதாரத்தை முற்று முழுதாக நிலைகுலைய வைத்தது. சர்வதேச விமானப் போக்குவரத்துக்கள் அனைத்தும் நிறுத்தப்பட்டன. உள்நாட்டில் உணவுப்பற்றாக்குறை ஏற்பட்டது. வேலைவாய்ப்பின்மையால் மக்கள் தவித்தனர். உணவுப்பொருட்களை இறக்குமதி செய்வதற்குத் தேவையான டொலர் பற்றாக்குறையால் அரசு சர்வதேச நாடுகளிடம். அமைப்புக்களிடம் கடனை எதிர்பார்த்து பேச்சுவார்த்தைகளை நடாத்திக்கொண்டிருந்தது. என்றுமில்லாதவாறு உள்நாட்டில் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் உயர்ந்தன. எரிபொருள் தட்டுப்பாடு. சமையல் எரிவாயு தட்டுப்பாடு. மருந்துப்பொருட்கள் தட்டுப்பாடு. நீண்ட வரிசை என மக்கள் செய்வதறியாது. நாடு முழுவதும் போராட்டங்களை முன்னெடுக்க ஆரம்பித்தனர். விவசாயத்திற்குத் தேவையான உர இறக்குமதித் தடையானது விவசாயிகளை வெகுவாகப் பாதித்தது. இது நாடளாவிய ரீதியில் அரசி உற்பத்திக்கு பாரிய பின்னடைவை ஏற்படுத்தியது. இலங்கையின் பிரதான ஏற்றுமதிகளான தேயிலை. இறப்பர். தைத்த ஆடைகள் என ஒட்டுமொத்த தொழிற்துறையும் கொவிட் பரவலால் சரிவினைச் சந்தித்தன. பொருளாதார வீழ்ச்சியால் வாழ்வாதாரச் சுமையினைத் தாங்க முடியாமல். அரசின் செயற்பாடுகளைக் கண்டித்து. பதவியில் இருந்த கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் உடனடியாகப் பதவி விலகி. ஆட்சிமாற்றம் ஏற்படவேண்டும் என்பதை வலியுறுத்தி. இளைஞர் யுவதிகள். சிவில் அமைப்புக்கள். பல்கலைக்கழக மாணவர்கள் என ஏராளமானோர் அணிதிரண்டு. காலி முகத்திடலில் பாரிய ஜனநாயகப் போராட்டமொன்றை முன்னெடுத்து. அதில் வெற்றியும் கண்டனர். தென்னிலங்கை மக்களால் தெரிவுசெய்யப்பட்ட முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் நாட்டைவிட்டு விரட்டப்பட்டார். இது மக்களது போராட்டத்திற்குக் கிடைத்த ஜனநாயக வெற்றியாக அனைவராலும் இன்றுவரை பேசப்படுகிறது.

மக்கள் விரும்பிய ஆட்சிமாற்றமும் வந்து சேர்ந்தது. அதே பழைய முகங்களைக் கொண்டு பதவிகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டது. பாராளுமன்ற வாக்கெடுப்பின் மூலமாக ஜனாதிபதியாக ரணில் விக்கரமசிங்க அவர்கள் தெரிவானார். இத்தெரிவிற்கு இன்று வரை சஜித் தலைமையிலான அணியினர். அநுரகுமார திசாநாயக்க அணியினர். ஏனைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர். ஹக்கீம் தரப்பு. றிசாட் பதியுதீன் அணியினர். மனோ கணேசன் தரப்பினர். சில சிங்களக் கட்சிகள் என பலரின் எதிர்ப்புக்கள் தொடர்கின்றது. இதில் ஒரு சிலர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நடவடிக்கைகள் நாட்டின் பொருளாதாரத்தினை வளர்ச்சிப் பாதை நோக்கிக்கொண்டு செல்லுமாகவிருந்தால். அவரின் நல்ல திட்டங்களுக்கு தமது ஆதரவு உண்டு என்பதை தெரிவித்தும் இருக்கின்றனர். நெருக்கடி மிகுந்த காலத்தில் நாட்டின் ஜனாதிபதிப் பொறுப்பினை ஏற்க தயாராகவிருந்த ரணில் விக்கிரமசிங்க அவர்களை பலரும் பாராட்டினர். அதற்கேற்றாற்போல நாட்டின் இன்றைய பொருளாதாரத்தில் சில மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதையும். அரச திணைக்களங்கள் தொடர்பிலான சீர்திருத்த நடவடிக்கைகளும். அரச கொள்கைத்திட்டங்களும் பொருளாதார வீழ்ச்சியில் இருந்து இலங்கை மிக விரைவில் மீண்டுவர தேவையானவை என அவதானிகள் கருத்துத் தெரிவித்துமிருக்கின்றனர். கோட்டாபய ராஜபக்ஷ அரசு கொண்டு வந்த திட்டங்களில் தற்போது மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. உர இறக்குமதிக்கானத் தடையும். ஏனைய பொருட்கள் மற்றும் வாகனங்கள் மீதான தடையும் நீக்கப்பட்டு. நாட்டின் பொருளாதாரத்தினை சரிசெய்ய வழிவகைகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக. அரசால் கூறப்படுகிறது. தற்போது சீனாவின் சினோபெக். அவுஸ்திரேலியாவின் யுனைடெட் பெட்ரோலியம் மற்றும் அமெரிக்காவின் ஆர்.எம்.பாக்ஸ் என்ற மூன்று நிறுவனங்களுக்கு இலங்கையில் எரிபொருள் சில்லறை விற்பனை சந்தையில் நுழைவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள விடயம் முக்கியமானதாகப் பார்க்கப்படுகின்றது. ஒருபக்கம் தனக்குக் கடுமையான எதிர்ப்பு இருந்தாலும். உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுக்களை நடாத்தி. வெற்றிகரமாக கடன்களைப் பெற்றிருக்கிறார் ரணில் விக்கிரமசிங்க. அதேநேரம் மக்கள் மீதான கடன் சுமை இன்னுமின்னும் அதிகரித்திருக்கிறது. மின்சாரக் கட்டணம். வரி-வட்டி என மக்கள் இன்னமும் இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். அத்தியாவசியப் பொருட்களின் விலைகளில் ஓரளவு மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. சமையல் எரிவாயு மற்றும் எரிபொருட்களின் விலைகளும் வீழ்ச்சியடைந்துள்ளன. எனினும் மக்களின் வாழ்க்கைச் சுமையைத் தணிக்க இவ் விலைக்குறைப்புக்கள் போதாது என்பதே உண்மை.

நீண்டகாலத் திண்டங்களை கையில் எடுத்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் செயற்பாடுகளை வரவேற்கும் தென்னிலங்கையின் சில பொருளாதார நிபுணர்கள். சர்வதேச பிரதிநிதிகள். அவர் மீதும் கடந்த காலங்களில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள. இந்நாட்டின் பொருளாதாரத்தைச் சீரழித்த மத்திய வங்கியின் பிணைமுறி விவகாரம் தொடர்பில் கருத்தில் எடுக்கவில்லை. ஊழல் மோசடிகள் நிறைந்த நாடு எவ்வாறு பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீள்வது என்பது தொடர்பிலும் கவனம் செலுத்தப்படவேண்டும். இலங்கையின் பொருளாதாரவீழ்ச்சிஎனப்பேசிக்கொண்டு. அதற்குத் தீர்வு காண வேண்டும் எனப் பேசிக்கொண்டு. கடந்த கால இந்நாட்டின் பொருளாதாரத்தைச் சீரழித்த பாரிய ஊழல் மோசடிகள் குறித்து இன்று மறைக்கப்பட்டுள்ளது. இது இந்நாட்டின் மக்களுக்குச் செய்யும் பாரிய துரோகமாகும். கடந்த காலங்களில் இலங்கையை ஆட்சி செய்த ஆட்சியாளர்களுள் இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களும் உள்ளடங்குகிறார் என்பது தற்போது மறைக்கப்பட்டுள்ளது. ஒருபக்கம் பொருளாதாரம் குறித்துப் பேசிக்கொண்டு மறுபக்கத்தில் இனங்கள். மதங்களுக்கிடையில் குழப்பங்களை விளைவிக்கும் நோக்கில் பௌத்த பிக்குகள் கும்பல் ஒன்று வடக்கு மற்றும் கிழக்கில் களமிறக்கப்பட்டுள்ளது. அவர்கள் தமிழர் பிரதேசமெங்கும் பௌத்த விகாரைகளை அமைப்பதும் சிங்களக் குடியேற்றங்களை அமைத்து இனப்பரம்பலை விருத்தி செய்து இன்று தமிழர் பிரதேசங்களில் தேர்தல்களில் போட்டியிடும் அளவிற்கு நிலைமைகள் மாறியுள்ளது. கிழக்கில் அடாவடித்தனங்களில் சில பௌத்த பிக்குகளே ஈடுபடுகின்றனர். முஸ்லீம் மக்கள் மீதும் இவர்களின் தேவையற்ற தலையீடுகள். அடாவடிச் செயற்பாடுகள் தொடர்கின்றன. மேய்ச்சல் நிலங்கள். காணி அபகரிப்பு. பௌத்த விகாரைகளை அமைத்தல் என அங்கும் குழப்பங்கள் தொடர்கின்றன. இந்நாட்டின் பொருளாதாரத்திற்கு முதுகெலும்பாக இருக்கும் மலையக மக்கள் இன்றும் அடிப்படை வசதிகளைப் பெற்றுக்கொள்வதில் பாரிய சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். அவை தொடர்பில் அரசாங்கங்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. ஐ.நாவைச் சமாளிக்க. நிதியைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் சர்வதேச நாணய நிதியம் போன்ற சர்வதேச அமைப்புக்களை. வங்கிகளை சமாளிக்க. தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கானத் தீர்வு குறித்து அரசால் பேசப்படுகிறதே தவிர. உள்நாட்டில் தமிழர் பிரச்சினைகளுக்கானத் தீர்வினை வழங்க அரசு தயாரில்லை. இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் கேள்விக்குறியாகவிருக்கின்ற போது எவ்வாறு நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சி நோக்கிப் பயணிக்கும். கடந்த காலங்களை நாம் எடுத்துப்பார்த்தால் அரச திட்டங்கள் அனைத்தும் தோல்வியில் முடிவடைந்துள்ளன. உள்நாட்டில் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் அல்லது வருவாயை அதிகரிக்கும் நோக்கில் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. கடன்களைப் பெற்று மக்களின் மீது சுமை ஏற்றப்படுகிறது. தென்னிலங்கையில் தொடரும் அரசியல் குழப்பங்களானது நாட்டினை தொடர்ந்தும் சீரழிக்கும். இனவாத சிந்தனையும் பௌத்த மேலாதிக்கமும் மேலோங்கியிருக்கிற இந்த நாட்டில். ஏனைய இனங்களான தமிழர் மற்றும் முஸ்லீம்கள் நிம்மதியாக வாழ முடியாது. திட்டமிட்டு இனங்களுக்கிடையில் குழப்பங்கள் ஏற்படுத்தப்படுகிறது. வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள தமிழ்க் கட்சிகளுக்குள்ளேயே பிளவுகள் திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதுவும் தமிழர் மத்தியிலான ஒற்றுமையை சீர்குலைத்துள்ளது.

இதேவேளை. பொருளாதார நெருக்கடியை சமாளிக்க இலங்கைக்கு தொடர்ந்து ஆதரவளிக்கப்படும் என ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது. எதிர்காலத்தில் சலுகை நிதியை வழங்குவதன் ஊடாக இலங்கைக்கு ஆதரவை வழங்க எதிர்பார்த்துள்ளதாக அதன் உள்நாட்டு இயக்குநர் தெரிவித்துள்ளார். இந்த இக்கட்டான நேரத்தில் இலங்கைக்கு உதவ சர்வதேச நாணய நிதியம் தயாராக இருப்பதாக சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா தெரிவித்துள்ளார். வோஷிங்டனில் உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் இணைந்து நடத்திய மாநாட்டின் பின்னர் அவர் கருத்து தெரிவிக்கும் போது. நெருக்கடியில் இருந்து விடுபடுவதற்கு இலங்கையுடன் ஒன்றிணைந்து தமது பங்களிப்பை வழங்குவது முக்கியமானது எனவும் அவர் தெரிவித்துள்ளார். சீனா. இந்தியா மற்றும் பாரிஸ் கிளப் உள்ளிட்ட கடனாளிகளுடன் கடன் மறுசீரமைப்பு தொடர்பான உடன்படிக்கைகளை மே மாதம் எட்டுவதற்கு எதிர்பார்க்கப்படுவதாக மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார். இந்த விடயங்களும் தற்போதைய இலங்கையின் நெருக்கடிச் சூழலில் இலங்கைக்கு சாதகமாகவே பார்க்கப்படுகின்றது. நீண்ட காலமாக ஒத்திவைக்கப்பட்டுள்ள மாகாண சபைகளுக்கானத் தேர்தல் இன்னமும் நடாத்தப்படவில்லை. தேர்தல் அறிவிப்பு வந்தும் உள்ளூராட்சி மன்றங்களுக்கானத் தேர்தல் தொடர்ந்தும் தேர்தல் ஆணைக்குழுவால் ஒத்திவைக்கப்பட்டு வருகிறது. அரசிடம் போதிய நிதி தற்போதைக்கு இல்லை என்பது வெளிப்படையாக நீதிமன்றத்தில் கூட அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்குள் தென்னிலங்கைக் கட்சிகள் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் எப்படியாவது பதவியைப் பிடிக்க வேண்டும் எனத் துடிக்கின்றன. இதில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தானும் வேட்பாளராகப் போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளார். எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஜனாதிபதிப் பதவியினைக் குறிவைத்து கிராமந்தோறும் பயணிக்க ஆரம்பித்துவிட்டார். தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களும் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கானத் தேர்தலை ஒத்திவைத்து. நேரடியாக ஜனாதிபதித் தேர்தலை வைத்து. தான் மக்களால் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படவேண்டும் என கங்கணம்கட்டி. உள்ளூர் மற்றும் சர்வதேச ரீதியாக தனக்கு இருக்கும் அதிகாரம் மற்றும் நட்பினை பயன்படுத்தி தன்னையும். இன்று பலமிழந்து சுக்குநூறாக உடைந்துபோயுள்ள ஐக்கிய தேசியக் கட்சியினையும் பலப்படுத்தும் நோக்கில் ஈடுபட்டு வருகின்றார். மொட்டுக் கட்சியினர் பிறிதொரு நபரை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகக் களமிறக்கக்கூடும் எனவும். பலர் இன்றைய ஜனாதிபதி ரணில் அவர்களுக்கே ஆதரவளிக்கக்கூடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆகவே. இலங்கையினது பொருளாதாரத்தினை கடன்களைப் பெறுவதால் மாத்திரம் சரி செய்து விட முடியாது. நீண்டகாலத் திட்டங்களை வகுப்பதால் மாத்திரம் சரி செய்து விட முடியாது. ஜனநாயக நாடு என்று சொல்லப்படும் இலங்கை. ஜனநாயகப் பண்புகளை கடைபிடிக்க வேண்டும். இந்நாட்டில் நீண்டகாலமாக புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கானத் தீர்வு தொடர்பில். சிந்தித்து கலந்துரையாடி தீர்மானங்களை எட்ட வேண்டும். பௌத்த மயமாக்கலும். இனவாத சிந்தனைகளும். மதவாதப் போக்கும். பௌத்த மேலாதிக்க சிந்தனைகளும் கைவிடப்பட வேண்டும். அரச மற்றும் சர்வதேச கொள்கைகள் மாற்றப்படாது நிலையானதாகப் பின்பற்றப்பட வேண்டும். காலத்திற்கேற்ப சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படலாம் ஆனால் நாட்டின் தீர்மானங்கள் அரசியல் கட்சிகளுக்காக. தத்தமது சுயநலப்போக்கிற்காக. ஊழல் மோசடிகளுக்காக. துதிபாடுவதற்காக. பௌத்த மேலாதிக்கத்திற்காக மாற்றப்படக்கூடாது. இந்நாட்டில் வாழும் மூவின மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். குறிப்பாக வடக்கு கிழக்கில் பூர்வீகமாக வாழும் தமிழர் தேசங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். நாம் அரசிடம் மாத்திரமல்ல. சர்வதேசத்திடம் கோரும் எமக்கான உரிமைகள் வழங்கப்பட வேண்டும். அரசின் சுயநல நிகழ்ச்சிநிரல் மூவின மக்களுக்கும் சரிவராது.

இவ்வுலக மாற்றத்திற்கேற்ப இலங்கையின் பொருளாதாரக் கட்டமைப்புகள். நவீன தொழில்நுட்பங்கள். வேலைவாய்ப்புக்கள். உட்கட்டமைப்பு வசதிகள். உற்பத்திகள். கல்வி. சுகாதாரம். மருத்துவம் என அனைத்தும் சீரமைக்கப்பட வேண்டும். அக்கொள்கைகள் கடைபிடிக்கப்படவேண்டும். நாட்டின் பொருளாதார நிபுணர்களின் ஆலோசனைகள். சமூக ஆர்வலர்கள். பொது அமைப்புக்களுடன் அரசு இணைந்து நாட்டின் வேலைத்திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடுவது மாத்திரமல்ல. திட்டங்களை நடைமுறைப்படுத்தப்படவேண்டும்.

உலக வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள சமீபத்திய அறிக்கையின்படி. உலகில் அதிக உணவுப் பணவீக்கம் உள்ள நாடுகளில் இலங்கை 10வது இடத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளது. கடந்த ஆண்டு செப்டம்பரில். பணவீக்கம் உச்சத்தில் இருந்தபோது. சிம்பாப்வே மற்றும் லெபனானுக்கு அடுத்தபடியாக இலங்கை இருந்த நிலையில் இன்று மாற்றம் நிகழ்ந்துள்ளதாக அறிக்கை சொல்கிறது. நல்ல மாற்றங்கள் வருகிற போது நாட்டின் ஆட்சியாளர்கள் மத்தியில். அரசியல்வாதிகள் மத்தியில். மதத் தலைவர்கள் மத்தியில். நல்ல சிந்தனைகளும் வரவேண்டும். இந்நாட்டின் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கானத் தீர்வுகளை இந்த மாற்றங்களால் நிச்சயமாகத் தீர்த்துவைக்க முடியும். இலங்கையின் பொருளாதாரத்தினை வளர்ச்சி நோக்கிக் கொண்டு செல்லவும் முடியும். ஆனால். இங்கிருக்கும் பிரச்சினை என்னவெனில். தென்னிலங்கையில் யார் ஆட்சிக்கு வந்தாலும் இனவாத நிகழ்ச்சிநிரலும். பௌத்தமயமாக்கலும். மேலாதிக்க சிந்தனைகளும் மாற்றப்படுவதில்லை என்பதே கசப்பான உண்மை.

**சசிகரன்**

# பிராந்திய செய்திகள்

## முட்டை இருப்புக்களின் மாதிரிகள் எதிர்வரும் திங்கட்கிழமை பெறப்படும்

இலங்கைக்கு அன்று (15)கொண்டுவரப்படவுள்ள முட்டை இருப்புக்களின் மாதிரிகள் எதிர்வரும் திங்கட்கிழமை பெறப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது இந்தியாவில் இருந்து சுமார் 4 மில்லியன் முட்டைகள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

மேலும், எதிர்வரும் வாரத்தில் மேலும் இரண்டு மில்லியன் முட்டைகள் இலங்கைக்கு கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளது.

## துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி

அ/ஹங்கல்ல மித்தரமுல்ல பகுதியில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவரால் அன்று (14) இரவு மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்துள்ளார். இரண்டு சிறிய குழந்தைகளுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் ஒருவரை இலக்கு வைத்து இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.



துப்பாக்கிச் சூட்டில் பலத்த காயமடைந்த நபர் சிகிச்சைக்காக பலபிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார். துப்பாக்கிச் சூட்டுச் சத்தத்தின் பின்னர் மோட்டார் சைக்கிள் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதாகவும், அதில் பயணித்த இரண்டு சிறுவர்களும் சிறு காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்தவர் 29 வயதுடைய மித்தரமுல்ல பிரதேசத்தைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர்கள் தப்பிச் சென்றுள்ளதுடன், கொலைச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அ/ஹங்கல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சாய்ந்தமருதில் ஆண்களுக்கான பிரத்தியேக காட்சியறை

நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் கிளை நிறுவனங்களை கொண்டு இயங்கும் முபாரக் குழுமத்தின் மற்றுமொரு நிறுவனமான முபாறக் இமேஜ் நிறுவனம் சாய்ந்தமருது பிரதான வீதியில் முபாறக் குழுமத்தின் நிர்வாக இயக்குனர் எம்.எஸ். முபாறக் தலைமையில் அன்று (14) மாலை திறந்து வைக்கப்பட்டது.

ஆண்களுக்கு மட்டுமேயான காட்சியறையாக இருக்கும் இந்த முபாறக் இமேஜ் நிறுவனத்தை முபாறக் டெக்ஸ்டைல்ஸ் நிறுவுனரும், முபாறக் குழுமத்தின் நிர்வாக இயக்குனர் எம்.எஸ். முபாறக் அவர்களின் தந்தையுமான அல் ஹாஜ் எம். மீராசாஹிப் அவர்கள் நாடாவை வெட்டி குறித்த நிறுவனத்தை திறந்து வைத்தார். உலக நாடுகளில் இருந்து ஆடையணிகளை புதிது புதிதாய் நேரடியாகவும், பிரத்தியேகமாகவும் தருவித்துக் தருவதில் முன்னணியில் திகழ்வதோடு, வருடம் முழுவதுமே வேறெங்கும் கிடைக்காத விஷேட விலைகளில் அனைத்தையும் வழங்கும் முபாறக் டெக்ஸ்டைல்ஸ் கிழக்கின் மாபெரும் ஜவுளி சமுத்திரமாகும்.

இந்த முபாறக் குழும நிறுவனங்களில் திருமண பட்டுச்சாறிகள், கூறைச்சாறிகள், வெல்வெட் லெஹங்கா , காக்ரா சோளீ , நீண்ட திருமண ஆடைகள், முழுமையாக அலங்காரம் செய்யப்பட்ட சாறி, தாய்லாந்து பாதணிகள் , திருமண ஆடைகள் உட்பட மணப் பெண்களுக்குத் தேவையான ஆடையணி வகைகளுடன் , திருமண கோட், சூட், குர்தா போன்றவற்றை தரமானதாக நியாய விலையில் கொள்வனவு செய்யலாம் . தேர்ந்தெடுக்கப்பட்ட துணிகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட ஆடையணி வகைகள் நேர்த்தியான முறையில் தயாரிக்கப்பட்ட ஆடையணிவகைகள், ஆடவர் மகளிர், சிறுவர் சிறுமியருக்கான அனைத்துவித ஆடையணிவகைகளும் முபாறக் டெக்ஸ்டைல்ஸில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது .

முபாறக் இமேஜ் நிறுவன திறப்பு விழாவில் முபாறக் குழும நிர்வாக பணிப்பாளர்கள், வர்த்தக பிரமுகர்கள், உலமாக்கள், ஊடகவியலாளர்கள், முபாறக் நிறுவனங்களின் உத்தியோகத்தத்தார்கள், ஊழியர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.





## கிணற்றில் விழுந்து சிறுவன் பலி!

கஹட்டகஸ்திகிலிய நெகுடவெவ பிரதேசத்தில் பாதுகாப்பற்ற கிணற்றில் தவறி விழுந்து சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளார். குறித்த பிரதேசத்தை சேர்ந்த 16 வயதுடைய சிறுவன் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வீட்டிற்கு அருகில் சிறுவர்களுடன் விளையாடிக் கொண்டிருந்த போது இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின் போது பாதுகாப்பற்ற கிணற்றில் தண்ணீர் நிறைந்திருந்ததாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. சடலம் கஹட்டகஸ்திகிலிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## புத்தாண்டில் பற்றி எரிந்த முச்சக்கரவண்டி

அன்று (14) புத்தாண்டை முன்னிட்டு உறவினர் வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்த குழுவினரை ஏற்றிச் சென்ற முச்சக்கரவண்டி திடீரென தீப்பற்றி எரிந்துள்ளது.

தீயினால் முச்சக்கரவண்டி முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதாக களுத்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர்.

ராகம பிரதேசத்தில் வசிக்கும் குழுவினர் அகலவத்தை பகுதிக்கு சென்று கொண்டிருந்த போது இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த தீ விபத்தில் பயணிகள் யாருக்கும் காயம் ஏதும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.



## சொந்த ஊர்களுக்கு சென்ற பொதுமக்கள், மீண்டும் பணிக்கு திரும்ப விசேட பஸ் மற்றும் ரயில்கள் !

புத்தாண்டை முன்னிட்டு, தமது சொந்த ஊர்களுக்கு சென்ற பொதுமக்கள், மீண்டும் கொழும்புக்கு திரும்புவதற்காக, அன்று(15) முதல் சில விசேடரயில்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுவதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. எதிர்வரும் 17 ஆம் திகதி வரை குறித்த விசேட ரயில்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக அந்தத் திணைக்களத்தின் பிரதி போக்குவரத்து அதிகாரி என்.ஜே. இந்திபொலகே தெரிவித்துள்ளார்

இதேவேளை, தமது சொந்த ஊர்களுக்கு சென்ற பொதுமக்கள், மீண்டும் கொழும்புக்கு திரும்புவதற்காக, அன்று(15) முதல் விசேட பஸ்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட உள்ளதாக, இலங்கை போக்குவரத்து சபையின் போக்குவரத்து திணைக்கள பிரதி பொது முகாமையாளர் பண்டுக ஸ்வர்ணஹங்ச தெரிவித்துள்ளார். கொழும்பிலிருந்து வெளி பிரதேசங்களுக்கு செல்வதற்காகவும், பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அன்றைய(15) தினம், 10 முதல் 15 சதவீதமான பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட உள்ளதாக, இலங்கை தனியார் பேரூந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார். ஞாயிற்று கிழமை முதல், 25 முதல் 50 சதவீதமான பஸ்களை சேவையில் ஈடுபடுத்த எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## குரங்குகளை, சீனாவில் உள்ள விலங்கியல் பூங்காக்களுக்கு வழங்குவது தொடர்பில் பிரச்சினை

இலங்கையில் உள்ள குரங்குகளை, சீனாவில் உள்ள விலங்கியல் பூங்காக்களுக்கு வழங்குவது தொடர்பில் ஏற்பட்டுள்ள பிரச்சினை, அமைச்சரவையில் முன்வைக்கப்படும் என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் ஆராய்வதற்காக, அமைச்சரவையினால் குழுவொன்று நியமிக்கப்படும் என்றும் அந்த அமைச்சு கூறியுள்ளது.

இலங்கையின் குரங்குகளை சீனாவுக்கு வழங்குவது தொடர்பில், ஆராய்வதற்காக வனவளத்துறை, நீதி பெருந்தோட்ட மற்றும் விவசாய அமைச்சுக்களை சேர்ந்த 4 அதிகாரிகள் கொண்ட குழு அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டிருந்தது.

சீனாவின் அதிகாரிகள் சிலரினால் இலங்கையில் உள்ள குரங்குகளை சீனாவில் உள்ள விலங்கியல பூங்காக்களுக்கு வழங்குமாறு விவசாய அமைச்சுக்கு முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதன் முதற்கட்டமாக, இலங்கையில் உள்ள ஒரு இலட்சம் குரங்குளை சீனாவுக்கு அனுப்பும் எதிர்பார்ப்புடன் அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக விவசாய அமைச்சில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும், இந்த விடயம் தொடர்பாக சமூகத்தில் பாரிய கருத்தாடல் ஏற்பட்டுள்ளதுடன், இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படும் முறைமை தொடர்பில், அரசாங்கம் இதுவரையில் உரியவாறு தெளிவுபடுத்தவில்லை என சூழலியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, இலங்கை குரங்குளை சீனாவுக்கு ஏற்றுமதி செய்யவதற்கு முன்னர், குரங்குகள் குறித்து முறையான கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்றும் சூழலியலாளர்கள் வலியுறுத்துகின்றனர்.



# சினி துளிகள்



## சீதா ராமம் பட நடிகையின் சொத்து மதிப்பு!



மராத்தி. ஹிந்தி மொழி படங்களில் நடித்து வந்த மிருணாள் தாகூர். கடந்த ஆண்டு துல்கர் சல்மான் நடிப்பில் வெளிவந்த சீதா ராமம் படத்தின் மூலம் தென்னிந்திய சினிமாவில் தடம் பதித்தார்.

இப்படம் தெலுங்கு. தமிழ். மலையாளம். ஹிந்தி என அனைத்து மொழிகளிலும் வெளியாகி நல்ல வரவேற்பு பெற்றது. இதையடுத்து மிருணாள் தாகூர் தென்னிந்திய படங்களில் நடிக்க ஆர்வம் காட்டி வருகிறார்.

இந்நிலையில் குறுகிய காலத்திலேயே புகழ் உச்சிக்கு சென்ற மிருணாள் தாகூரின் சொத்து மதிப்பு விவரம் சமூக வலைத்தளங்களில் வெளியாகிவுள்ளது. அதில் இவரின் சொத்து மதிப்பு ரூபாய். 33 கோடி என்று கூறப்படுகிறது.

## நஸ்ரியாவின் பட வாய்ப்பை தட்டி பறித்த நயன்தாரா

தமிழ் சினிமாவின் பிரபல இயக்குனராகளில் ஒருவர் தான் விக்னேஷ் சிவன். இவர் இயக்கத்தில் 2015 -ம் ஆண்டு வெளிவந்த நானும் ரவுடி தான் படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் பாப்புலர் இயக்குனராக மாறினார்.

இப்படத்தில் விஜய் சேதுபதி. நயன்தாரா. பார்த்திபன். ஆர்.ஜே பாலாஜி போன்ற பல பிரபலங்கள் நடித்திருந்தனர். இப்படத்திற்கு மக்கள் மாபெரும் வரவேற்பு கொடுத்தனர்.

இந்நிலையில் நானும் ரவுடி தான் படத்தில் நயன்தாரா நடித்த கதாபாத்திரத்தில் முதலில் நடிகை நஸ்ரியாவை நடிக்கவைக்க விக்னேஷ் சிவன் திட்டமிட்டுள்ளார்.

ஆனால் இப்படத்தின் தயாரிப்பாளர் தனுஷ் நயன்தாரா தான் இந்த கதாபாத்திரத்திற்கு பொருத்தமாக இருப்பார் என்று கூறியுள்ளார். இதன் பின்னர் தான் நயன்தாரா கதாநாயகியாக நடித்ததாக விக்னேஷ் சிவன் பேட்டி ஒன்றில் கூறியுள்ளார்.



## பொன்னியின் செல்வன் 2 முதல் விமர்சனம்



மணிரத்னம் இயக்கத்தில் கடந்த ஆண்டு வெளி வந்த திரைப்படம் பொன்னியின் செல்வன். இப்படத்தில் ஜெயம் ரவி. விக்ரம். ஐஸ்வர்யா ராய். திரிஷா. கார்த்தி மற்றும் பல முன்னணி நட்சத்திரங்கள் நடித்திருந்தனர்.

எதிர்பார்த்ததை விட மாபெரும் அளவில் இப்படம் வெற்றி பெற்றது. வசூலில் ரூ. 500 கோடிக்கும் மேல் வசூல் செய்து பாக்ஸ் ஆபிஸில் சாதனை படைத்தது. முதல் பாகத்தின் வெற்றியை தொடர்ந்து அடுத்ததாக பொன்னியின் செல்வன் 2 வருகிற 28ஆம் திகதி வெளியாகிறது.

இந்நிலையில். பொன்னியின் செல்வன் படத்தை பார்த்துவிட்டதாக கூறிய வெளிநாட்டு சென்சார் குழு உறுப்பினரும். திரைப்பட விமர்சகருமான உமைர் சந்து பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இதில் "பொன்னியின் செல்வன் கண்டிப்பாக படுதோல்வியடையும்" என்று கூறியுள்ளார். ஆனால். இதுவரை வெளிநாட்டு சென்சார் குழுவிடம் படம் போகவில்லை என்றும். அதற்குள் எப்படி இவர் மட்டும் படம் பார்த்துவிட்டு விமர்சனம் கூறியுள்ளார் என்றும் கேள்வி எழுந்துள்ளது.

தொடர்ந்து திரை பிரபலங்கள் மீதும். படங்கள் குறித்தும் மோசமான விமர்சனம் தெரிவித்து வரும் உமைர் சந்து மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என ரசிகர்கள் கூறி வருகிறார்கள்.

இதன் மூலம் பொன்னியின் செல்வன் 2 குறித்து உமைர் சந்து கூறியுள்ள விமர்சனம் பொய் என தெரியவந்துள்ளது.

## புதிய போஸ்டர் வெளியிட்டு ரசிகர்களுக்கு வாழ்த்து தெரிவித்த "தீராக்காதல்"



இயக்குனர் ரோகின் இயக்கத்தில் ஜெய் நடிக்கும் திரைப்படம் "தீராக் காதல்".இந்த படத்தில் ஐஸ்வர்யா ராஜேஷ். ஷிவதா ஆகியோர் கதாநாயகிகளாக நடிக்கின்றனர். லைகா நிறுவனம் தயாரிக்கும் இப்படத்திற்கு சித்து குமார் இசையமைக்கிறார். ரவிவர்மன் நீலமேகம் ஒளிப்பதி செய்கிறார். பிரசன்னா ஜி.கே. படத்தொகுப்பு மேற்கொள்கிறார். தீராக்காதல் போஸ்டர் இப்படத்தின் ஃபர்ஸ்ட்லுக் போஸ்டர் மற்றும் முதல் பாடல் சமீபத்தில் வெளியாகி கவனம் பெற்றது. இந்நிலையில். தமிழ் புத்தாண்டை முன்னிட்டு "தீராக்காதல்" படக்குழு ரசிகர்களுக்கு வாழ்த்து தெரிவித்து புதிய போஸ்டர் ஒன்றை வெளியிட்டுள்ளது. ஜெய் மற்றும் ஐஸ்வர்யா ராஜேஷ் இடம்பெற்றுள்ள இந்த போஸ்டரில் படம் விரைவில் வெளியாகவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

## தமிழில் மார்க்கெட்டை இழந்த நடிகை அமலா பால்



தமிழ் திரையுலகில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன் முன்னணி நடிகையாக இருந்தவர் அமலா பால்.

இவர் நடிப்பில் கடைசியாக தமிழில் வெளிவந்த திரைப்படம் கடாவர். இப்படமும் நேரடியாக ஓடிடியில் தான் வெளிவந்தது. இதன்பின் அதோ அந்த பறவை போல எனும் தமிழ் படத்தில் நடித்திருந்தார்.

இப்படம் இதுவரை வெளிவரவில்லை. பட வாய்ப்புகள் எதுவும் அமலா பாலுக்கு இல்லாத காரணத்தினால் அவர் மார்க்கெட்டை இழந்துவிட்டார் என கோலிவுட் வட்டாரத்தில் கூறப்படுகிறது.

இந்நிலையில் சமீபத்தில் அமலா பால் நடிப்பில் ஹிந்தியில் வெளிவந்த திரைப்படம் தான் போலோ. இப்படத்தில் நடிப்பதற்காக ரூ. 25 லட்சம் சம்பளமாக வாங்கினாராம் நடிகை அமலா பால்.

## "கே.ஜி.எப் –3" ஹிண்ட் கொடுத்த படக்குழு




பிரசாந்த் நீல் இயக்கத்தில் யஷ் நடிப்பில் கடந்த ஆண்டு வெளியான படம் "கேஜிஎப்-2". இதில் சஞ்சய் தத். ரவீணா தாண்டன். ஸ்ரீநிதி ஷெட்டி உள்ளிட்ட பலரும் நடித்திருந்தனர். ரசிகர்களின் மாபெரும் எதிர்ப்பார்ப்பில் வெளியான இப்படம் பல முன்னணி ரசிகர்களின் படங்களை பின்னுக்கு தள்ளி வசூல் ரீதியாக சாதனை படைத்தது.

இந்நிலையில். "கேஜிஎப்-2" திரைப்படம் வெளியாகி ஒரு வருடம் நிறைவுற்றுள்ளது. இதனை படக்குழு சமூக வலைதளத்தில் பதிவு ஒன்றை பகிர்ந்து தெரிவித்துள்ளது. அந்த பதிவில். "கேஜிஎப் 2 மறக்க முடியாத கதாபாத்திரங்கள் மற்றும் ஆக்ஷன் காட்சிகள் மூலம் நம்மை கலைத்துவமிக்க பயணத்தில் அழைத்து சென்றது.

ரெக்கார்டுகளை தகர்த்தது. பார்வையாளர்களின் இதயங்களை வென்றது" என குறிப்பிட்டுள்ளது.

கே.ஜி.எப் மேலும். இதோடு வீடியோ ஒன்றையும் வெளியிட்டுள்ளது. அந்த வீடியோவின் 36-வது நொடியில் "1978-81 வரை ராக்கி எங்கே இருந்தார்?" என அடுத்த பாகத்திற்கு ஹிண்ட் கொடுக்கப்பட்டுள்ளது.

இதனால் உற்சாகமடைந்த ரசிகர்கள் வீடியோவை அதிகம் பகிர்ந்து வருகின்றனர். இயக்குனர் பிரசாந்த் நீல் "கேஜிஎப் -3" திரைக்கதை பணியில் ஈடுபட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மாவிலாறு மகிந்தவும் முள்ளிவாய்க்கால் பிரபாகரனும் நடந்தது என்ன?



சுழியோடி

16

மன்னார் உயிலங்குளம் சோதனைநிலைய கண்காணிப்பில் இருந்து சர்வதேச செஞ்சிலுவை குழு விலகிக்கொண்ட அதே வேளை மறுபுறம் வவுனியா ஓமந்தை சோதனை நிலையம் ஊடான அரச சார்பற்ற நிறுவனங்கள் அரச நிறுவனங்களின் போக்குவரத்து நடைபெற்றுக்கொண்டிருந்தது. எனினும் வன்னி மீதான பொருளாதார தடையினை சிறிலங்கா அரசு மேலும் இருக்குகிறது. பொருளாதார தடையை இறுக்கிய படி வன்னி மீது பரவலாக வான்வழி தாக்குதல்கள் தீவிரப்படுத்தப்படுகிறது. மக்கள் குடியிருப்புக்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட அதே வேளை விடுதலைப்புலிகளின் வான்படையினரை அளிக்கும் நோக்கில் இரணைமடு விமானதளம் மீதும் தாக்குதல் நடத்தப்படுகிறது.

வேவு விமானம் மூலம் எடுக்கப்பட்ட தகவல்களினதும் தரைவழியாக எடுக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையிலும் இந்த தாக்குதல்களை நடத்திய சிறிலங்கா வான் படையினர். பின்பு அதனை அண்மித்த காட்டுப்பகுதிகள் மீதும் குறிப்பாக விடுதலைப்புலிகளின் முகாம்கள் பயிற்சி முகாம்களை இனங்கண்டுபிடித்து தாக்குதல்களை நடத்துகின்றார்கள்.

இதன் போது விடுதலைப்புலிகளின் வான்படைத்தளம் பயிற்சி தளங்கள் முதன்மையானவர்கள் கூடும் இடங்கள். பெரும் முகாம்கள் வெடிபொருள் களஞ்சியங்கள் ஆயுத வெடிமருந்து உற்பத்தி நிலையங்கள் உள்ளிட்டவை தாக்குதலுக்கு இலக்காகின்றன. இத்தாக்குதல்கள் வெற்றி பெறுவதற்கான காரணங்கள் வேவு விமானத்தின் வேவு நடவடிக்கை மட்டுமல்ல விண்வெளி ஊடாக பெறப்பட்ட தகவல்களும் தான் என்பது இங்கு முக்கியமானது. கிழக்கு மாகாணத்தை முழுமையாக ஆக்கிரமித்திருந்த சிறிலங்கா அடுத்து வன்னி மீது இலக்கு வைத்தது. அதுக்கு முன்னதாக மன்னார் மாவட்டத்தை கைப்பற்ற திட்டமிட்டு மன்னார் மாவட்டத்தின் தென்பகுதியில் சிறிலங்கா படையினர் கடல்வழியாக தரையிறக்கம் ஒன்றை செய்து மன்னார் மாவட்டத்துக்கான தாக்குதலை ஆரம்பித்து இருந்தார்கள்.

இதன் போது குறிப்பிட்ட நாட்களுக்குள் மன்னாரின் முசாலி பிரதேசம் சிறிலங்கா படையினர் வசம் விழுகிறது. இதில் இருந்த விடுதலைப்புலிகள் மன்னாரின் வடக்கு பகுதி நோக்கி நகர்கிறார்கள். சிறிலங்காவின் தென்பகுதி மீது விடுதலைப்புலிகள் தாக்குதல்கள் நடத்துவதற்கு இந்த முசாலி பிரதேசம் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. வன்னியில் இருந்து வெடிபொருட்கள் புத்தளம் ஊடாக தென்பகுதிக்கும் கடத்தும் பாதையாக முசாலி பிரதேசம் காணப்பட்டது. இதனை கைவிட்ட விடுதலைப்புலிகள் பின்னர் ஏனைய வழிகளுடாக விடுதலைப்புலிகள் தங்கள் தொடர்புகளை மேற்கொள்கிறார்கள். குறிப்பாக வில்பத்து சரணாலயம் ஊடான பாதை பயன்படுத்தப்பட்டது. அன்று வில்பத்து சரணாலயத்தின் வடக்கு பகுதியில் விடுதலைப்புலிகள் தளம் ஒன்றை அமைத்திருந்தார்கள். நிலைமை இவ்வாறிருக்க களத்தில் போர் நிலைமைகள் வலுவடைகின்றன. அங்கங்கே களமுனைகள் புதிது புதிதாக திறக்கப்படுகின்றன. மன்னார் பகுதியில் விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா படையினருக்கும் தாக்குதல்கள் நடந்தேறுகின்றன. இதே வேளை மணலாற்று பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் அங்குள்ள முன்னணி விடுதலைப்புலிகளின் களமுனைகளுடாக மோதல்களை தொடங்குகிறார்கள். இதனால் தாக்குதல்கள் பல பகுதிகளிலும் வலுப்பெறுகின்றன.

இதேவேளை சிறிலங்கா படையினரின் கட்டுப்பாட்டில் நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போராளிகளின் சிறு சிறு அணிகள் படையினரின் காவலரண்கள் மீது கைக்குண்டு தாக்குதல்கள் துப்பாக்கி சூடு போன்றவற்றை நடத்துகிறார்கள். இவை தொடர்ச்சியாக வவுனியா மன்னார் யாழ்ப்பாணம் மாவட்டங்களில் நடந்தேரிக்கொண்டு இருந்தன. வன்னி எங்கும் போர்களமுனை திறக்கப்பட்டதை தொடர்ந்து விடுதலைப்புலிகள் தமது ஆளணி பலத்தினை பலபடுத்துகிறார்கள். அரசியல் போராளிகள் வீதிகளுக்கு இறங்கி மக்களிடம் போராட்ட வலுவுக்கான ஆதரவினை திரட்டுகிறார்கள். தளபதிகள் பொறுப்பாளர்கள் என இதில் எல்லோரும் ஈடுபடுகிறார்கள். இதில் குறிப்பிட்டு கூறவேண்டிய விடயம் என்னவெனில் போராளிகளை இணைப்பதற்காக தளபதி பால்ராஜ் அவர்கள் மக்களிடம் நேரடியாக இறங்கியிருந்தார். அவர் போராட்டத்தில் இருந்து விலகியிருந்த முன்னாள் போராளிகளையும் அணிதிரட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தார். இதில் குடும்பமாகிவிட்ட முன்னாள் போராளிகளுக்கு அவர்களது குடும்பத்தினரை கருத்தில் கொண்டு கொடுப்பனவு கொடுக்கப்படுகிறது. அதாவது அவர்களுக்கு மாதாந்த உதீயம் வழங்கப்பட்டது. பால்ராஜ் அண்ணா போராளிகள் இணைப்பில் இறங்கியபின் முன்னாள் போராளிகளின் மனைவிமாரே தங்கள் கணவரை பால்ராஜ் அண்ணாவுடன் அனுப்பி வைத்த சம்பவங்களும் நடந்தது. முல்லை மாவட்ட போராளியின் மனைவி ஒருவர் கணவனை பால்ராஜ் அண்ணாவுடன் அனுப்பிவிட்டு. நீங்கள் பால்ராஜ் அண்ணாவுடன் போங்கள் அப்பத்தான் அவர் உங்களை மனலாத்தில் வைத்திருப்பார். அங்கு நின்றால் வீட்டிற்று வந்துபோவது இலகு அப்போதுதான் களமுனையையும் வீட்டையும் பாப்பீங்கள். என்று கூறி அனுப்பிவைத்தார்.


அதேபோல் கிளிநொச்சி மாவட்டத்தின் முன்னாள் போராளிகள் தளபதி தீபன் அவர்களின் கீழும் மன்னார் மாவட்ட போராளிகள் தளபதி பானு அவர்களின் கீழும் அணிதிரல்கிறார்கள். இவ்வாறு முன்னாள் போராளிகள் அணிகள் ஒழுங்குபடுத்தப்படுகின்றன. இவர்கள் ஏற்கனவே துப்பாக்கி பிடித்து பயிற்சி எடுத்தவர்கள் என்பதால் அடிப்படை பயிற்சி எடுக்க தேவையில்லை. சூட்டுபயிற்சியுடன் இவர்கள் படையணியாக மாறுகிறார்கள். இது ஒருபுறம் நடந்தேறுகிறது.

மறுபுறத்தில் முன்னாள் அரசியல் பொறுப்பாளர்கள் மக்களிடம் அவசர அழைப்பினை விடுக்கின்றார். (2006) ம் ஆண்டின் இறுதிப்பகுதி அது வீட்டிற்கு ஒருவர் நாட்டிற்கு என்று அழைப்பு விடுக்கிறார். விடுதலைப்புலிகளின் இந்த அறைகூவலினை அன்று இருந்த விடுதலைப்புலிகளின் ஊடகங்களான ஈழநாதம் புலிகளின் குரல் தமிழீழ தேசிய தொலைக்காட்சி விடுதலைப்புலிகள் ஏடு சுதந்திர பறவைகள் மற்றும் தெருவெளி நாடகங்கள் ஊடாக முரசறையப்படுகின்றன. இதன் போது தான் அங்கு புறநானூறிலும் மிஞ்சிய மகிமை வன்னியில் நடந்தேறுகிறது. வீட்டிற்கு ஒருவர் நாட்டிற்காக இணைகின்றார்கள். பெற்றோர்களால் பெண்பிள்ளைகள் ஆண்பிள்ளைகள் இணைக்கப்பட்டு கொண்டிருக்கிறார்கள். இந்த செய்திகளை தாங்கியபடி ஈழநாதத்தின் ஊடகங்கள் செய்திகளை முதன்மையாக வெளியிட்டன. ஆனாலும் ஒருசில பெற்றோர் பிள்ளைகளை இணைப்பதற்கும் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.தமது பிள்ளைகளை போராட்டத்தில் இணைக்காமல் பின்னடித்தார்கள். தமது பிள்ளைகளுக்கு திருமண வயது வரும் முன்னரே மனம் முடித்து வைத்தார்கள். திருமண வயசு வராதவர்களுக்கு திருமண பதிவு செய்வதை பதிவாளர்கள் மறுத்தார்கள். இதனால் பதிவில்லாமல் சிலர் கலாச்சார திருமணங்களை செய்து வைத்து தமது பிள்ளைகள் போராட்டத்திற்கு செல்லாமல் தடுத்தார்கள். தாலிக்கொடி செய்து கட்டுவதற்கு கூட அவகாசம் இல்லாமல் இருந்த மஞ்சள் கயிற்றில் அவரச அவசரமாக தாலி கட்டி வைத்தவர்களும் இருந்தார்கள் என்பது தான் உண்மை. இந்த திருமணங்கள் அப்போது மக்களால் போர்க் கல்யாணம் என நகைச்சுவையாக குறிப்பிடப்பட்டது பலரும் அறிந்தது.

இதே வேளை இணைந்த போராளிகள் அடிப்படை பயிற்சிகளை முடித்துக்கொண்டு புதிய புதிய படையணிகளாக களமிறங்குகிறார்கள். புதிய போராளிகளுக்காக களமுனைகள் திறக்கப்படுகின்றன. இவ்வாறு புதிய போராளிகள் மன்னார் களமுனையாக இருந்தாலும் முகமாலை களமுனையாக இருந்தாலும் மணலாற்று களமுனையாக இருந்தாலும் வவுனியா களமுனையாக இருந்தாலும் தமது வீரங்களை எதிரிக்கு காட்டுகின்றார்கள். முதன்மை தளபதிகளின் வழிநடத்தலில் களமுனைகளில் சிறிலங்கா படையினருக்கு பாரிய இழப்புக்கள் இப்புதிய போராளிகளால் நிகழ்கின்றன.

இவ்வாறு போராளிகள் களமுனை அனுபவங்களை பெற்று அடுத்த கட்டத்திற்காக தாங்களை தயார்ப்படுத்துகின்றார்கள். அதாவது அதிகாரி பயிற்சிகளில் ஈடுபடுகிறார்கள். இவ்வாறு அதிகாரி பயிற்சி எடுக்கும் இடமாக முத்தையன் கட்டு பயிற்சி தளங்கள் அமைகின்றன. அதாவது அதிகாரி என்பது ஒரு பதினைத்து பேரைக்கொண்ட அணியினை வழிநடத்தும் திறமை. இதற்கான பயிற்சிகள் நடைபெற்று கொண்டிருந்தன. இவ்வாறு தான் புதிய போராளிகளின் பதவி நிலைகள் உயர்கின்றன. இவ்வாறு அணிகள் பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்க. வேறு சில அணிகள் கிளைமோர் தாக்குதல் கட்டட தகர்ப்பு கனரக வாகன தகர்ப்பு என வெடிமருந்து பயிற்சிகளிலும் சிறப்பு தேர்ச்சி அடையும் நோக்கில் பயிற்சிக்கப்படுகின்றார்கள்

**தொடரும்...**



கடந்தவார தொடர்ச்சி...

# மதவாத அரசியலின் சூத்திரதாரிகள் யார்?

தொல்பொருள் திணைக்களம் தற்பொழுது ஆக்கிரமிப்பு அமைப்பாக மாறிவருவது உண்மை தான் பல இடங்களை தங்களது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து அதில் தலங்களை உருவாக்குகின்றார்கள். உதாரணமாக சைவ சமயம் என்பது ஒரு பழைமையான மதம் மிகவும் தொண்மையான மதம் அந்த வகையிலே சைவ மத அடையாளங்கள் அல்லது தடயங்கள் அனைத்துமே தொல்பொருளுக்குள் தான் வரும் ஏனென்றால் வரலாற்றுக்கு முற்பட்ட காலங்களுக்குள் வருவதனால் இலங்கை அரசாங்கத்தினுடைய தொல்பொருள் என்ற வரையறைக்குள் வரக்கூடிய பெரும்பான்மையானவை சைவ சமயத்திற்குரிய வழிபாட்டுத் தலங்கள் தான் தொல்பொருளுக்குள் வரும். அதே போன்று பௌத்த மதத்திற்குரியது வரும். எனவே இவற்றை ஏனைய மதங்களுக்குரிய ஆதாரங்கள் கூட தொல்பொருளுக்குள் வருவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. 18 ஆம் நூற்றாண்டுக்கு பின்னர் வந்த மதங்கள் என்ற அடிப்படையில் அவர்கள் கட்டிய ஆலயங்களோ இடங்களோ தொல்பொருளுக்குள் வருவதற்கான சாத்தியக்கூறுகள் குறைவு. எனவே தொல்பொருள் திணைக்களம் சில தவறுகளை விடுகின்றது. சைவ சமயத்திற்குரிய அடையாளங்களை கண்டுபிடித்து அவற்றை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து வழிபாட்டு முறைகளை தடுத்து அல்லது அது தொடர்பான அபிவிருத்திகளை செய்ய விடாது வைத்திருப்பது என்பது கூடுதலாக தொல்பொருள் திணைக்களத்தினால் பாரம்பரியமாக தமிழர்கள் சைவ சமயத்தவர்கள் தான் பாதிக்கப்படுவார்கள்.

நல்லூரில்மசூதி.ருந்ததாகஅண்மையில்முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி சஜந்தன் அவர்கள் குறிப்பிட்டிருந்தார். தமிழ் நாட்டில் ஒரு புதிய கோட்பாடு ஒன்றை உருவாக்கி மத நம்பிக்கைகளை கொச்சைப்படுத்துகின்ற இந்து மத்தை கேவலப்படுத்துகின்ற நடைமுறை தற்பொழுது தமிழ் நாட்டிலே பரவிவருகின்றது. இங்கு பார்த்தால் அதிகளவில் அந்த தொலைக்காட்சிகள் தான் பார்க்கின்றார்கள் எனவே இந்து மதத்திற்கு எதிரான தொலைக்காட்சி சனல்களை பார்த்து இங்குள்ள மக்களுக்கும் அந்த நோய் பிடித்திருக்கின்றது என்னவென்றால் இந்து மதத்திற்கு எதிராக கதைத்து தாங்கள் பெரிய ஆட்கள் என்னும் நிலை காணப்படுகின்றது. அண்மையில் நல்லூரை உடைத்து கோவில் கட்டபோவதாக கூறியதும் சஜந்தன் இதை சொல்லுவதுமென நம்பிக்கையாக பேசுவதனால் தாங்கள் பெரிய இடத்தை பிடிக்கலாம் என்ற ஒரு நினைப்பு இருக்கின்றது. இதில் மசூதி என்பது கோவில் இல்லை. ஆனால் அதற்கு பின்னால் ஒரு மண்டபம் இருக்கின்றது பழைய முஸ்லிம்கள் வாழுந்த இடம் என்றும் முன்னர் நல்லூர் இருந்த இடம் வேறு என்றும் பின்னர் இந்த இடத்திலே நிறுவப்பட்டது என்றும் வரலாறு இருக்கின்றது. ஆனால் இவர் சொல்வது போன்று நல்லூர் மூலஸ்தானத்திற்குள் சமாதி இருக்கின்றது. என்பதும் உள்ள போய் பூஜை வைக்கின்றார்கள் என்பதும் அப்பட்டமான ஒரு பொய். இவ்வளவு காலமும் ஒரு சமாதியை உள்ளே வைத்துக்கொண்டு கோவிலில் பூஜை செய்வது என்பது வெறும் கட்டுக்கதையும் வதந்தியும் தான் உண்மையில் அப்படி ஒன்றும் இல்லை. ஆனால் நல்லூர் மண்டபம் இருக்கின்ற இடத்திற்கு அருகில் இஸ்லாமியர்கள் வாழ்ந்தார்கள் என்பதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றது. இஸ்லாமியர்களின் நிலங்கள் அந்த ஆலயத்திற்குள் இருக்கலாம் தொடர்ச்சியாக அந்த நிலங்கள் ஆலயத்திற்குள் இருப்பதற்கான வாய்ப்பும் இருக்கின்றது. ஏனென்றால் அந்த பிரதேசம் இஸ்லாமியர்கள் வாழ்ந்த பிரதேசம் நல்லூர் இருந்த இடம் வேறு நல்லூர் இடிக்கப்பட்டதன் பின்னர் தான் இந்த இடத்தில் திரும்ப மீள் அமைக்கப்பட்டது. அந்த நேரத்தில் இஸ்லாமியர்கள் இந்துக்கள் அனைவரும் இணக்கப்பாட்டுடன் இருந்தமையினால் அது சாத்தியமாக இருக்கலாம். ஆனால் இவர் சொல்வது போன்று ஆலயத்தின் மூலஸ்தானத்தில் சமாதி இருக்கின்றது என்பதும் அதற்கு போய் பூஜை செய்வதும் என்பதும் நூறு வீதம் பொய்.

ஜாதிவாத அடிப்படையில் தான் மதங்கள் பரப்படுகின்றது என்று கூறப்படும் கருத்தானது முரண்பாடாகவே பார்க்கப்படுகின்றது. ஜாதி என்பது சமயத்திற்குரியது அல்ல. ஜாதி என்பது தமிழினத்திற்கு உரியதாக மாறியிருக்கின்றது. ஜாதி என்பது தொழிலின் அடிப்படையில் சில பாகுபாடுகள் இருந்தது அது இன்று திரிபுபடுத்தப்பட்டு ஜாதிகளாக அதுவும் தொழிலின் அடிப்படையில் தான் ஒவ்வொரு ஜாதியினராக பார்க்கப்படுகின்றார்கள். அதில் ஏற்றத்தாழ்வு என்பது நாங்களாக உருவாக்கிக்கொண்டது ஊடகத்துறையில் இருப்பவர்கள் ஊடகவியலாளர்கள் என்பது போன்று அந்த நேரங்களில் விவசாயம் செய்தவர்கள் வேலாளர்கள். கள்ளு இறக்குபவர்கள் கள்ளர்கள் என ஒவ்வொரு தொழில் சார்ந்து உருவாக்கப்பட்டவர்கள் பின்னர் ஜாதிகளாக மாற்றமடைந்து காணப்படுகின்றார்கள். இதில் மதம் மாறுபவர்களுக்கு ஜாதி இல்லாமல் போகின்றது என்பது நூறு வீதம் பொய். கிறிஸ்தவ சமயத்தில் இருக்கின்ற உயர்ந்த ஜாதியாக நினைக்கின்ற ஒருவர் கிறிஸ்தவ மதம் என்பதற்காக ஜாதி குறைந்த ஒருவரை போய் திருமணம் முடிப்பாரா என்றால் கடைசி வரையும் இல்லை என்றே கூற வேண்டும். கிறிஸ்தவர்களாக இருந்தாலும் சரி சைவ சமயத்தவர்களாக இருந்தாலும் சரி யாருமே தங்களது ஜாதியை விட்டுக்கொடுத்து திருமணம் முடிப்பதாக இல்லை. அது இந்து சமயத்தில் மட்டுமல்ல அனைத்து மதத்திலும் நடப்பவை வழமை. ஆனால் எல்லா மதங்களிலும் ஜாதி பார்ப்பவன் தமிழர் மதம் மாறினால் அந்த குணம் மாறப்போவதில்லை கிறிஸ்தவ மதத்திற்கு மாறினால் போல தன்னுடைய ஜாதிக்காரம் குறைந்த ஜாதி காரரை திருமணம் செய்வது என்பது நடந்ததே இல்லை. காதல் திருமணங்கள் சில ஜாதி மாறி நடந்திருக்கின்றதே தவிர மதம் மாறிய காரணத்திற்காக ஜாதியை பாராமல் யாரும் திருமணம் முடித்தது இல்லை. கிறிஸ்தவ மதத்திற்குள் ஜாதி இல்லை என்பதோ இந்து மதத்திற்குள் ஜாதி இல்லை என்பதோ நூறு வீதம் பொய். மதம் மாறினாலும் தமிழர்கள் அதை விட்டுக்கொடுப்பதாகவும் இல்லை. அனுபவ ரீதியாக நான் பல இடங்களில் பார்த்திருக்கின்றேன் யாரும் ஜாதி மாறி திருமணம் முடிப்பதாக இல்லை. எனவே எவரும் அந்த விடயத்தில் திருந்தியதாக இல்லை.

கோவில்களிலே ரதங்களை இழுப்பதற்கு கூட வைக்கோவை பயன்படுத்தி இழுத்தார்கள் அதிலே ஏனைய ஜாதி காரர்கள் அவர்களுக்கு தனியாக கோவில்களை கட்டிய வரலாறுகளும் இருக்கின்றன.யாழ்ப்பாணத்தில் அவ்வாறு கட்டப்பட்ட கோவில்கள் தற்பொழுது வரை இருக்கின்றன. அது தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று தான் ஜாதி அடிப்படையில் எந்த கோவிலிலும் சொல்லவில்லை நீ உள்ளே வராக்கூடாது என்று. வவுனியாவை பொறுத்தவரையில் முழு பெரிய கோவில்களிலும் எந்த பாகுபாடுகளும் இல்லாமல் தேர் இழுப்பதில் இருந்து சாமியை தூக்குவது வரை எல்லா நடவடிக்கையிலும் எல்லா ஜாதிக்காரர்களும் ஈடுபடுவதனை பார்க்கக்கூடியதாக இருக்கின்றது. வவுனியா மன்னார் போன்ற இடங்களிலே அவ்வாறான பாகுபாடுகள் இல்லை. ஆனால் யாழ்ப்பாணத்தின் பிரதான கோவில்களை தவிர்த்து சில சில கிராமப்புறங்களிலே அந்த நடைமுறை இருக்கின்றது. உதாரணமாக எங்களது குடும்பம் பெரிய குடும்பம் அந்த இடத்தில் இருப்பவர்கள் ஒரே ஜாதியினராக இருப்பார்கள் ஒரு 50 குடும்பம் இருக்கின்றது என்றால் அக் குடும்பத்தினர் அனைவரும் சேர்ந்து ஒரு கோவிலை கட்டி அது எங்களுக்கான கோவில் என வைத்திருப்போம். எங்களது சொந்த இடத்தில் கட்டியிருக்கின்றோம். எனவே எங்களது ஆட்கள் தான் செய்ய வேண்டும் என்ற உணர்வு இருந்தது. அந்த அடிப்படையில் இனம் என்னும் பொழுது அவர்கள் ஒரே இனமாக ஒரே குடும்பமாக இருப்பதனால் ஒரே ஜாதியாக இருப்பார்கள் எனவே அவர்கள் அந்த கோவில் அவர்களுக்குரியது என வைத்திருப்பார்கள். ஏனையவர்கள் உள்ளே வரமுடியாத நிலை இருக்கின்ற பொழுது அது அந்த ஜாதிக்குரிய கோவிலாக மாற்றமடைகின்றது. அதே போன்று குறைவான ஜாதி என கருதப்படுபவர்களும் தங்கள் தங்களுக்கென கோவில்களை கட்டி வைத்துக்கொண்டிருக்கின்றார்கள். சில நேரங்களில் ஒரே ஊரில் எங்களது ஜாதிக்கு ஒரு கோவில் என்றும் உங்களது ஜாதிக்கு ஒரு கோவில் என்றும் இரண்டு கோவில்கள் இருக்கின்றன. எனவே அவ்வாறு உருவாக்கப்பட்ட கோவில்கள் சில இன்றும் யாழ்ப்பாணத்தில் இருக்கின்றது. அது தவிர்க்கப்பட வேண்டும் அவை பொதுவாகவும். அனைவரும் சென்று வரக்கூடிய இடமாக இருக்க வேண்டும் சமத்துவம் என்பது நிச்சயமாக மதங்களுக்குள் இருக்க வேண்டும் என்பதில் எந்த மாற்றுக்கருத்தும் இல்லை. அது பின்பற்றப்பட வேண்டும் ஜாதி சார்ந்து ஆலயங்கள் இயங்குவதை உண்மையில் ஏற்றுக்கொள்ளமுடியாது. எனவே அரசியல் மயமாக்கல் என்பது ஒரு மதத்தில் திணிக்கப்படக்கூடாது என்பது எனது கருத்தாக இருக்கின்றது.

**ஆதித்திரன்**

# மூலிகைத்தோட்டமும் சிறுவர்களின் மூலிகை மருத்துவ உளச் சுகவாழ்வும்



டாக்டர். வெற்றிவேல் சக்திவேல்
B.S.M.S,P. G. Dip Pub Adm.,M.Sc.

*அரச பதிவு இலக்கம் - 10,294*
*மூலிகை சுக வாழ்வு நிறுவனம் கிளவ் வீதி, தெல்லிப்பளை.*

வீடுகளில் பாடசாலைகளில் மருத்துவமனைகளில் மூலிகைத் தோட்டம் அமைக்கும் பொழுது மன அழுத்தத்தைக் குறைத்து மன அமைதியை ஏற்படுத்தும். மூலிகைத் தோட்டத்தில் உள்ள தாவரங்கள் பூக்கும், காய்க்கும் போது மன மகிழ்ச்சி ஏற்படும். மூலிகைத் தோட்டத்தில் விளையும் சத்துவ குண மருத்துவ தாவரப் பொருட்களைச் சாப்பிடும் போது சிறார்களில் சத்துவ குணமேம்பாடு ஏற்பட்டு மன அமைதியை மேம் படுத்தும். மன அமைதி மாணவரது செயற்திறனை **(Performance)** அதிகரிக்கும்.


மூலிகைத் தோட்டம் உடலுக்கும் உள்ளத்திற்கும் ஆரோக்கியமான பலன்களைக் கொடுக்கும். மகிழ்ச்சி உணர்வு மேம்பாடு. மன நிறைவு. மனதின் உற்சாகம் ஏற்படுவதுடன் மருத்துவ தாவரங்கள் பூத்துக் குலுங்கும் போது. சிறார்களின் மனம் குதூகலிக்கும். மூலிகைத் தோட்டத்தில் ஏற்படும் நறுமணம் மனதுக்கு இதமளிப்பதுடன். பச்சைப் பசுமையான காட்சி கண்ணுக்கு விருந்தளிப்பதுடன் தாவர. பறவைகளின் ஓசைகள் செவிக்கு விருந்தளிப்பதுடன் இனிமையான சுவையுள்ள பழங்கள் நாவுக்கு சிறப்பான உணர்வையும். மூலிகைப் பூங்காவின் தென்றல் தோலை வருடும் போது இதமான உணர்வையும் கொடுத்து ஐம்புலன்கள் ஊடாக மன சுக வளத்தை மேம்படுத்துகின்றதைக் காணலாம்.

மேலும் செரட்டோனின் உற்பத்தியை அதிகரித்து மகிழ்ச்சியை மேம்படுத்துவதுடன். மன அழுத்தம் ஏற்படுத்தும் அகஞ்சுரப்புப்புகளை **(Hox mones)** குறைப்பதுடன் நோய் எதிர்ப்பு சக்தியையும் அதிகரிக்கின்றது. மேலும் ஒட்சிசனை அதிகமாக வெளியிடும் தாவரங்கள் அருகே அமரும் போது நுரையீரலுக்குத் தேவையான ஒட்சிசனை வழங்குவதுடன் மருத்துவ மூலிகைகள் மீது பட்டு வரும் காற்றானது பல நோய்களைக் குணப்படுத்துவதாகவும் காணப்படுகின்றது. குடும்ப அங்கத்தவர்கள் வீட்டுத் தோட்டத்தில் அல்லது மூலிகைத் தோட்டத்தில் அமர்ந்து உரையாடல்களில் ஈடுபடும் போது மனச்சுமையைக் குறைக்கும். குழந்தைகளுக்குப் பிடித்த விடயங்களைச் செய்ய விடுதல் மகிழ்ச்சியாக இயற்கைச் சூழலில் செயற்பட விடுதல். மூலிகைத் தோட்டத்தில் இருந்து சிறு பிள்ளைகளுக்கு கதை ளைக் கூறுதல். விளையாடவிடுதல். ஆக்க பூர்வமான செயற்பாடுகளில் ஈடுபடுதல். உடற் பயிற்சிகளில் **(Physical Activity)**. மூலிகைத் தோட்ட விடயங்களில் சிறு பிள்ளைகளையும் ஈடுபட விடுதல் போன்றவற்றைச் செய்யலாம். மூலிகை இலைக்கஞ்சி ஊட்டச் சத்தைக் கொடுப்பதுடன் அதனுள் உள வளத்தை மேம்படுத்தும் மூலிகைகளைச் சேர்த்து பயன்படுத்தும் போது சிறார்களின் உளச் சுக வாழ்வை வளப்படுத்தும். மூலிகைத் தோட்டத்திலுள்ள மருத்துவத் தாவரங்கள் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதுடன் ஊட்டச்சத்தை அதிகரிப்பதுடன் உள நிலையையும் சீர்படும் மூலிகை உணவாகக் காணப்படுகின்றன. வல்லாரை. ஏலம். நெல்லி. மாதுளை. சீரகம். அமுக்கரா. பொன்னாங்காணி. மல்லி. எலுமிச்சை. நன்னாரி. பயறு. இலாமிச்சை. இளநீர். வில்வம். சந்தனம் போன்ற உளவளப்படுத்தும் மூலிகைகளை இலைக்கஞ்சியில் சேர்ப்பதுடன். அழல் குறைக்கும் மூலிகைகளையும் இலைக்கஞ்சியில் சேர்க்கலாம். மூலிகைத் தோட்டத்தில் தேவையான உள சுக வாழ்வு மூலிகைகளை வளர்க்கலாம். குழந்தைகளோடு கதைக்கும் போது பெற்றோர் மட்டும் கதைக்காமல். பிள்ளைகளையும் கதைக்க விடவேண்டும். இப்படிச் செய் அப்படிச் செய் என்று கூறாமல் நீங்களும் சேர்ந்து செய்யும் போது சிறுவர்கள் உங்களைப் பார்த்துச் செய்வர். நேரத்திற்கு எல்லாவற்றையும் செய்தல் வேண்டும் சரியான நேரத்தில் உறக்கம். உணவு. விளையாட்டு என்று பழக்கப்படுத்த வேண்டும்.



பாட்டு. நடனம். இசை. ஓவியம் என்று தமக்கு விருப்பமானவற்றில் பிள்ளைகளை ஈடுபட விட வேண்டும். இணையவழிக் கல்வியில் ஈடுபடும் போதும். வீட்டு வேலைகள் கொடுக்கும் போதும் அவற்றைப் பிள்ளைகள் செய்கின்றார்களா என்று கண்காணிக்க வேண்டும். வாரம் ஒரு தடவை எண்ணெய்க் குளிப்புச் செய்யும் போது அது மன அழுத்தத்தைக் குறைக்கும். குழந்தைகளின் உணர்ச்சிகளைப் பெற்றோர் புரிந்து கொள்ள வேண்டும். வீட்டிலுள்ள தாத்தா பாட்டியுடன் உறவுகளைப் பேணுதல். பொருளாதாரப்பிரச்சினைகளை இன்பமாகவும் இனிமையாகவும் மாற்றுதல். குழந்தைகளுக்குத் தேவையான உறக்கம் கொடுத்தல். சிறுவர் களை சிறு சிறு வீட்டு வேலைகளில் ஈடுபடவிடுதல். ஆக்க பூர்வமானசெயற்பாடுகளில்ஈடுபடுதல்.பொருளாதார பிரச்சினைகளும் கடந்து போகும் என்ற நம்பிக்கையை சிறார்களிடத்தில் ஊட்டுதல் போன்ற செயற்பாடுகள் அவசியமானதாகும்.

தோல்விகளை எதிர்கொள்ளும் திறன். மன வலி மையுடன் மீண்டெழும் திறன். இக்கட்டான சூழ் நிலையில் சவால்களைச் சமாளிக்கும் திறன். ஆக்க பூர்வமாக செயற்படும் திறன். படைப்பாற்றல். கற்பனைத் திறன். சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தும் திறன் ஆகியவற்றை சிறுவர்களில் வளப்படுத்த வேண்டும். சிறார்கள் புதியவற்றைச் சிந்திக்க. புதியவற்றைச் செய்ய. புதிய புதிய சாதனைகளைச் சாதிக்க. புதிய பாதையில் பயணிக்க முனைப்போடும். துடிப்போடும் இருக்கின்றார்கள். புத்தகக் கல்வியை மட்டும் கல்வி யாகவோ. அறிவாகவோ கருத முடியாது. இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி. பிள்ளைகளை சோர்ந்து விடாமல் கற்பனைத் திறன் வல்லமை **(Power of Imagina tion)**. ஆக்கச் சக்தி **(power of Creativity)**. புத்தாக்க மலர்ச்சியுடன். நுணுக்கமாக அவதானிக்கும் திறன் களையும் வலுப்படுத்தி உள்ளத்தில் மறைந்திருக்கும் உள்ளார்ந்த திறன் **(Hidden Talents)** வெளிப்படுத்தி சிறார்களை மலரும் படைப்பாளிகளாகவும். இளம் விஞ்ஞானிகளாகவும் உருவாக்க வேண்டும்.



# மகளிர் பக்கம்

## கண்களை சுற்றி கருவளையம் நீக்குவது எப்படி..?

கண்களை சுற்றிலும் வரும் கருவளையம் முகத்தின் அழகை பாதிக்கிறது. சில எளிய வழிமுறைகள் மூலம் கருவளையத்தை நீக்கி முகத்தை அழகாக்கலாம்.

கண்களில் கருவளையம் வந்தால் நமக்கு கஷ்டம் வரப்போகிறது என்ற நம்பிக்கை பலருக்கு உள்ளது.

செல்போன், டிவி உள்ளிட்டவற்றை அதிகமாக பார்ப்பதால் பலருக்கு கண்களில் கருவளையம் உண்டாகிறது.

அதிக மன அழுத்தம், தூக்கமின்மை கூட கண்களில் கருவளையம் உருவாக காரணமாகிறது.

குளிர்ந்த நீரில் காட்டன் துணியை நனைத்து கண்களில் வைத்து வைத்து எடுத்தால் கருவளையம் குறைய தொடங்கும்.

ஒரு நாளைக்கு குறைந்தது 7 முதல் 8 மணி நேரம் நன்றாக தூங்கினால் கருவளையம் ஏற்படுவதை தடுக்கலாம்.

ஒருநாளைக்கு 3 லீட்டர் தண்ணீர் குடிக்க வேண்டும். தண்ணீர் கண்களுக்கு குளிர்ச்சியை அளிக்கும்.

கருவளையங்கள் உருவாவதை தவிர்க்க நீர்சத்துள்ள ஒரஞ்சு, மாதுளை, ஸ்ட்ராபெர்ரி உள்ளிட்ட பழங்களை சாப்பிடலாம்.



## வீட்டிலேயே இயற்கையான முறையில் பெடிக்யூர் செய்வது எப்படி...?

கால்களில் உள்ள கருமையைப் போக்கி, கால்களை அழகாக வைத்துக்கொள்ள வீட்டிலேயே பெடிக்யூர் செய்யலாம்.

முதலில் கால்விரல் நகங்களில் நெயில் பாலிஷ் இருந்தால், அதை நல்ல தரமான நெயில் பாலிஷ் ரிமூவர் கொண்டு நீக்கி. பின்பு ஒரு அகன்ற டப்பில் வெதுவெதுப்பான நீரை நிரப்பி. அதில் 1 டேபிள் ஸ்பூன் ஷாம்பு சேர்த்து கலந்து. பின் அதனுள் கால்களை 5 நிமிடம் ஊற வைத்து. பிரஷ் கொண்டு கால்களைத் தேய்த்து வெளியே எடுத்து. துணியால் துடைக்கவும்.

அடுத்து அகன்ற டப்பில் வெதுவெதுப்பான நீரை பாதியாக நிரப்பி. அதில் 1 டேபிள் ஸ்பூன் தேன் மற்றும் பாதி எலுமிச்சையைப் பிழிந்து. எலுமிச்சைத் தோலை நீரிலேயே போட்டு. கால்களை நீரில் மீண்டும் 5 நிமிடம் ஊற வைத்து. பின் எலுமிச்சைத் தோலைக் கொண்டு தேய்க்க வேண்டும்.

பிறகு பியூமிக் கல் பயன்படுத்தி. குதிகால்களை நன்கு தேய்த்து விட்டு. கால்களை வெளியே எடுத்து துணியால் துடைக்க வேண்டும்.

ஒரு பௌலில் 2 டீஸ்பூன் காபி பொடி. 2 டீஸ்பூன் சர்க்கரை. 1 டீஸ்பூன் கற்றாழை ஜெல் மற்றும் பாதி எலுமிச்சையைப் பிழிந்து நன்கு பேஸ்ட் செய்து கொள்ள வேண்டும். பின் அதனை கால்களில் தடவி 5 நிமிடம் ஊற வைக்கவும். பின்பு கையால் கால்களை சிறிது நேரம் தேய்த்து. சுத்தமான நீரில் கழுவ வேண்டும்.

இறுதியில் கெட்டியான ஏதேனும் ஒரு மாய்ஸ்சுரைசரை கால்களில் தடவி. மென்மையாக 5 நிமிடம் மசாஜ் செய்ய வேண்டும். இந்த முறையில் மாதம் இருமுறை பெடிக்யூர் செய்து வந்தால் கால்களில் உள்ள இறந்த செல்கள் நீங்கி பாதம் அழகாக இருக்கும்.



## அப்பிள் சாப்பிடுவதால் கிடைக்கும் நன்மைகள்

அப்பிள்கள் புற்றுநோய். நீரிழிவு மற்றும் இதய நோய் அபாயத்தைக் குறைக்கும். அப்பிள்கள் மூளை ஆரோக்கியத்தையும் எடை இழப்பையும் மேம்படுத்த உதவும். அப்பிளின் நன்மைகள் குறித்து தெரிந்து கொள்ளுங்கள்.

அப்பிளில் பெக்டின் என்றும் கரையக்கூடிய நார்ச்சத்து அதிகம் உள்ளதால் உடலில் உள்ள கெட்ட கொலஸ்ட்ராலானது கரைந்துவிடும்



அப்பிளில் ஊட்டச்சத்துக்கள் அதிகம் உள்ளதால் இதய நோய் ஆபத்து குறைவாக உள்ளது.

அப்பிள்களை சாப்பிடுவது Level 2 நீரிழிவு நோய் அபாயத்தைக் குறைக்கிறது.

அப்பிளில் உள்ள ஆக்ஸி ஜனேற்றிகள் நுரையீரல். மார்பக மற்றும் செரிமான பாதை புற்றுநோய்களை எதிர்த்து போராடுகின்றன.


அப்பிள்கள் ஆக்ஸிஜனேற்ற அழுத்தத்தால் மூளையில் ஏற்படும் சேதத்திலிருந்து பாதுகாக்கின்றன.

சிலருக்கு அப்பிள் ஒவ்வாமையானதாகவும், அதீத குளிர்ச்சியளிக்க கூடியதாகவும் உள்ளது.

அப்பிளை சாப்பிட்டால். அதில் உள்ள ஆன்டி-ஆக்ஸிடன்ட்டால். கண்புரை நோய் ஏற்படுவதைத் தடுக்கலாம்.

## பூந்தி லட்டு

கடலைமாவு – 2 கப்
சர்க்கரை – 2 கப்
நெய் – 3 தேக்கரண்டி
ஏலக்காய் தூள் – சிறிதளவு
உடைக்க முந்திரி – சிறிதளவு
உலர்திராட்சை – சிறிதளவு
எண்ணெய் – பூந்தி செய்ய
பூந்தி கரண்டி



**செய்முறை:**

கடலைமாவுடன் சிறிதளவு தண்ணீர் சேர்த்து பஜ்ஜி மாவு பதத்திற்குக் கரைக்கவும். வாணலியில் தேவையான அளவு எண்ணெய் ஊற்றவும். எண்ணெய் நன்கு காய்ந்ததும் பூந்தி கரண்டியை எண்ணெய் மேலாகப் பிடித்து சிறிதளவு கடலைமாவு கலவையை அதில் ஊற்றி பூந்திகளைப் பொரித்தெடுக்கவும். மற்றொரு பாத்திரத்தில் 2 கப் சர்க்கரை. 3/4 கப் தண்ணீர் சேர்த்து பாகு காய்ச்சவும். நெய்யில் முந்திரி. உலர்திராட்சை யைப்பொரித்து நெய்யுடன் ஏலக்காய் சேர்த்து பாகில் கலக்கவும். பூந்தியைப் பாகுடன்(சூடாக இருக்கும் போதே) ஒன்று சேர்க்கவும். கையில் நெய்யைத் தடவிக் கொண்டு கை பொறுக்கும் சூட்டிலேயே லட்டுகளாக உருண்டைகள் பிடித்துப் பரிமாறவும்.

## தக்காளி சாதம்

**தக்காளி சாதம் செய்ய தேவையான பொருட்கள்**

1 1/2 கப் பாசுமதி அரிசி
6 தக்காளி
3 பெரிய வெங்காயம்
1 பச்சை மிளகாய்
4 பூண்டு பல்
1 துண்டு இஞ்சி
1 மேஜைக்கரண்டி கடுகு
1 மேஜைக்கரண்டி உளுந்து
1/4 மேஜைக்கரண்டி சோம்பு
தேவையான அளவு மிளகாய் தூள்
1/4 மேஜைக்கரண்டி மஞ்சள் தூள்
சிறிதளவு கருவேப்பிலை
சிறிதளவு கொத்தமல்லி
தேவையான அளவு எண்ணெய்
தேவையான அளவு நெய்
தேவையான அளவு உப்பு



**தக்காளி சாதம் செய்முறை**

முதலில் பாசுமதி அரிசியை எடுத்து நன்கு கழுவி அதை சுமார் அரை மணி நேரம் வரை ஊற வைக்கவும். பின்பு தக்காளி. வெங்காயம். பச்சை மிளகாயை நறுக்கி. மற்றும் இஞ்சி பூண்டை பேஸ்ட் ஆக்கி வைத்துக் கொள்ளவும்.
இப்பொழுது நாம் நறுக்கி வைத்திருக்கும் தக்காளியை ஒரு மிக்ஸி ஜாரில் போட்டு அதை நன்கு அரைத்து எடுத்து வைத்துக் கொள்ளவும்.
அடுத்து ஒரு குக்கரை அடுப்பில் வைத்து அதில் 2 மேஜைக்கரண்டி அளவு எண்ணெய் மற்றும் ஒரு மேஜைக்கரண்டி அளவு நெய் சேர்த்து அதை சூட வைக்கவும்.
எண்ணெய் சூட்டதும் அதில் கடுகைப் போட்டு கடுகு வெடிக்க ஆரம்பித்ததும் அதில் உளுந்து மற்றும் சோம்பை போட்டு உளுந்து சிவக்கும் வரை அதை வதக்கவும்.
உளுந்து சிவக்க ஆரம்பிக்கும் போது அதில் நாம் நறுக்கி வைத்திருக்கும் வெங்காயம். மற்றும் பச்சை மிளகாயை போட்டு வெங்காயம் கண்ணாடி பதம் வரும் வரை அதை வதக்கவும்.
வெங்காயம் கண்ணாடி பதம் வந்ததும் அதில் இஞ்சி பூண்டு பேஸ்ட் மற்றும் மஞ்சள் தூளை சேர்த்து இஞ்சி பூண்டு பேஸ்டின் பச்சை வாசம் போகும் வரை வதக்கவும்.
இஞ்சி பூண்டு பேஸ்டின் பச்சை வாசம் போனதும் அதில் சிறிதளவு கருவேப்பிலை, கொத்தமல்லி, அவரவர் விருப்பத்திற்கு ஏற்ப மிளகாய் தூள், மற்றும் தேவையான அளவு உப்பு சேர்த்து அதை நன்கு கிளறி விடவும்.
அடுத்து அதில் நாம் சாறாக்கி வைத்திருக்கும் தக்காளியை சேர்த்து நன்கு கலந்து விடவும். பின்பு அதில் தேவையான அளவு தண்ணீர் ஊற்றி நன்கு கலந்து விடவும்.
இந்த குழம்பு கொதிக்க ஆரம்பிக்கும் போது நாம் ஊற வைத்திருக்கும் பாசுமதி அரிசியை மீண்டும் ஒரு முறை நன்கு கழுவி தண்ணீரை வடி கட்டி இதில் போட்டு பக்குவமாக சாதம் உடையாமல் நன்கு கலந்து விடவும்.
இப்பொழுது மூடி போட்டு மிதமான சூட்டில் சுமார் 2 விசில் வரும் வரை இதை வேக விட்டு பின்பு அடுப்பை முற்றிலுமாக குறைத்து விட்டு சுமார் 3 நிமிடம் வரை அடுப்பில் வைத்து பின்பு அடுப்பை அணைக்கவும்.
பின்னர் மூடியைத் திறந்து அதில் ஒரு மேஜைக்கரண்டி அளவு நெய்யை சேர்த்து நன்கு கிளறி சுட சுட ஒரு தட்டில் எடுத்து வைத்து உருளைக்கிழங்கு பொரியல் உடன் பரிமாறவும்.
இப்பொழுது உங்கள் சூடான மற்றும் சுவையான தக்காளி சாதம் தயார்.

# தமிழினப் படுகொலையில் பங்கேற்ற நாடுகள் தீர்வு என்ன?

கடந்தவார தொடர்ச்சி...

**ரஷ்யா:**

இலங்கை இராணுவத்திற்கு இராணுவ பயிற்சியை அளித்ததுடன். 300 மில்லியன் டாலர் அளவிலான ஆயுதங்களை இலங்கைக்கு ரஷ்யா கொடுத்தது. ஐ.நாவில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்படும் அனைத்து தீர்மானங்களிலும். இலங்கைக்கு ஆதரவாகவே ரஷ்யா நின்றது. 2009 இறுதி போரின் போதும். கனடா. மெக்சிகோ மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போர் நிறுத்ததிற்கான தீர்மானத்தை ஐ.நாவில் கொண்டு வர முயற்சித்த போது அதை ரஷ்யாவும். சீனாவுமே எதிர்த்து வாக்களித்தன. அதே போல் போர்க் குற்றங்களை விசாரிப்பதற்காக மேற்கத்திய நாடுகள் கொண்டு வந்த தீர்மானத்தை சீனா மற்றும் பல நாடுகளுடன் சேர்ந்து ரஷ்யாவும் எதிர்த்தது. இலங்கை அரசிற்கு பல ஆயுதங்களையும், போர் விமானங்கள் மற்றும் இராணுவ வாகனங்களை கடைசி கட்டப் போரில் ரஷ்யா வழங்கியது.

**ஐக்கிய நாடுகள்:**

ஈழத் தமிழர்களை பாதுகாக்க எந்த ஒரு நடவடிக்கையையும் எடுக்காத ஐ.நா. இலங்கை அரசாங்கத்திற்கும் அதன் இராணுவத் தாக்குதலுக்கு ஆதரவாக நின்றது. போர் பகுதியில் இருந்த தமிழர்கள் மீது எந்த அக்கறையும் ஐ.நா காட்டவில்லை. இஸ்ரேல்-காசா போரின் போதும் சரி. குர்திஸ்தானுக்கும் துருக்கிக்கும் இடையே நடந்த போரின் போதும் சரி. ஐ.நா வின் கடும் கண்டனத்தின் காரணமாகவும். சர்வதேச சமூகத்தின் தலையீடு காரணமாகவும் போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. ஆனால் ஈழத்தமிழர் பிரச்சனையில் ஐ.நா தன் கண்களை மூடிக் கொண்டது. 2008இல் போர் முற்றிய சூழலில். தன்னுடைய பணியாளர்களையும். மனித நேய சேவை செய்ய சென்றவர்களையும் வன்னிப் போர் பகுதியில் இருந்து வெளியேறுமாறு ஐ.நா கூறியது. காயம்பட்ட பொதுமக்களை காப்பாற்ற அங்கு மருத்துவர்களும். தன்னார்வத் தொண்டு நிறுவன ஊழியர்களும் மட்டுமே எஞ்சி இருந்தனர்.

இறுதிப் போரின் போது. பிரபாகரன் ஐ.நா அதிகாரிகளையும். எரிக் சோல்ஹைம் உட்பட நோர்வே அமைதி பேச்சுவார்த்தையில் ஈட்டுபட்டவர்களையும் தொடர்பு கொண்டார். அவர்கள் சில மாதங்களுக்கு முன்பு இஸ்ரேலுக்கும் காசாவிற்கு நடந்த போரில் ஐ.நா தலையிட்டு தீர்மானம் நிறைவேற்றியதைப் போல. சர்வதேச சமூகமும் ஐ.நா மனித உரிமைகள் ஆணையமும் தலையிட்டு விடுதலைப் புலிகளையும் பொதுமக்களையும் பாதுகாத்து. ஒரு தீர்வை எட்டும் என்று பிராபாகரனிடம் கூறினர். ஏப்ரல் மாதத்தில். பிராபகரன் போர் நிறுத்தத்திற்கு சம்மதித்த போதும் கூட. சரணடைந்த விடுதலைப் புலிப் போராளிகளும். அதிகாரிகளும் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்டனர். பொதுமக்கள் மீது குண்டுகள் போடப்பட்டது. பிரபாகரனிடம் உறுதி அளித்ததற்கு மாறாக ஐ.நா எதுவும் செய்யாமல் அமைதி காத்தது. போர் முடிந்த பிறகு இலங்கைக்கு சென்ற ஐ.நா பொதுச் செயலாளர் பான்-கி-மூன் போர் பகுதிகளை முப்பது நிமிடங்களே பார்வையிட்டார். தமிழர்கள் தங்க வைக்கப்பட்டிருந்த முகாம்கள் எவற்றிற்கும் அவர் செல்லவில்லை. போரில் வெறும் 7000 தமிழர்கள் தான் கொல்லப்பட்டனர் என்று குறைவான எண்ணிக்கையை கூறினார்.

மனித உரிமைகளுக்கான ஆணையர் நவிபிள்ளையும் பாதிக்கப்பட்ட தமிழர்கள் மீது அக்கறை காட்டவில்லை. தீவிர விடுதலைப் புலி எதிர்ப்பை வெளிப்படுத்திய நவிபிள்ளை. இலங்கை இராணுவத்தின் தீவிரவாத தாக்குதலால் பாதிக்கப்பட்ட 1,50,000 தமிழ் குடும்பங்களை சந்திக்கவும் இல்லை. 2013இல் இலங்கையில் நடந்த பத்திரிக்கையாளர் சந்திப்பில் பேசிய நவிபிள்ளை **"நான் ஒரு தென் ஆஃப்ரிக்கர் என்பதில் பெருமை கொள்கிறேன். விடுலைப் புலிகள் பல குற்றங்களைப் புரிந்த, பல உயிர்களை பறித்த ஒரு கொலைகார அமைப்பு. விடுதலைப் புலிகளால் 1999இல் கொல்லப்பட்ட பிரபல அரசியல்வாதியும், அறிஞருமான நீலம் திருச்செல்வத்தின் நினைவு நாள் விழாவில் பங்கேற்க நான் இலங்கை சென்றிருக்கிறேன். விடுதலைப் புலிகள் போன்ற ஒரு மனிதாபிமானற்ற இயக்கத்தை நினைவில் வைத்திருக்கக் கூடாது என்று நான் புலம் பெயர் ஈழத் தமிழர்களைக் கேட்டுக் கொள்கிறேன்"** என்று ஒரு தலைபட்சமாக கூறினார். மே 2. 2009 அன்று கூடிய ஐ.நா மனித உரிமைகள் ஆணையம் விடுதலைப் புலிகள் அமைப்பும், இலங்கை அரசும் மேற்கொண்ட போர் குற்றங்களை விசாரிக்க சிறப்புக் கூட்டத்தைக் கூட்டியது. அதில் இரண்டு தீர்மானங்களைப் பற்றி விவாதிக்கப்பட்டது ஒன்று. சர்வதேச விசாரணை. மற்றொரு சர்வதேசம் இலங்கையில் நடைபெறும் மீள்கட்டமைப்பு நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்பது. இரண்டாவது தீர்மானத்தை முன்மொழிந்தது இலங்கை அரசு. ஈழத் தமிழர்களை விடுதலைப் புலிகளின் பிடியில் இருந்து காப்பாற்றியதற்காக பாராட்டிய இந்த இரண்டாவது தீர்மானம், ஈழத்தமிழர்கள் தாக்குதலில் கொல்லப்பட்டது தொடர்பாகவோ, தமிழர்கள் தங்கவைக்கப்பட்டுள்ள முகாம்களுக்குச் செல்ல சர்வதேச அமைப்புகளுக்கான அனுமதி தொடர்பாகவோ எதுவும் பேசவில்லை. 70.000 ஈழத்தமிழர் கொல்லப்பட்டதற்கு காரணம் இலங்கை இராணுவத்தின் தாக்குதல் தான் என்று ஒத்துக் கொண்ட ஐ.நா அவை. இந்த இரண்டாவது தீர்மானத்தை மட்டும் நிறைவேற்றி முதல் தீர்மானத்தை கைவிட்டது. 2010 ஏப்ரலில். ஐ.நாவின் குழு கடைசி கட்ட போரை ஆய்வு செய்து. இலங்கை விசாரணை அறிக்கையை தாக்கல் செய்தது. பொது மக்கள் சாவிற்கு முழு காரணம் இலங்கை இராணுவத்தின் தாக்குதல் தான் என்றும், தடுப்பு முகாம்களில் நடைபெற்ற பாலியல் சித்திரவதைகள் குறித்தும். மனிதர்கள் வாழத் தகுதியற்ற சுகாதரமற்ற வாழ்விடங்கள் முகாம்களில் நிலவியதைப் பற்றியும் இந்த அறிக்கை குறிப்பிட்டது. இதனைத் தொடர்ந்து கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை மத்திய கிழக்கு நாடுகள். மத்திய அமெரிக்க நாடுகள். இந்தியா. சீனா. ரஷ்யா. அமெரிக்கா உட்பட பல நாடுகள் எதிர்த்தன.

## நட்பு பற்றிய பொன்மொழிகள்

**1.நண்பர்கள் என்ற சமுத்திரம் இது இதில் நீங்கள் நீந்திச் செல்லுங்கள் அதில் நீங்கள் மூழ்கிவிட மாட்டீர்கள்.. ஏனென்றால் நட்பு என்ற படகுகள் கை கொடுக்கும்.**

**2. நீ தேடி போகும் நட்பு அழகானது.. உன்னை தேடி வரும் நட்பு ஆழமானது.. உயிர் பிரிந்தாலும் நட்பு பிரியாது.**

**3. உறவற்ற நிலையிலே உன் உறவாய் வருவது நட்பு.. உயிரற்ற நிலையிலே உன் உயிராய் வருவதும் நட்பு.**

**4. நண்பனின் வார்த்தைகள் உன் தன்னம்பிக்கையின் மொழி.. நீ தோல்வி காணும் போதெல்லாம் உன்னை துவட்டி விடும்.**

**5. உலகம் உன்னை ஒதுக்கலாம் உறவுகள் உன்னை வெறுக்கலாம்.. உன் உயிரோடு கலந்த நட்பு மறந்தும் கூட உன்னை மறக்க நினைக்காது.**

**6. நாம் பிறக்கும் போது நம்மோடு பிறப்பதில்லை நட்பு.. நாம் இறந்த பிறகும் அதற்கு இறப்பு இல்லை அதுவே நட்பு.**

**7. உண்மையான நட்பு என்பது தாய் தந்தையின் மறுஉருவம்.. இறைவனும் தவமிருக்கும் வரம் அது.**

**8. உறவு இல்லை என்றாலும் உரிமை உண்டு கூட்டாஞ் சோற்றில் தொடங்குவது கூடவே நிற்கும் ஆயுள் வரை.**

**9. வான் முட்டும் பாரம் ஆயினும் அசாதாரணமாக சுமக்க முடியும் நட்பு மட்டும் உடன் இருந்தால்..**

# வடகிழக்கிணைந்த தமிழர் தாயகத்தை சிதைக்கும் நோக்கில் அன்றிலிருந்து இன்று வரை அரச இயந்திரம் செயற்படுகின்றது

கடந்தவார தொடர்ச்சி...

அதுவரை இலங்கையின் வரலாற்றில் நிகழ்ந்த கலவரங்களைப் பார்க்கிலும் பலமடங்கு பெரியளவில் அவ்வின அழித்தொழிப்பு நடவடிக்கையை சிங்கள அரசு தமிழ் மக்கள் மீது ஏவியது. தெற்கிலும் வடக்கிலும் தமிழர்கள் கொல்லப்பட்டனர். உடைமைகள் அழித் தொழிக்கப்பட்டன.

**கண்ணை மூடிக்கொண்ட உலக மானுடம்!**

தமிழர்களை நிர்வாணப்படுத்தி மேனியில் தீயைப் பற்றவைத்த கொடுமையும் தமிழர்களை எரியும் டயரில் உயிருடன் தூக்கி வீசிய அக்கிரமமும் உலகின் மானுடகுலத்தை எந்த வகையிலும் ஆத்திர மூட்டவில்லை. அந்தப் படுகொலைக்கு எதிராக உலகத்தின் எந்தவொரு நீதியமைப்பு களும் கவலை தெரிவிக்கவில்லை என்பதே துயர் தோய்ந்த வரலாறு. இத்தகைய பின்னணியில் 1980-ம் ஆண்டு மீண்டும் ஆட்சிக்கு வந்த இந்திரா காந்தி இனப்பிரச்சனையை இந்திய அனுகூலங்களுக்காக அணுக முனைந்தார்.

இந்திய வெகுஜன ஊடகத்திலும் அதைப் பிரசாரப்படுத்தினார். ஒருபுறம் போராளிகளுக்குப் பயிற்சியும் ஆயுத உதவியும் செய்தார். இன்னொரு புறம் இந்தியாவிற்கு எதிர்நிலையில் இருக்கும் இலங்கையின் வெளியுறவுக் கொள்கை சார்ந்து அந்த நாட்டு அரசுடன் சமரசப் பேச்சுகளில் ஈடுபட்டார். ஆயுத இயக்கம் ஒன்று தமிழீழ அரசைப் பெறுகிற பலத்தை அடைந்து விடாமலும் அது இந்தியாவின் சொல் கேட்கும் பிள்ளையாகவும் இருக்க வேண்டும் என்று இந்திரா விரும்பினார். இந்தத் தந்திரோபாயம் ஒரு குறிப்பிட்ட காலம்வரைக்கும் இலங்கையைக் கையாள்வதற்கு உதவியது.

இந்திரா காந்தியின் காலகட்டத்தில் இந்தியாவின் நோக்கு நிலையிலிருந்து இந்தப் பிரச்சனை அணுகப்பட்டிருந்தாலும் ஒரு விதமான உண்மைத்தன்மை அப்போது இருந்தது. சமஸ்டி அமைப்பு ரீதியாக தமிழர்களுக்குத் தீர்வு தரப்பட வேண்டுமென அவர் வலியுறுத்திய விடயங்கள் இதற்குச் சான்று. இலங்கையின் இனப் பிரச்சனையில் இந்தியாவின் தலையீட்டை ஈழத்தமிழ் மக்கள் நேரடியாக எதிர்பார்க்கத் தொடங்கியது அப்போதிருந்து தான். இந்திரா காந்தியின் மறைவும் அதன் பிறகான இந்திய அரசியல் மாற்றமும் தலைகீழ் மாற்றத்தை இலங்கையின் இனப்பிரச்னையில் ஏற்படுத்தின. ராஜீவ் காந்தி அதிகாரத்திற்கு வந்த பிறகு அவரது கொள்கை வகுப்புகளில் நிகழ்ந்த பல்வேறு தவறுகளில் ஜி.பார்த்தசாரதி போன்றதொரு மிக முக்கியக் கொள்கை வகுப்பாளரை இலங்கைப் பிரச்சனையில் இருந்து விலக்கியது முதன்மையானது.

இந்தியாவின் ஸ்திரத்தன்மையை ஜே.ஆர்.ஜெயவர்த்தனா போன்ற சிங்கள ராஜதந்திரியிடம் விட்டுக்கொடுத்து விடுதலைப் போராளிகளை மிரட்டி அவமதிக்கும் போக்கும் அதன் பிறகே அதிகரித்தது. இறுதியில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் தந்திரோபாயத்தின் சகதியில் ராஜீவ் அரசாங்கம் சிக்கித் திணறியது. இந்தியா முன்வைக்கும் எந்தவொரு திட்டத்தையும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா சர்வசாதாரணமாகத் தட்டிக்கழித்தார். திம்பு பேச்சு வார்த்தையின் தோல்வி எதிரொலியால் தமிழர்கள் மீது நிகழ்த்தப்பட்ட குண்டுத்தாக்குதல்கள் ஏராளம். பிறகு இந்திய அமைதிப்படைக் காலம் தொட்டு அது ஈழத்தில் நிகழ்த்திய படுகொலைவரைக்கும் எத்தனையோ தடவை எழுதப்பட்டவை.

**பகை மூட்டிய ஜெயவர்த்தனா!**

ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தனது காலத்தில் ராஜீவ் காந்தியையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் மோத விடுவதன் வாயிலாக இந்தியாவுக்கும் தமிழர்களுக்குமுள்ள நேசத்தை இல்லா தொழிக்க எண்ணினார். அதையே செய்தும் முடித்தார். அமைதிப்படை ஈழத்தில் நுழைந்த நாள்களில் பூக்கள் சொரிந்து வரவேற்ற அதே பெண்களையும் குழந்தைகளையும் பிறகான நாள்களில் கொன்றனர்.

மரியாதைக்குரிய இந்தியாவின் முன்னாள் பாதுகாப்புத்துறை அமைச்சர் ஜார்ஜ் பெர்ணான்டஸ் இந்திய அமைதிப்படையின் படுகொலையைக் கண்டித்துப் பேசியவர்களுள் ஒருவர். பிறகு அதன் பின்னணியில் நடந்தவை எல்லாம் துன்பியல் சம்பவங்களே. சமாதானத்துக்கான தேவதையாக மேற்குலகத்திடம் தன்னைக் காண்பித்த சந்திரிகா குமாரதுங்க தேர்தலில் வெற்றிபெற்று தமிழர்களை ஒடுக்கினார். தமிழர் களின் பள்ளிக்கூடங்கள் வணக்கஸ்தலங்களில் குண்டுகள் போட்டுக் கொன்றார்.

"பேச்சு வார்த்தையைப் புலிகள் விரும்பவில்லை" என்று சொல்லிக்கொண்டே மீண்டும் மீண்டும் படை நடவடிக்கையை முழுத்தீவிரத்துடன் நடத்தினார் அவர். ஆனால். அவரால் வெற்றிபெற இயலவில்லை. தமிழீழ விடுதலைப்புலிகளின் போர்த்திறனும் ராணுவ நடவடிக்கைகளும் அவர்களுக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுத்தன. நார்வேயின் மத்தியஸ்தத்தில் கொண்டுவரப்பட்ட அமைதி ஒப்பந்தமும் அதன் பிறகு நடந்த தேர்தலில் மகிந்த ராஜபக்சேவின் வருகையும் இலங்கை இனப்பிரச்னையின் புதிய காலகட்ட வரலாறு.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமானது தமிழர்களின் ஏகப் பிரதிநிதியாக தங்களை அறிவித்துக் கொண்டதற்கு அவர்களுக்கு மக்களின் ஆதரவு இருந்தமையும் ஒரு காரணம். தமிழர்கள் விரும்பும்தீர்வுத்திட்டம் குறித்து உரையாடுவதற்கும் எப்போதும் அவர்கள் தயாராகவே இருந்தனர். சர்வதேச சமூகம் பேச்சுவார்த்தைக்கு அழைத்த தருணங்களில் எல்லாம் அவர்கள் பேச்சு மேடைக்கு விரைந்தனர். சிங்கள ராஜதந்திரிகள் தமிழர்களுக்குப் பேச்சுவார்த்தை மேடையில் தீர்வைத் தந்துவிடுவார்கள். எனத் தமிழர்கள் யாரும் நம்பியது கிடையாது.

ஆனால் இந்தியா நம்பியது ஜப்பான் நம்பியது நோர்வே நம்பியது. ஆனால். புலிகளும் நம்பவில்லை அரசும் நம்பவில்லை. தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தனது மாவீரர் தின உரைகளில். இலங்கை அரசாங்கம் போரைத்தான் விரும்புகிறது. அதை மறைப்பதற்கு அமைதிப் பேச்சு வார்த்தைகளைக் குழப்பியிருப்பதாகக் கூறியதனை இங்கு எடுத்துக் காட்டாகக் கூறவேண்டும்.

**தொடங்கியது ராஜபக்சேக்கள் காலம்**

மகிந்த ராஜபக்சே ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற ஒரு வருடத்திற்குள்ளேயே மூர்க்கமான போரின் பொறிகள் தெரியத் தொடங்கின. அமைதியை ஓதிக்கொண்டு போர்விமானங்கள் எம் தலைகளில் குண்டுகள் சொரியும் நாள்கள் இருக்கின்றன என்பதை வன்னி நிச்சயம் செய்தது. **"பேரழிவும் படுகொலையும் நடக்கையில் உலகம் வேடிக்கை பார்க்காது"** என நம்பிய லட்சோப லட்ச மக்களைக் குண்டுகள் கொன்றன. பயங்கரவாதிகளுக்கான யுத்தத்தில் கொல்லப்படும் பச்சிளம் குழந்தையும் பயங்கரவாதிதான் என அரசு விளக்கமளித்தது. நூறாண்டுக் காலமாக அந்தத் தீவில் உரிமைக்காகப் போராடிய ஒரு செழுமை வாய்ந்த இனம் உப்பு நீரில் தனது ரத்தக் காயங்களோடு வீழ்ந்துகொண்டேயிருந்தது. இந்திரா காந்தியின் மறைவும் அதன் பிறகான இந்திய அரசியல் மாற்றமும் தலைகீழ் மாற்றத்தை இலங்கையின் இனப்பிரச்னையில் ஏற்படுத்தின.

ஆர்ப்பரிக்கும் இந்து சமுத்திரக் கடலின் கரையில் அலைகளின் நுரைகளில் குஞ்சு மீன்களைப்போலக் குழந்தைகளின் பிணங்கள் மிதந்தன. பல்லாயிரம் ஆண்டுக் காலத்துக்கு முன்னே தோன்றிய தமிழ்க்குடியின் வீரயுகம் நெஞ்சுபிளந்து மூச்சு எரிந்தது. சிங்கள அரசு சர்வதேச சமூகத்தை தனது உள்ளங்கைக்குள் வைத்துக் கொண்டு இந்த இனப்படுகொலையைத் திட்டமிட்டு நிகழ்த்தியது. தமிழர்கள் இடம்பெயர்ந்து போகவும் வழியற்ற கடலின் முன்னே கதியற்று நிற்கையில் படகோட்டியும் போராடி வீழ்ந்தான்.

சர்வதேசமும் உலகின் நீதியும் இலங்கையின் இனப்பிரச்னையின் வரலாற்றை அறிந்திருக்குமானால் அல்லது அவர்களுக்கு அரை மனசாட்சி இருக்குமானால் கூட ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழருக்கு நீதி என்பதை முன்னிறுத்த முடியாது. சர்வதேச ரீதியாக அணுகுமுறைகளை மேற்கொண்டால் இலங்கையின் வரலாற்றை எடுத்தால் அது மிக மோசமான சந்தர்ப்பங்களையே கொண்டிருக்கின்றது. இன விடுதலைக்கான தீர்வை பெற்றுக்கொள்வதாக இருந்தால் சமஷ்டி அல்லது தமிழீழமே முடிந்த முடிவாக இருக்கின்றது எனலாம்.

# விளையாட்டு

## ஸ்ரீ லங்கா றக்பியை முழு உறுப்பினராக ஆசிய றக்பி மீண்டும் நிலைநிறுத்தியது

ஸ்ரீ லங்கா றக்பி (இலங்கை றக்பி நிறுவனம்) மீது விதிக்கப்பட்டிருந்த தற்காலிகத் தடையை வியாழக்கிழமை (13) நீக்கிய ஆசிய றக்பி, ஸ்ரீ லங்கா றக்பிக்கு மீண்டும் பூரண உறுப்புரிமை வழங்குவதாக அறிவித்தது.

இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சினால் 2022ஆம் ஆண்டு ஏப்ரல் 1ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் இரத்துச் செய்யப்பட்டதை விளையாட்டுத்துறை அமைச்சு உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தியது.

இதனைக் கருத்தில் கொண்டே ஸ்ரீ லங்கா றக்பியை ஆசிய றக்பியின் முழு அங்கத்துவமாக மீண்டும் நிலைநிறுத்துவதற்கு ஆசிய றக்பி தீர்மானித்ததாக அதன் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தாய்லாந்தின் புக்கே நகரில் கடந்த வருடம் ஏப்ரல் 9ஆம் திகதியன்று நடைபெற்ற கூட்டத்தின் போது, ஸ்ரீ லங்கா றக்பியின் அங்கத்துவத்தை ஆசிய றக்பி நிறைவேற்றுக் குழு தற்காலிகமாக இடைநிறுத்தியது. அதனைத் தொடர்ந்து 2022 மே 1ஆம் திகதி அந்த தீர்மானத்தை ஆசிய றக்பி நிறைவேற்றுக் குழு ஏகமனதாக அங்கீகரித்து இலங்கை றக்பியின் உறுப்புரிமையை இடைநிறுத்தியது.

ஸ்ரீ லங்கா மீதான தற்காலிக தடை நீக்கம் குறித்து ஆசிய றக்பி தலைவர் காயிஸ் அல் தலாய் கருத்து வெளியிடுகையில், "சமத்துவம், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்பேற்றல் போன்ற கொள்கைகளை பேணுவதற்காக, ஆசிய றக்பியின் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்க, இலங்கை றக்பியின் அங்கத்துவத்தை இடைநிறுத்த நிறைவேற்றுக் குழு தீர்மானித்தது.

எனினும் இலங்கையின் இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு முன்னர் வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தலை வாபஸ் பெற்றதை கேட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன், இது ஸ்ரீ லங்கா றக்பி மீதான தற்காலிகத் தடையை நீக்குவதற்கு வழிவகுத்தது" என்றார்.

"ஆசிய றக்பி போட்டிகளுக்கு மீண்டும் இலங்கை அணிகளை வரவேற்பதற்கு நாங்கள் ஆவலுடன் காத்திருக்கிறோம்" எனவும் அவர் கூறினார்.

## CSK யின் 200 வது போட்டியின் தலைவர் தோனி!

ஐ.பி.எல். போட்டியில் வெற்றிகரமான தலைவர் தோனி. அவரது தலைமையில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி 4 முறை (2010, 2011, 2018, 2021) சாம்பியன் பட்டம் பெற்றுள்ளது. 5 தடவை (2008, 2012, 2013, 2015, 2019) 2 வது இடத்தை பிடித்தது. டோனி ஐ.பி.எல். போட்டியில் 237 ஆட்டங்களில் விளையாடி 5004 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கு 2 ஆண்டு தடை விதிக்கப்பட்ட போது அவர் ரைசிங் புனே சூப்பர் ஜெய்ன்ட்ஸ் அணிக்காக விளையாடினார். இதில் 2016 ஆம் ஆண்டு சீசனில் தோனி புனே அணிக்கு தலைவராக இருந்தார். அவர் ஐ.பி.எல்லில் 213 போட்டிக்கு தலைவராகவும் பணியாற்றி உள்ளார்.

இதில் 125 ஆட்டத்தில் வெற்றி கிடைத்துள்ளது. 87 போட்டியில் தோல்வி ஏற்பட்டது. ஒரு ஆட்டம் முடிவு இல்லை.

ஐ.பி.எல். போட்டியில் சேப்பாக்கம் மைதானததில் நடைபெறும் ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் - ராஜஸ்தான் ராயல்ஸ் அணிகள் மோதுகின்றன.

இந்த போட்டி டோனி சி.எஸ்.கே.அணிக்கு கேப்டனாக பணியாற்றும் 200 வது ஆட்டமாகும். டோனி தலைமையில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி 199 போட்டியில் விளையாடி 120 இல் வெற்றி பெற்றது. 78 ஆட்டத்தில் தோற்றது. ஒரு போட்டி முடிவு இல்லை.

இதில் ராயல் சேலஞ்சர் பெங்களூர் அணிக்காகதான் அதிகபட்சமாக 18 ஆட்டங்களில் வெற்றி பெற்றார். அதற்கு அடுத்தபடியாக கொல்கத்தா நைட் ரைடர்சுக்கு எதிராக 17 இல் வெற்றி கிடைத்தது. டெல்லி கேப்பிடல்சுக்கு எதிராக 16 போட்டியிலும், ராஜஸ்தான், பஞ்சாப்புக்கு எதிராக தலா 15 போட்டியிலும் வெற்றி பெற்றார்.




## அஷ்வின் வழங்கும் கோடைகால சிறப்பு பயிற்சி முகாம்

துடுப்பாட்ட வீரரும், ஆர்வலருமான ஆதித்யா ரவி உருவாக்கிய "22 யார்ட்ஸ்" எனும் அமைப்பு, இளம் துடுப்பாட்ட வீரர்களின் திறமையைக் கண்டறிந்து மேம்படுத்தும் வகையிலும், லீக் போட்டிகளில் விளையாடுவதற்கான வாய்ப்பை உருவாக்குவதற்கும், ஏப்ரல் 14, 15, 16 ஆகிய மூன்று திகதிகளில் சிறப்பு பயிற்சி முகாமை சென்னையில் நடத்துகிறது. இதனை இந்தியாவின் அஷ்வின் ஒருங்கிணைக்கிறார்.

இது தொடர்பாக 22 யார்ட்ஸ் அமைப்பு வெளியிட்டிருக்கும் செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது... "தமிழகம் மற்றும் சர்வதேச நாடுகளில் உள்ள திறமையான கிரிக்கெட் வீரர்களை அங்கீகரிக்கும் வகையிலும், திறமைகளை அடையாளம் கண்டு அவர்களுக்கு வாய்ப்பு வழங்கும் தளமாகவும் 22 யார்ட்ஸ் அமைந்திருக்கிறது. இந்த அமைப்பிற்கு சொந்தமாக ஐந்துக்கும் மேற்பட்ட துடுப்பாட்ட மைதானங்கள் உள்ளன. இதில் இரண்டு மைதானங்கள் பிளட் லைட் எனப்படும் மின்னொளியில் விளையாடுவதற்கு ஏற்ற மைதானம் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் சென்னையில் புகழ்பெற்ற எம் ஏ சிதம்பரம் மைதானத்திற்கு அருகே தனித்துவமான வசதிகளுடன் அமைந்திருக்கிறது. இந்த அமைப்பில் பதிவு செய்யும் அனைத்து வீரர்களின் தகவல்களை துல்லியமாக கையாள பிரத்தியேக செயலி ஒன்றையும் உருவாக்கியுள்ளது. இது அவர்களின் திறமைகளை கண்டறிந்து சரியான வாய்ப்புகளை வழங்கவும் வழிவகுக்கிறது. இந்தியாவின் ஆல் கவுண்டர் அஷ்வின் கடந்த நான்கு ஐந்து வருடங்களாக எங்களின் முன்னேற்றத்தை அவதானித்து, தொடர்ந்து ஆலோசனை அளித்து வருகிறார். அவருடைய பணி நெருக்கடியிலும் நேரம் ஒதுக்கி வீரர்களுக்கு பயிற்சியும், ஆலோசனையும் அளித்து வருகிறார். ப்ரீத்தி அஸ்வினின் திறமையான தலைமையில் "22 யார்ட்ஸ் ஜென் நெக்ஸ்ட்" மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது.


அஷ்வினின் ஆதரவுடன் பிரிமியர் லீக்குகளிலும் கலந்து கொள்வதற்கான வாய்ப்புகள் உருவாக்கித் தரப்படுகிறது. பான் இந்திய அளவில் விரிவுபடுத்தும் வகையில், இந்திய வம்சாவளி வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மற்றும் தீவிர கிரிக்கெட் ரசிகர்களும் 22 யார்ட்ஸில் முதலீடு செய்துள்ளனர். எங்களுடைய கோடைகால பயிற்சி முகாம் ஏப்ரல் 14, 15, 16 ஆகிய திகதிகளில் சென்னையில் நடைபெறுகிறது. இதில் பங்கு பற்றி இளம் வீரர்கள் தங்களது திறமையை வெளிப்படுத்தலாம். மேம்படுத்தலாம்"" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரக்பி தலைமையகத்திற்கு சீல் வைப்பு!

டொரிங்டனில் உள்ள ரக்பி ஒன்றிய தலைமையகம் விளையாட்டு அமைச்சக அதிகாரிகளால் சீல் வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 12 ஆம் திகதி இலங்கை ரக்பி ஒன்றியம் கலைக்கப்பட்டு விளையாட்டுத்துறை அமைச்சரினால் ஸ்திரப்படுத்தல் குழுவொன்று நியமிக்கப்பட்ட காரணத்தால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

விளையாட்டு அமைச்சின் அதிகாரிகள் தமக்கு அறிவிக்காமல் சீல் வைத்துள்ளதாக ரக்பி ஒன்றிய அதிகாரிகள் குற்றம் சாட்டுகின்றனர்.






# உலக வலம்

## உலகின் மிகவும் குள்ளமான நாய்

உலகின் மிகவும் குள்ளமான நாய் என்ற கின்னஸ் சாதனையை 'பேர்ல்' என்ற 2-ஆவது நாய் படைத்து உள்ளது. சிவாஹூவா என்ற இனத்தை சேர்ந்த இந்த பெண் நாய் கடந்த 2020ஆம் ஆண்டு செப்டெம்பர் 1ஆம் திகதி பிறந்துள்ளது. 9.14 சென்டி மீட்டர் உயரமும், 12.7 சென்டி மீட்டர் நீளமும் கொண்ட இந்த நாய் டி.வி. ரிமோட்டை விட சிறியதாக உள்ளது. இந்த நாய் டொலர் நோட்டின் நீளம் தான் இருக்கிறது. உலகின் மிக குட்டையான நாயான பேர்லுக்கு வணக்கம் சொல்லுங்கள் என ஜிடபிள்யுஆர் என்பவர் கடந்த 10 ஆம் திகதி டுவிட்டரில் பேர்ல் நாயின் புகைப்படத்தை பதிவிட்டார். அப்போது முதலே இந்த நாய் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. உலக கின்னஸ் ரெக்கார்ட் வெளியிட்ட தகவலின் படி இதற்கு முன்னர் உலகின் மிகச்சிறிய நாயாக அங்கீகரிக்கப்பட்ட மிராக்கிள் மில்லியின் வம்சாவளியில் வந்த பெண் நாய் தான் பேர்ல். இதற்கு முன்பு இந்த பட்டம் மிராக்கிள் மில்லியிடம் இருந்தது.

இந்த நிலையில் தான் பேர்ல் உலகின் குள்ளமான நாய் என்ற சாதனையை படைத்துள்ளது. இதனை உலக கின்னஸ் ரெக்கார்ட் அமைப்பும் அங்கீகரித்து உள்ளது. பேர்ல் நாயை சமீபத்தில் அதன் உரிமையாளர் வனேசா சென்டரால் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் அறிமுகப்படுத்தினார். அதை பார்த்ததுமே பார்வையாளர்கள் மிகப்பெரிய அளவில் கைதட்டி உற்சாகப்படுத்தினர்.



## இந்தோனேஷியாவின் ஜாவா தீவில் நிலநடுக்கம்!

இந்தோனேஷியாவின் ஜாவா தீவில் உள்ளூர் நேரப்படி அன்று (14) மாலை 4.55 மணியளவில் ரிக்டர் அளவுகோலில் 7 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கத்தால் உயிர் சேதம் எதுவும் ஏற்படவில்லை என்றும், நிலநடுக்கத்தால் சுனாமி ஏற்படும் அபாயம் இல்லை என்றும் இந்தோனேஷிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## ஜப்பான் பிரதமர் கலந்துகொண்ட கூட்டத்தில் குண்டுவீச்சு

ஜப்பான் பிரதமர் கலந்துகொண்ட நிகழ்வில் குண்டுவீசப்பட்டதாகவும் எனினும் பிரதமர் பாதுகாப்பாக அப்பகுதியிலிருந்து அகற்றப்பட்டார் எனவும் ஜப்பான் ஊடகங்கள் தெரிவித்துள்ளன. மேற்கு ஜப்பானில் பிரதமர் பியுமோ கிசிடா கலந்து கொண்ட கூட்டத்தில் சந்தேகநபர் ஒருவர் அவரை இலக்குவைத்து புகைக்குண்டொன்றை வீசியுள்ளார்

எனினும் பிரதமர் காயங்களின்றி தப்பியுள்ளார்.

பாரியசத்தமொன்று கேட்டது பிரதமர் தன்னை பாதுகாத்துக்கொள்ளும் விதத்தில் உடனடியாக செயற்பட்டார் சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன. கடந்த வருடம் ஜூன் மாதம் முன்னாள் பிரதமர் சின்சோ அபே சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் ஜப்பானில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ள நிலையிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சின்சோ அபேயின் படுகொலையை தொடர்ந்து அரசியல்வாதிகளிற்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து ஜப்பான் ஆராய்ந்து வருகின்றது. கிசிடா உரையாற்றஆரம்பித்த வேளையே புகைக்குண்டுவீச்சு இடம்பெற்றுள்ளது. பொலிஸார் நபர் ஒருவரை தரையில் வீழ்த்தி மடக்கி பிடிப்பதையும் பொதுமக்கள் சிதறுண்டு ஓடுவதையும் காண்பிக்கும் படங்கள் வெளியாகியுள்ளன.



## 40 வயதில் 44 குழந்தைகளை பெற்றெடுத்த பெண்





ஆப்பிரிக்க நாடான உகாண்டாவை சேர்ந்தவர் மரியம் நபடான்சி. இவருக்கு இளம் வயதிலேயே திருமணமாகி உள்ளது. அதாவது மரியத்திற்கு 12 வயது இருக்கும் போதே அவரது பெற்றோர் திருமணம் செய்து வைத்துள்ளனர். இதனால் அவர் தனது 13 ஆவது வயதிலேயே கர்ப்பமானார். அவருக்கு முதலில் இரட்டை குழந்தை பிறந்துள்ளது. இவர் தான் உலகின் மிகவும் ஸ்பெர்டைல் பெண்ணாக கருதப்படுகிறார்.

அதன் பின்னர் தொடர்ந்து குழந்தைகள் பெற்றெடுத்த மரியத்திற்கு தற்போது 40 வயது ஆகிறது. இதுவரை அவருக்கு 44 குழந்தைகள் பிறந்துள்ளது. இதில் 4 முறை இரட்டை குழந்தைகளும், ஒரே பிரசவத்தில் 3 குழந்தைகள் என்பது 5 முறை, ஒரே பிரசவத்தில் 5 குழந்தைகள் 5 முறை பிறந்துள்ளது. ஒரே ஒரு முறை மட்டுமே அவருக்கு ஒரு குழந்தை பிறந்துள்ளது. அவருக்கு இருக்கும் ஹைப்பர் ஓவுலேட் என்ற நிலையே இதற்கு காரணம் என கூறப்படுகிறது. அவர் மொத்தம் 44 குழந்தைகளை பெற்றெடுத்த நிலையில் அதில் 6 குழந்தைகள் உயிரிழந்து விட்டது.

இப்போது 20 சிறுவர்களும், 18 சிறுமிகளும் மாத்திரமே இருக்கிறார்கள். மரியத்தின் சொத்துக்களை எல்லாம் எடுத்து கொண்டு அவரது கணவர் குடும்பத்தை விட்டு ஓடி விட்டார். இதனால் மரியம் தனது குழந்தைகளை வளர்க்க கஷ்டப்பட்டு வருகிறார்.

## டிட்டராக மாறிய ட்விட்டர்!




கடந்த ஆண்டு ட்விட்டர் நிறுவனத்தை வாங்கிய எலான் மஸ்க் அங்கு பணியாற்றிய 50 சதவீதக்கு மேற்பட்டவர்களை நீக்கினார்.

இது தவிர, ட்விட்டரின் நீல நிறக் குருவி லோகோவுக்குப் பதிலாக, டாக்காயின் கிரிப்டோ கரன்ஸி நிறுவனத்தின் நாய் லோகோவை மாற்றினார். இது விமர்சிக்கப்பட்டதால் மீண்டும் நீல நிறக் குருவியை ட்விட்டர் லோகோவாக அவர் மாற்றினார். தற்போது அமெரிக்காவில் சான் பிரான்ஸிஸ்கோவில் உள்ள ட்விட்டர் நிறுவனத்தின் தலைமை அலுவலக கட்டிடத்தில் பொறிக்கப்பட்டுள்ள ட்விட்டர் பெயர்ப் பலகையில் 'டபிள்யூ' எழுத்தை மறைத்துள்ளார். அதாவது **Twitter** என்றிருந்த பெயர்ப்பலகையில் **w**-வுக்கு வண்ணம் பூசியுள்ளார். இதனால், அது டிட்டர் (**titter**) என்று காட்சி அளிக்கிறது.

## பேயை திருமணம் செய்து கொண்ட பெண்

பேயை காதலித்து திருமணம் செய்து கொண்ட இங்கிலாந்தை சேர்ந்த பெண் தற்போது விவாகரத்து வேண்டும் எனக் கூறிவருகிறார். ரொக்கர் ப்ரொகார்டி என்ற பெண் கடந்த ஆண்டு ஹாலோவீன் கொண்டாட்டத்தின் போது எட்வர்டோ என்ற ஆவியை திருமணம் செய்து கொண்டார். இவர்களின் திருமணம் ஒரு பாழடைந்த சர்ச்சில் நடைப்பெற்றது. பாடகியான ப்ரொகார்டி, தனது கணவரை சந்தித்த 5 மாதங்களிலேயே காதலித்து திருமணம் செய்து கொண்டார். இந்நிலையில், தற்போது அப்பெண் விவாகரத்து கோரியுள்ளார்.

திருமணத்துக்கு பிறகு தனது கணவர் தன் வாழ்க்கையை நரகமாக மாற்றிவிட்டார் எனவும், பிரிந்து சென்ற பிறகும் கூட தன்னையே பின் தொடர்ந்து வந்து தொல்லை செய்வதாகவும் கூறியுள்ளார். இதனால் பெரும் சங்கடத்தில் உள்ள ப்ரொகார்டி, பேய் ஓட்டுபவர்களின் உதவியை நாடியுள்ளார்.

இவர்களது திருமணத்திற்கு உயிருடன் இருப்பவர்கள், இறந்தவர்கள் என அனைவருக்கும் அழைப்பிதழ் கொடுக்கப்பட்டது. மறைந்த பொப் பாடகி மர்லின் மன்றோ, இங்கிலாந்து அரசர் ஹென்ரி போன்றோர் தங்களது திருமணத்தில் கலந்துகொண்டதாக ப்ரொகார்டி தெரிவித்தார். தன் கணவரை சந்திக்கும் முன்பு வரை பேய்கள் போன்றவற்றின் மீது ப்ரொகார்டிக்கு நம்பிக்கையே இருந்ததில்லையாம்.

திருமணத்தன்றே தன் கணவரின் சில செயல்பாடுகள் தனக்கு பிடிக்கவில்லை எனக் கூறிய அப்பெண், ஹனிமூன் சென்ற போது தான் அவர் எல்லை மீறி நடந்துகொண்டதாக கூறியுள்ளார் . கணவர் மீது கொண்ட காதலால் திருமணத்தை தக்கவைக்க முயற்சித்திருக்கிறார். எனினும், அவரது நடவடிக்கைகள் தொடர்ந்து தன்னை வேதனைக்குள்ளாக்கியதால், தற்போது விவாகரத்து செய்யப்போவதாக கூறியுள்ளார். பிரிந்து சென்றதால், குழந்தைகள் அழுவது போல, நடு இரவில் அலறுவது போன்ற சத்தங்களை எழுப்பி தன்னை துன்புறுத்திவருவதாக கூறியிருக்கிறார்.

























இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 16.04.2023 அன்று வெளியிடப்பட்டது.